# சிந்தனைச் சுடர்கள்



அ. பெருமாள்
முன்னாள் பேராசிரியர்
விஸ்வபாரதி, சாந்தி நிகேதன்

**சிந்தனைச் சுடர்கள்**

**அ. பெருமாள்**
*ஓவியப் பேராசிரியர்*
*விஸ்வபாரதி, சாந்தி நிகேதன்*

சிந்தனைச் சுடர்கள்
அ. பெருமாள்
*ஓவியப் பேராசிரியர்*
*விஸ்வபாரதி, சாந்தி நிகேதன்*

கதிர் பதிப்பகம்
D-158, சம்பந்தர் தெரு,
அழகப்ப நகர், மதுரை - 625 003.

முதற்பதிப்பு : அக்டோபர் 1999
Price Rs. 25/
© Prof. A. Perumal, 1999 All Rights Reserved.

Printed by :
THAI Printers
18-E, Lakshmanapuram,
Dindigul - 624 001.
Ph: 431007

**முன்னுரை**

நான் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன். பள்ளிப் படிப்பை அருகிலுள்ள உத்தமபாளையம் உயர்நிலைப் பள்ளியில் தினம் நடந்து சென்று 18ம் வயதில் முடித்தேன். உடனே வங்கத்தில் கவிகுரு ரவீந்திரநாத் டாகூரின் சாந்தி நிகேனத்தில் விஸ்வபாரதி பல்கலைக் கழகத்தில் ஓவியக்கலைப் பயிற்சிக்காக 1933ம் ஆண்டு போய்ச் சேர்ந்தேன்.

சாந்தி நிகேதனம் கல்கத்தாவிலிருந்து வடக்கே நூறு மைல் (150 கி.மீ.) தூரத்தில் அமைந்துள்ள ஆசிரமப் பல்கலைக்கழகம் சாந்தி நிகேதனத்தைச் சுற்றிலும் கிராமங்கள்தான். ஆகையால் ஓவியம் பயிலும் போதும், கற்பிக்கும் போதும், இயற்கையான சுற்றுப்புறச் சூழலும் விவசாயத் தொழிலில் ஈடுபாடு கொண்ட மக்களின் வாழ்க்கையும் என் கருத்துக்கள் உருவாவதற்குக் காரணமாயிருந்தன. கவிகுரு டாகூரை நேரில் தரிசித்து அவருடைய இயற்கை ரசனையை சொந்தத்தில் பயின்று வளரும் பாக்கியமும் கிடைத்தது. என் கட்டுரைகள் பெரும்பாலும் சாதாரண ஏழை உழைப்பாளிகள் பக்கம் சார்ந்தவைகளாயிருப்பதில் ஆச்சர்யமில்லை.

சாந்தி நிகேதனத்தில் என் ஐந்தாண்டு கலைப்பயிற்சி முடிந்தபின் அங்கேயே ஆசிரியனாகச் சேர்ந்தேன். என் பேராசிரியர் ஓவியர் குரு நந்தலால் போஸ் அவர்கள் தாகூருக்கும் காந்தியடிகளுக்கும் பிரியமானவர். ஆகையால் என் சிந்தனைகளும் - இயற்கை ரசனை, மக்கள் சேவை - இவ்விரண்டின் அடிப்படையில் - அழகும் அன்பும் - சேர்ந்த வாழ்க்கை லட்சியத்தை பிரதிபலிப்பவைகளாகவே உருப்பெற்றன. என் கட்டுரைகள் நாட்டின் இன்றைய சூழ்நிலையில் மிக்க வருத்தத்தைத் தெரிவிக்கும் புலம்பல்களாகத்தான் தோன்றும்.

இந்நூல் வெளியிடுவதற்கு உதவிய திண்டுக்கல் அருள் நிதி M.K.தாமோதரன், மனவளக்கலைப் பேராசிரியர் அவர்களுக்கும், இதற்கு பல பல்கலைக் கழக பணிகளுக்கிடையேயும் தகுந்த முறையில் அணிந்துரை எழுதிக் கொடுத்த காந்திகிராமப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் N.மார்க்கண்டன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைச் சிறப்பாக அச்சேற்றிய திண்டுக்கல் தாய் ஆப்செட் பிரிண்டர்ஸ் அவர்களுக்கு என் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,<br>**அ. பெருமாள்.**

**அணிந்துரை**

சாந்தி நிகேதன் உருவாக்கிய மதிப்பிற்கும், அன்பிற்கும் உரிய திரு. அ. பெருமாள் அண்ணா அவர்கள் ஒரு மிகச்சிறந்த சிந்தனையாளர், கலைஞர், பிரபஞ்ச லயத்தில் தன்னை மறந்து விடுகின்ற ஒரு மிகச்சிறந்த மனிதர். பறக்கச் சிந்திப்பதில் ஈடு இணையற்றவராக எனக்குத் தோன்றுகிறது. சிந்தனைச் சுடரின் பல சுடர்களை மிக இரசித்துப் படித்தேன். இந்நூலை ஆழ்ந்து படிக்கின்ற இளம் ஆண்கள், பெண்கள், பெரியவர்கள் அனைவருமே இன்றைய மனித சமுதாயத்தின் நிறை, குறைகளை நன்கு புரிந்து கொள்ள முடியும். மேலும் அவ்வாறு ஆழ்ந்து படிக்கின்றனவர்களின் மிகப்பலர் மிகச் சிறந்த குடிமக்களாக விளங்கி தேசிய, சர்வதேச அளவில் சிறப்பாக பணியாற்ற முடியும்.

வாழ்க்கைத் தத்துவத்தை அவருக்கே உரிய முறையில் எளிமையாக விளக்குகிறார். மனிதன் தன் முனைப்பையும், மரணத்தையும் எந்தளவுக்கு வெல்ல முடியும், எந்தளவுக்கு கடினமானது என்பதையும் விளக்குகிறார். சர்வோதய தத்துவம் அவருடைய ஒவ்வொரு எழுத்திலும் பிரதிபலிக்கக் காண்கிறோம். பெரும்புயல் என்ற கட்டுரையையும், சீர்திருத்த இயக்கங்கள் என்ற கட்டுரையையும் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. கல்வி, கல்வி முறை, அரசியல் அமைப்பு முறை இவைகளில் மாறுதல் ஏற்பட்டாலொழிய மிகப் பெரிய சமுதாய மாற்றத்தை இந்தியாவில் காண முடியாது என்பதையும் இந்தியா உலகிற்கு வழிகாட்ட முடியாது என்பதையும் சுட்டிக் காட்டுகிறார். காந்திய வழி ஒன்றுதான் நம்மை முழு மனிதனாக உருவாக்குவதுடன், இன்றைய உலகப் பிரச்சனைகளுக்கு தீர்வாக இருக்க முடியும் என்பதை சுட்டிக் காட்டுகிறார். இன்றைக்கு காந்தியம், சர்வோதயம், சீர்திருத்தம் என்ற போர்வையில் நாம் போடும் வேடத்தை வெளிப்படையாக எடுத்துச் சொல்வதில் அவருக்கு ஒரு சிறிதும் தயக்கமில்லை என்பதனை என்னால் உணர முடிகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக அவரை ஓரளவு நெருங்கிப் பழகி நன்கு அறிந்திருக்கிறேன். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமல் முன்மாதிரியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார். நாம் வாழும் இந்த பூமியின் இயற்கை படைப்புக்களை ரசிப்பதற்கு நமக்கெல்லாம் அவருடைய எழுத்துக்கள் தூண்டுகோலாக இருக்கின்றன.

பதினெட்டு வயதில் பெருமாள் அண்ணா அவர்கள் தமிழகத்தை விட்டு சாந்தி நிகேதன் ஆசிரமம் சென்றார்கள். தாகூர் சாந்தி நிகேதனில் வாழ்ந்து வழிகாட்டிக் கொண்டிருந்தார். நந்தலால் போஸ் போன்ற கலைஞர்கள் ஆசிரியர்களாக இருந்தார்கள். உலகம் முழுவதும் இருந்து மாணவர்கள் அங்கு வந்து கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள். இயற்கையோடு இணைந்து எளிய வாழ்க்கையை ஆசிரியர்கள், மாணவர்களோடு நடத்திக் கொண்டிருந்தார்கள். அத்தகைய சூழலில் மாணவராகவும், ஆசிரியராகவும் தன் வாழ்வில் பெரும் பகுதியை கழித்து விட்டு நிறைந்த அனுபவம் பெற்று சாந்தி நிகேதன் பணியில் ஓய்வு பெற்று தமிழகம் திரும்பினார்கள். சி.எப். ஆண்ட்ரூஸ், காந்தியடிகள் போன்ற மிகச் சிறந்த சான்றோர்கள் தாகூரோடு கொண்டிருந்த உறவைக் கண்டு, ரசித்து மகிழ்ந்தவர் பெருமாள் அண்ணா அவர்கள். அவர்களுடைய வாழ்க்கை முறையை அவருக்கு கல்வி போதனையாக இருக்கிறது என்பதை அவரோடு உரையாடும் போதெல்லாம் இந்த சிந்தனைச் சுடர்கள் என்ற நூல் நமக்குத் தெரிந்த சிந்தனையையும், செயலாக்கத்தையும் தருகின்ற ஒன்றாக அமைந்திருக்கின்றது என்பதே என் கருத்து.

இதனை நன்கு விபரம் தெரிந்த எல்லா இளம் ஆண்களும், பெண்களும் படிக்க வேண்டும். எல்லா உயர்கல்வி நிலையங்களிலும் மாணவர்கள் இதைப் படிக்க வேண்டும். நம்முடைய மக்கள் பிரதிநிதிகளும் இதனைப் படிக்க வேண்டும். இதன் மூலமாக எதிர் காலத்தில் எல்லா நிலைகளிலும் புதிய தலைமை உருவாக முடியும் என்று நம்புகிறேன். இந்த

சிந்தனைச் சுடர்கள் நூலின் ஆசிரியர் திரு. பெருமாள் அண்ணா அவர்களுக்கு இத்தகைய சிறந்த நூலை உருவாக்கியதற்கு என்னுடைய இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காந்திகிராமப் பல்கலைக்கழகம்,
காந்திகிராமம், திண்டுக்கல்.

**Dr. N. மார்க்கண்டன்**
துணைவேந்தர்.

## பொருளடக்கம்


1. உடலும் மனமும்
2. மனதை அறிதல்
3. விதியும், மதியும்
4. ஆன்மீக வாழ்க்கை
5. வாழ்க்கைத் தத்துவம்
6. குடும்ப அமைதிக்கு வழிகள்
7. கடவுள் உண்டா?
8. தன்முனைப்பு
9. மரணம்
10. பெரும் புயல்
11. சத்தியம்
12. வாலைப் பிடித்தது போல
13. சர்வோதயமும் சிக்கனமும்
14. சீர்த்திருத்த இயக்கங்கள்
15. பேசிக்கொண்டே இருப்போம்
16. இது வியாபார யுகம்
17. ஊர் வாய்
18. நிதானம் வேண்டும்
19. கண்ணுக்குப் புலப்படாத கட்டுகள்
20. சாமியைக் காணவில்லை
21. அறிவுவெள்ளம் கரைபுரண்டுதான் ஓடுகிறது...ஆனால் .?
22. தூய்மை இயக்கங்கள்
23. நேர்பாதையைத் தவறவிட்ட அபூர்வ மனிதர்கள்
24. பகல் திருடனும், இரவுத் திருடனும்
25. குடும்ப கௌரவம்
26. இந்தியாவில் புத்தமதத்தின் தோற்றமும், மறைவும்

27. வீணில் உண்டு களித்திருப்பவர்கள் யார்?
28. மனிதனின் பாக்யமும், துர்பாக்யமும்
29. தமிழர்களின் தனிச்சிறப்பா?
30. உடல் மன வளர்ச்சியும், தளர்ச்சியும்
31. வறுமை
32. சடங்குகளும், சம்பிரதாயங்களும்
33. பொருத்தமான அளவு வேண்டும்
34. எதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும்?
35. மனிதர்களாக உயர்வோம்
36. காரணங்கள் ஆயிரம் உண்டு
37. ஒளியும், ஒலியும்
38. முளையில் கட்டப்பட்ட ஆடு, மாடுகள்
39. இயற்கையும், கலப்படமும்
40. ஒருவருக்கு எது தாய்மொழி?
41. பிஞ்சில் பழுக்க வைக்கும் கல்வி
42. தாயக ஓவியம்
43. மாயா என்றால் என்ன?
44. பிரபஞ்சத்தின் வெளியும், காலமும்
நூலாசிரியர் பற்றி

**ஆசிரியரின் பிற நூல்கள்**

1. சிந்தனை மலர்கள்
2. சிந்தனைக் கதிர்கள்
3. சீன - ஜப்பானிய யாளியின் ஓவியக்கலைத் தத்துவம் (மொழிபெயர்ப்பு)
4. தேனீர்க்கலை (மொழிபெயர்ப்பு)
5. ஓவியக்கலை - நந்தலால் போஸ் (மொழிபெயர்ப்பு)

**கிடைக்குமிடம் :**

கதிர் பதிப்பகம்
D-158, சம்பந்தர் தெரு,
அழகப்ப நகர்,
மதுரை - 625 003.

## 1. உடலும் மனமும்

உடல் இல்லாமல் மனம் இல்லை. மனம் இல்லாமல் உடலும் இல்லை. உலக வாழ்க்கையை அனுபவிப்பது மனிதனின் உடலா அல்லது அவன் மனமா? இரண்டும் ஒன்றாகத்தான் அனுபவிக்க முடியும். என்றாலும் சிலருடைய வாழ்க்கையில் உடல் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலேயே அதிக கவனம், நேரம் செலுத்த வேண்டியிருப்பதால் அவர்களுடைய மனம் உடலை அதிகமாய்ச் சார்ந்து செயல்படுகிறது என்று சொல்லலாம். உடலின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வழிகளில் மனம் அதிக கவனம் செலுத்தும்போது அந்த மனதை உடலைச் சார்ந்த மனமென்று சொல்லலாம். உடலைச் சார்ந்து மனம் செயல்படுவது எல்லா உயிரினங்களுக்கும் பொதுவான இயல்பாகும். மனிதனைத் தவிர மற்ற உயிரினங்கள் மனதால் செயல்படுவது இல்லை. இயற்கை இயல்புகளாலேயே செயல்படுகின்றன என்றுதான் வழக்கமாகச் சொல்கிறோம்.

மனிதனுக்குத்தான் மனம் இருக்கிறது. மனிதன் மட்டுமே மனதைப் பயன்படுத்தி அதாவது சிந்தித்து செயல்படுகிறான் என்று சொல்கிறோம். நாம் மனிதர்கள் ஆகையால் நாம் மட்டுமே சிந்தித்து செயல்படுகிறோம் என்று சொல்கிறோம். மற்ற உயிரினங்கள் மனதில் என்ன இருக்கிறது, சிந்திக்கும் சக்தி அவைகளுக்கு உண்டா என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம். இதுவரை ஆராய்ச்சி நடத்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்து கூறுவது, மற்ற உயிரினங்கள் எறும்பு முதல் யானை வரை, பறவைகள் உட்பட தத்தம் வாழ்க்கைக்குத் தேவையான அளவுதான் இயல்பாக செயல்படுகின்றன. இந்த இயந்திர யுகத்து மனிதன்தான், சிந்திப்பவர்கள் நிந்திக்கும் அளவு அநாவசியமான, தேவையற்ற காரியங்களில் ஈடுபடுகிறான். தன் இனத்தையே அநாவசியமாகக் கொன்று குவிக்கிறான். மனிதன் உணவுக்காக மட்டும் வாழவில்லை (Man doesnot live by bread alone) என்று சொல்லிக்கொண்டு உடலுக்காகவே உடல் சௌகர்யங்களைத் தேவைக்கு மேல் பெருக்கிக் கொண்டே குரங்குச் சிந்தனையை, குரங்குப் புத்தியை மட்டும் (Curosity) வளர்த்துக் கொண்டு போகிறானே தவிர, மனதின் நுண்ணிய ஆற்றல்களுக்கும், ஆழ்ந்த ஆக்கபூர்வமான உயர்ந்த சிந்தனைகளுக்கும் இடம் கொடாமல் சிறுபிள்ளைத் தனமான காரியங்களில் ஈடுபடுகிறான்.

இயந்திரங்களைக் கண்டுபிடித்து வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொண்டு போவதையே ஒரு பெரிய சாதனையாகக் கருதுகிறான். ஆராய்ச்சிகளின் மூலம் இயற்கையை வென்று விட்டதாகக் கருதுகிறான். இதுதான் சிறுபிள்ளைத்தனம். மேற்கத்திய நாடுகளில் வெள்ளைக்காரர்கள் இன்னும் இளைஞர்களாகத்தான் இருக்கிறார்கள். பக்குவமான வயதை அவர்கள் இன்னும் அடையவில்லை.

## 2. மனதை அறிதல்

ஒருவர் யோகப் பயிற்சி, தியானம் மூலமாகத் தம் மனதைக் கட்டுப்படுத்தி விட்டதாகச் சொன்னால் நீங்கள் அதை நம்புவீர்களா? உடல் எவ்வாறு எல்லாருக்கும் ஒரே தன்மையுடையதாக உள்ளதோ, அவ்வாறேதான் உள்ளமும் எல்லாருக்கும் ஒரே மாதிரி தன்மை உடையதாகத்தான் அமைந்திருக்கிறது. பிறந்து வளர்ந்த சூழ்நிலை, வாழ்க்கை வசதி வாய்ப்புகள் வித்தியாசப்படுவதால், அதை அனுசரித்து பிரச்சினைகளின் தன்மைகளும் தரங்களும் வேறுபடலாம். ஆனால் மனம் ஓடிக்கொண்டேதான் இருக்கும். ஆகையால் மனதைக் கட்டுப்படுத்தி விட்டதாகச் சொன்னால் நம்புவதற்கு முன் நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

யோகம், தியானம் மூலமாகத் தம் மனதைக் கட்டுப்படுத்தி விட்டதாகச் சொல்பவரின் செயல்களைக் கவனித்துப் பாருங்கள். ஒருவருடைய செயல்களைக் கொண்டுதான் அவருடைய சொற்களை மதிப்பிட முடியும், நம்ப முடியும். அவருடைய உள்ளத்தை அறிய முடியும். ஒருவர் நாள் முழுவதும் பக்தியில் ஆழ்ந்து ஒன்றும் செய்யாமல் உட்கார்ந்து கழித்தாலும் அவருடைய உள்ளம் பலவித சிந்தனைகளால் தூண்டப்பட்டு ஓடிக்கொண்டேதான் இருக்கும்.

உள்ளத்தில் தோன்றும் சிந்தனைகள் ஒருவருடைய அனுபவங்களை அனுசரித்தும் அவருடைய வாழ்க்கையின் குறிக்கோளை அனுசரித்தும் மகிழ்ச்சியுடையதாயும், திருப்தி நிறைந்ததாகவும் இருக்கலாம். அன்றி சஞ்சலமும், கவலையும் நிறைந்ததாகவும் இருக்கலாம். கள்ளங்கபடமற்ற மனமும், இரக்கப்படும் சுபாவமும், இயற்கையை ரசிக்கும் கவிஞரின் சுபாவமும் ஒருவருக்கு இருந்தால் அவர் உள்ளம் அமைதியுடனும், மகிழ்ச்சி, திருப்தியுடனும் இருக்கும். அவ்வாறன்றி வறுமையின் காரணமாகவோ, சூழ்நிலையின் காரணமாகவோ, பொறாமையும் பேராசையும் நிறைந்து, உள்ளம் மகிழ்ச்சியை இழந்து வேதனைப் பட்டுக்கொண்டேதான் இருக்கும். ஆகையால் மனதைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவதைவிட மனதைக் கல்வி கேள்விகளாலும், சான்றோர்களின் சேர்க்கையாலும் பக்குவப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடலாம்.

பரோபகாரச் சிந்தனைகளாலும், செயல்பாடுகளாலும் மனதை உயர்த்தி, சஞ்சலத்தையும், வேதனையையும் குறைக்க முயற்சி செய்யலாம். நல்ல பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்து வாழ முயன்றாலும் உள்ளத்தில் அமைதி நிலவும். எந்த நிலையிலும் நேர்மையையும் சத்தியத்தையும் கடைப்பிடித்து வாழ்ந்தால் உள்ளம் தானாகவே உயரும். அதாவது வாழ்க்கைக்கு, சிறந்த கொள்கைகளும், நம்பிக்கைகளும் வழிகாட்டிகளாக உதவும்போது உள்ளம் பக்குவம் அடைந்து அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்ததாக உயரும்.

உள்ளம் பக்குவம் அடைந்து உயர்வதற்கு முட்டுக்கட்டைகளாக இருப்பவற்றில், அறியாமைதான் முதலிடம் வகிக்கிறது. அறியாமையின் காரணமாகத்தான் குறுகிய சுயநலம் வளர்கிறது. பேராசை வளர்கிறது. எதைப் பற்றி அறியாமை? இந்த பிரம்மாண்டமான பிரபஞ்சத்தில் நான் யார்? எங்கிருந்து வந்தேன்? எங்கு சென்று மறைகிறேன்? போன்ற கேள்விகளுக்கு விடைகாணும் தத்துவ அறிவு பெறாமையைத்தான் அறியாமை என்று சொல்ல வேண்டும். தத்துவ அறிவு என்றால் பகுத்தறிவும் விஞ்ஞான அறிவும் சேர்ந்ததுதான். அறிவு காலந்தோறும் வளர்ந்து விரிந்து கொண்டே போவதால் அறிவை வளர்ப்பதில் முற்றுப் புள்ளி வைத்து நின்று விடாமல் உள்ளத்தை எப்பொழுதும் இளமையுடன் வைத்துக் கொள்ளும் முயற்சி வேண்டும். ஒருவர் தம் உள்ளத்தை உயர்த்தும் முயற்சியில் சமுதாயம் உதவ வேண்டும். அதாவது அவர் சமுதாயத்தில்

வாழ்வதால், அவருடைய சிந்தனைகளை உருவாக்குவதில் சமுதாயமும் முக்கிய இடம் பெறுகிறது.

தியானத்தை தினந்தோறும் காலையில் மட்டும் பயிற்சி செய்து, தத்தம் தொழிலில், உழைப்பில் கவனம் செலுத்த வேண்டும். உழைப்பே ஒரு யோகம்தான். செய்யும் வேலையில் மனம் லயித்து விட்டால் அதுவே யோகமாகிறது. உடல் உழைப்பைக் கேவலமாகவும், கீழ்த்தரமாகவும் கருதி வாழ அடி வகுத்தவர்கள் தான் முழுநேர பக்தியையும், யோகத்தையும், தியானத்தையும் பெரிதாக்கினர். பிறருடைய உடலுழைப்பால் தம் வாழ்க்கை வசதிகளைப் பெறுவதில் தனி உரிமையும் சலுகையும் கொண்டாடலாயினர்.

சமூகத்தில் இன்று நாம் காணும் எல்லாவித ஏற்றத் தாழ்வுகளுக்கும் காரணம், மனம் வைத்துச் செய்யும் உழைப்பே யோகம் என்பதை மறந்து குறுகிய சுய நலங்களுக்கு முக்கியத்தும் கொடுத்ததுதான் என்று சொல்லலாம்.

### 3. விதியும், மதியும்

விதியின் மேல் அதிக நம்பிக்கை வைத்து வாழ்க்கை நடத்துகிறவர்களென்று நம் நாட்டினரைச் சொல்வதுண்டு. அது ஓரளவு உண்மையே. நம்மில் பெரும்பாலோர் விதியின் மேல் நம்பிக்கை உள்ளவர்கள்தான். விதியை நம்புவதில்லை யென்று இரைச்சலிட்டுப் பேசுபவர்களும் விபத்து ஒன்றில் சிக்கி விழிக்கும் போது விதியைத்தான் நொந்து கொள்கிறார்கள்.

விதி என்பது என்ன? விதியென்பது உண்டா? உண்மைதானா என்பதைப் பற்றி சற்று உற்று ஆராய்வோம். ஒரு திட்டம் போட்டு ஒரு காரியத்தைச் செய்ய முனைகிறோம். திடீரென்று எதிர் பாராத விதத்தில் அக்காரியம் நிறைவேறாதவாறு இடைஞ்சல் வந்து சேருகிறது. அச்சமயம் நாம் விதியைத் தான் காரணமாகக் கூறுகிறோம். சில சமயங்களில் நம் எல்லாவித ஜாக்கிரதையையும் எச்சரிக்கையையும் மீறி எதிர்பாராத விபத்து ஒன்றில் அகப்பட்டுக் கொள்கிறோம். அச்சமயமும் விதியைத்தான் காரணமாகச் சொல்கிறோம். சில சமயம் நாம் செய்யாத ஒரு குற்றத்திற்குத் தண்டனை பெறுகிறோம். அச்சமயமும் விதியைத் தவிர வேறு காரணம் ஒன்றும் தென்படுவதில்லை.

இங்ஙனம் எதிர்பாராத துன்பங்களுக்கோ, இன்பங்களுக்கோ ஆளாகும் போது நாம் விதியைத் தான் காரணமாகக் கருதுகிறோம். வாழ்க்கையின் சிறிய, பெரிய எல்லாவித நிகழ்ச்சிகளுக்கும் மனம் சுலபமாகக் காரணத்தைக் காண விரும்புகிறது. அக்காரணம் தெரியாத போதெல்லாம் மனித சக்திக்கு அப்பாற்பட்ட, நம்மை ஆட்டி வைக்கும் ஒரு சக்தியைத்தான் எல்லாவற்றிற்கும் மூலகாரணமாக விதியை நாம் கற்பனை செய்து கொள்கிறோம். அதைத்தான் நாம் தெய்வச் செயல் என்றும் ஊழ்வினையென்றும், விதியென்றும், கர்ம பலன், தலையெழுத்தென்றும் கூறி திருப்தியடைகிறோம்.

விதியை நொந்து கொள்வதற்கான காரணங்களில் சில குறிப்பிட்ட உதாரணங்களை எடுத்துக் கொள்வோம். ஏழை விதவையின் ஒரே பையன் இளம் வயதில் வண்டி நசுக்கப்பட்டு மடிகிறான். ஒரு திருமணம் முடித்துத் திரும்பும் தம்பதிகள் எதிர்பாராத விபத்தில் வண்டி கவிழ்ந்து மரணமடைகின்றனர். பல ஆண்டுகளாக பிரிந்திருந்த காதலர்கள் திரும்ப சந்திக்கும் சந்தர்ப்பத்தில் கொள்ளைக்காரர் கூட்டம் வந்து கொலை செய்து முடிக்கின்றனர். ஏழை மாணவன் புத்திசாலியாகவும் படிப்பில் ஆர்வமுள்ளவனாகவும் இருக்கிறான். படிப்பதற்குப் பண வசதி இல்லாததால் படிப்பை நிறுத்திக் கொள்கிறான். பணக்காரர் வீட்டுப் பையன் எல்லா வசதியிருந்தும் மண்டையில் களி மண் தான் இருக்கிறது என்று சொல்லும்படி மந்தமாகவும் படிப்பில் சிறிதும் நாட்டம் இல்லாமலும் இருக்கிறான். இம்மாதிரி எத்தனையோ உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இவையெல்லாவற்றிற்கும் விதி தான் காரணம் என்று சொல்கிறோம்.

ஒரு பக்கம் விதியை நொந்து கொண்ட போதிலும் ஆதியிலிருந்தே மனிதன் தனக்கு நேரும் பல இடைஞ்சல்கள், தடைகள் இவைகளோடு போரிட்டுத் தன் சக்தியை அறிவாற்றல் மூலமாகப் பெருக்கிக் கொண்டே வந்திருக்கிறான். இதனால் விதியின் பிடிப்பும், ஆதிக்கமும் குறைந்திருக்கிறது. முன்னர் விதிதான் காரணம் என்று சொன்ன நம்பின விபத்துக்களைத் தன் அறிவுத் திறனால் அகற்றி விதியை வென்றிருக்கின்றான். அதாவது மனிதன் தன் அறிவாற்றலால் ஆபத்துக்களை அகற்றி, விதியின் மேல் பழிபோட வேண்டிய அவசியமே இல்லாதவாறு பல விதங்களில் சுதந்திரமாக சிந்தித்து வாழ முயல்கிறான். அதாவது அறியாமையும், பயமும் உள்ளவரை விதியின் மேல் பழியைப் போடும் வழக்கமும் இருக்கத்தான் செய்யும்.

“என்னால் முடியவில்லை, மேலும் முயற்சி செய்ய விருப்பமில்லை, சக்தியுமில்லை, வருவது வரட்டும், தலை குனிந்து ஏற்றுக் கொள்வதைத் தவிர என்னால் செய்வதற்கொன்றுமில்லை," என்பதற்குத்தான் விதியின் மேல் நம்பிக்கை வைத்தல் என்பதாகும். இயற்கை விதிகளைத் தவிர வேறு விதிகள் ஒன்றுமில்லை. தலை எழுத்து என்பதும் நம் கற்பனையே. அந்த விதிகளை நம்பி சும்மா இருந்து விடுவது முற்றிலும் மடமையே. குறுகிய சுயநலம், பேராசை, பொறாமை, பயம் இவைகளைப் போராடி வென்றால் விதி தன் இருப்பிடம் தெரியாமல் ஓடி மறையும் என்பதில் சந்தேகமே இல்லை .

இயற்கை விதிகளில் முக்கியமான சிலவற்றை எடுத்துக் கொள்வோம். மரணமடைவது இயற்கை, தடுக்க முடியாதது. அதைப் பற்றிப் கவலைப்பட்டு விதியை நொந்து கொள்வதில் அர்த்தமில்லை. ஆனால் குழந்தைப் பருவத்தில் அல்லது வயது வருமுன் அகால மரணமடைவது முற்றிலும் இயற்கையல்ல. அதை நம் அறிவைக் கொண்டு தடுத்து முதுமை வரை வாழ முயற்சி செய்யலாம். இவ்விஷயத்தில் நம் முயற்சி முற்றிலும் குறைவே. சுகமாக வாழ்வதற்கு ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி, ஒத்துழைத்து, உதவி புரிந்து, விட்டுக் கொடுத்து வாழ வேண்டும். இது எல்லாவற்றிலும் சிறந்த, முக்கியமான இயற்கை விதி. இந்த விதியை மறந்து சுயநலம், பேராசை, பொறாமை முதலிய கீழ்த்தரமான மிருக குணங்களுக்கு இடம் கொடுப்பதால் நமக்கு ஏற்படும் இன்னல்கள் கணக்கில. இது தெரியாமல் நம் குறைகளினால் ஏற்படும் இன்னல்களுக்கு விதியைக் காரணமாக நினைப்பதும் கூறுவதும் நம் அறியாமையே தான்.

விதியின் மேல் பழியைப் போடாமல் தன்னம்பிக்கையுடன், பிழைக்க வழிதேடுபவர்களுடைய விடா முயற்சியினால் தான் தற்காலத்திய நாகரிக வாழ்க்கை சாத்தியமாயிருக்கிறது. மேலும் நாம் முயற்சி செய்வோமானால் விதியை நொந்து கொள்வதற்குக் காரணமான எவ்வளவோ கஷ்டங்களை இடையூறுகளை அகற்றி விட முடியும். சமூகத்தின் பொருளாதார அமைப்பை ஒழுங்கான முறையில், அன்பின் அடிப்படையில் திட்டம் போட்டு சீர்திருத்தம் செய்தால் வெகு சீக்கிரத்தில் வறுமை, பிச்சையெடுத்தல், திருடர் பயம், கொள்ளைக்காரர் பயம் நீங்கும். மன நிம்மதியுடன், அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்க்கையை உருவாக்கலாம்.

"தனி மனிதனுக்குணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்” என்னும் பாரதியின் வாக்கு இரண்டு வித பொருளைக் குறிக்கும். அந்தப் பயங்கர நிலைமையிலிருந்து உலகைக் காப்பாற்ற வேண்டுமானால், “இனி ஒரு விதி செய்வோம், அதை எந்த நாளும் காப்போம்” என்று கங்கணம் கட்டிக் கொண்டு வேலை செய்ய வேண்டும். நமக்குத் தெரியாத கற்பனை விதியை நொந்து கொள்ளாமல் இயற்கை விதியான அன்பின் விதியைக் கடைப்பிடிப்பதையே பாரதியார் வற்புறுத்துகிறார். பொது உடைமைக் கொள்கையே அன்பின் வழியாகத் தோன்றியது தான்.

ஆம், விதியைப் பற்றி தர்க்கம் செய்வது, விதி உண்டு - இல்லை என்று முடிவு செய்வது நம் வேலையாக இருக்கக் கூடாது. பிறப்பும், இறப்பும் தான் விதியின் வேலை. நம் வேலை வாழ்க்கையை இனிமையாக்குவதற்கான எல்லா முயற்சியும் செய்வதுதான். நம் கையில் இருப்பது அன்பும் உழைப்பும்தான். நிச்சயமாக விதியை மதியால் வெல்லலாம் - வென்று கொண்டிருக்கிறோம் என்னும் தன்னம்பிக்கையுடன் நாம் செயல்படவேண்டும்.

மேற்கத்திய விஞ்ஞானிகள் இயற்கைப் பொருட்களைப் பற்றிய விதிகளை மட்டும் நன்கு ஆய்வு செய்கிறார்களே தவிர, நல்ல மனித வாழ்க்கைக்கு அவசியமான மனப்

பக்குவத்தைப் பற்றி, நல்ல வழிகாட்டும் விதிகளைப் பற்றி, புத்தரைப் போன்று, இயேசுவைப் போன்று, மகாத்மா காந்தியடிகளைப் போன்று தம் முழு சக்திகளுடன் இயங்க முன் வருவதில்லை. காரணம் தமக்கு நல்ல ஊதியம் கொடுத்து பராமரிக்கும் முதலாளிகளின் வியாபாரத்தில் லாபம் சம்பாதிக்கும் வழிகளையும் விதிகளையும் மட்டும் கண்டு பிடித்துக் கொண்டிருக்கின்றனர். 'Business Management' என்னும் விஞ்ஞான அறிவும் வாழ்க்கையில் சுமைகளைத் தவிர்த்து மக்கள் நலனின் மேல் குறிக்கோளாகக் கொண்ட விதிமுறைகளை ஒதுக்கி வைத்தே செயல்படுகிறது. இந்த நிலை மனித சமுதாயத்தின் துர்பாக்கியம் என்று தான் சொல்ல வேண்டும்.

என்றாலும் மனித நலனை மனதில் வைத்து வரலாற்று வளர்ச்சியைப் பற்றி நன்கு ஆய்ந்த மேதைகள் கார்ல் மார்க்ஸும், ஜான் ரஸ்கினும், அமெரிக்க ஞானி தோரோவும், ரஷ்ய ஞானி லியோ டால்ஸ்டாயும், நம் நாட்டு மகாத்மா காந்தியடிகளும் சமுதாயப் பொருளாதாரச் சீரமைப்பின் மூலம் வறுமையை ஒழித்தால்தான் விதியின் பிடியைக் குறைக்க முடியும் என்று தெரிவித்திருக்கின்றனர். மேலும் நம் நாட்டு மக்களின் நிலைமையை நன்கு ஆய்ந்து அறிந்த மகாத்மா காந்தியடிகள் மக்கள் தொகையில் பெரும்பான்மையினரான கிராம மக்களோடு நேரடி தொடர்பில்லாத குவியல் ஆட்சியும், அவர்கள் வகுக்கும் திட்டங்களும், பரவல் முறை ஆட்சியாகவும், பரவல் முறை உற்பத்தியாகவும், மக்கள் தாங்களே பங்கெடுக்கும் கிராம சுயராஜ்ய முறையாகவும் மாற்றங் கண்டால்தான், மக்கள் மகிழ்ச்சியுடனும் அமைதியாகவும், சுரண்டல் முறை இல்லாத மனித உறவின் மேல் அமையும் சமுதாயத்தில்தான் தலை எழுத்தின்படியே, அதாவது விதியின்படியே எல்லாம் நடக்கும் என்று தன்னம்பிக்கையை இழந்து, மூட நம்பிக்கைகளுக்கு ஆளாகி செயலிழந்த பரிதாப நிலையிலிருந்து விடுபட்டு, மதியைப் பயன்படுத்தி விதியை வெல்ல முடியும் என்று கூறினார்.

### 4. ஆன்மீக வாழ்க்கை

இயற்கையைப் பற்றியும், இயற்கையின் அதிசயங்களைப் பற்றியும் சிந்தித்து, வியந்து, உணர்ந்து, ரசித்து வாழ்வதைத்தான் ஆன்மீக வாழ்க்கை என்று சொல்ல வேண்டும். அதிக ஆடம்பரமில்லாமலும், வறுமை நோயால் பீடிக்கப்படாமலும் அன்பு நிறைந்து ஒருவருக்கொருவர் உதவி புரிந்து வாழ்பவர்களைத் தான் ஆன்மீக வாழ்க்கை நடத்துபவர்கள் என்று சொல்ல முடியும்.

விலங்குகள் மனிதர்களைப் போல் சிந்திப்பதில்லை. என்றாலும் அவைகளின் வாழ்க்கைக்கு அவசியமான அளவு அறிவாற்றல் அவைகளுக்கும் உண்டு. நாம் அந்த அறிவாற்றலை பிறவி இயல்பு (Instinct) என்று சொல்லி, நம்மை உயர்வாகக் கருதிப் பெருமைப்படுகிறோம்.

எல்லா உயிரினங்களுக்கும் உடல் தேவைகளைக் கவனித்துக் கொள்வது முதல் இயல்பாகவும் கடமையாகவும் இருந்து வருகிறது. இவ்விஷயத்தில் மனிதனுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் அதிக வித்தியாசம் இல்லை. இந்த உண்மையை மனிதன் ஒப்புக் கொள்வதில்லை. மனிதன் தனக்குத் தேவையென்று கருதிப் பெற விரும்பும் பொருட்கள் வித்தியாசப்படலாம். ஆனால் அவனுடைய விருப்பமும் அதற்கான முயற்சியும், போட்டியும் சிந்தனைகளும் மற்ற மிருகங்களுக்கு உள்ளது போலவேதான் இருக்கின்றன என்று சொன்னால் அது தவறாகாது. காரணம் எல்லா உயிரினங்களுக்கும் பொதுவான, அடிப்படை இயல்பான சுயநலத்தினால் மனிதனும் செயல்படுகிறான்.

இந்த குறுகிய சுயநலம் பேணும் இயல்பைத் தாண்டி பொது நலத்தில் தன்னலத்தைக் காணும், அன்பாகிய அறிவைப் பயன்படுத்தி வாழ்வதைத்தான் ஆன்மீக வாழ்க்கை என்று சொல்ல வேண்டும். நம் கண் முன்னர் காட்சியளிக்கும் எல்லா உயிரினங்களுடன் - தாவரங்கள் உட்பட - இனிய உறவை வளர்த்து அமைதியும் ரசனையும் நிறைந்த பணிகளில் ஈடுபட்டு வாழ்வதைத்தான் ஆன்மீக வாழ்க்கை என்று சொல்ல முடியும். அவ்வாறு இல்லாமல் கற்பனைக் கடவுள்களை உருவாக்கி பக்தி செலுத்தும் பெயரில், அறிவைப் பயன்படுத்தாமல் மூடநம்பிக்கைகளை வளர்த்து ஏழை எளிய மக்களின் உழைப்பின் பயனைச் சுரண்டி நடத்தும் வாழ்க்கையை எந்தவிதத்திலும் ஆன்மீக வாழ்க்கை என்று சொல்ல முடியாது.

"பிறர்மனம் நோக மனிதர் பார்க்கும் வழக்கம் இருக்கும்வரை "மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இருக்கும் வரை ஆன்மீக வாழ்க்கை என்று பேசுவது ஏமாற்றுத்தனம் தான் என்று சொல்ல வேண்டும்.

மனிதனுடைய மிகக் குறுகிய சுயநலத்தின் காரணமாகத்தான் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் தோன்றி ஏழைகளென்றும் செல்வந்தர்கள் என்றும் பெரிய பிளவு ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிளவின் காரணமாகத்தான் பலவித தீச் செயல்களும், பாவச் செயல்களும் நிரந்தரமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன.

5. **வாழ்க்கைத் தத்துவம்**

பலி நம்மைச் சுற்றி, நம் கண்முன்னர் காணப்படும் பலவிதமான பொருட்களும், உயிரினங்களும் நிகழ்ச்சிகளும் சேர்ந்துதான் நம் மனதைச் சிந்திக்கத் தூண்டுகின்றன. இது என்ன, அது என்ன, ஏன் இவ்வாறு நடந்தது என்று கேள்விகள் எழுவதால் மனம் பதிலை அறிய விரும்புகிறது. நாம் பார்ப்பவைகளும் அனுபவிக்கும் நிகழ்ச்சிகளும் சில சமயம் மனதிற்கு மகிழ்ச்சியையும், சில சமயம் கவலையையும் கொடுப்பதால் மனம் அறிய விரும்பும் ஆசையால் தூண்டப்பட்டும் உணர்ச்சிவசப்பட்டும் சிந்திக்க முயல்கிறது. இந்த முயற்சியின் பலன்தான் தத்துவ விசாரம்.

சிந்திப்பவர்கள் தம் எண்ணங்களை பறிமாறிக் கொள்வதால் பலவிதமான பதில்கள் கிடைக்கின்றன. கருத்து வேறுபாடுகளின் காரணமாகவும், பதில்கள் முழுதிருப்திகரமாக இல்லாததாலும், மேலும் மேலும் கேள்விகளும் பதில்களும் தோன்றி தத்துவ விசாரம் ஒரு முழு நேரக் கலையாக வளர்ந்து கற்பனையும், யூகமும் சேர்ந்து அற்புதமான ஒரு சிந்தனைக் களஞ்சியம் உருவாயிற்று.

இந்தத் தத்துவ விசாரமாகிய சிந்தனை உலகத்தில் மிகவும் முக்கிய இடம் வகிப்பது கடவுளைப் பற்றிய கருத்தாகும். கடவுள் எல்லாவற்றையும் படைத்தவர் மட்டுமல்ல. காப்பவரும் அழிப்பவரும் அவரே. இவ்வாறுதான் மனித நாகரிக ஆரம்பித்திலிருந்தே எல்லா நாடுகளிலும், காலங்களிலும், படைப்பைப் பற்றியும் படைத்த கடவுளைப் பற்றியும், மனித வாழ்க்கையில் தோன்றும் இன்ப துன்பங்களுக்கான காரணங்களைப் பற்றியும் சிந்தித்து மனிதன் தத்துவ அறிவை வளர்த்து வந்திருக்கிறான்.

படைப்பில், எல்லா சுக துக்கங்களுக்கும் காரணமானவர் கடவுளேதான் என்ற நம்பிக்கையும், கடவுள் எல்லாம் வல்லவர், அன்பு மயமானவர், எல்லாம் தெரிந்தவர் என்ற நம்பிக்கையும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருப்பதைக் கண்ட சில சிந்தனையாளர்கள் கடவுள் நம்பிக்கையை இழக்கலாயினர். கடவுள் எல்லாம் வல்லவராகவும் அன்பு மயமானவராகவும் இருப்பாராகில் ஏன் மனிதன் பயங்கர பூகம்பம் புயல் முதலியவற்றிற்கு ஆளாகிறான். போர் புரிந்து தன் இனத்தையே ஆயிரக்கணக்கில் கொலை செய்து அழிக்கிறான். தானும் அழிகிறான்? கடவுள் எல்லாம் வல்லவராகவும், அன்புமயமானவராகவும் இருந்தால் இந்த அழிவுகளை நிறுத்தியிருக்கலாமல்லவா? இந்தக் கேள்விகளுக்குச் சரியான பதில் கிடைக்காததால் தத்துவஞானிகளில் சிலர் நாத்திக வாதத்தை வளர்த்தனர். ஆனால் நம்பிக்கை மேலேயே நம்பிக்கை வைத்து வாழ்வதில் இன்பங்கண்ட கடவுள் பக்தர்கள் கடவுள் நம்பிக்கையைக் கைவிட மனமில்லாமல் சிந்திப்பதைக் கைவிட்டு, சமயச் சடங்குகள் மேலும், சம்பிரதாயங்கள் மேலும் அதிக கவனம் செலுத்தி ஒருவிதத் திருப்தியுடன் வாழ்ந்தனர். தத்துவ விசாரத்தின் வளர்ச்சியில் தடை ஏற்பட்டது. எனினும் கடவுள் பக்தர்கள், மனிதனுடைய சுகதுக்கங்களுக்குக் கடவுள் காரணம் ஆக மாட்டார். அவர் மேல் பழியைப் போடக்கூடாது. கடவுள் மனிதனுக்கு அறிவையும் சுயமாக செயல்படுவதற்கான சுதந்திரமும், ஆற்றலும் கொடுத்திருக்கிறார். ஆகையால், மனிதன் அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்கு மனிதனே பொறுப்பாளி. கடவுள் மேல் பழியைப் போடுவது தவறு என்று வாதாடினர். இந்த வாதம் இன்னும் முடியவில்லை. காரணம் மனிதனை நடத்திச் செல்வதில் அறிவைக் காட்டிலும் நம்பிக்கைதான் முக்கிய அங்கம்வகிக்கிறது.

தத்துவ அறிவின் வளர்ச்சிக்கு உதவின சூழ்நிலையேதான் விஞ்ஞான அறிவின் வளர்சிக்கும் காரணமானது. தத்துவ விஞ்ஞான அறிவின் ஆரம்பமே, அறிய விரும்பும் இயல்பும்

மனத்தில் தோன்றும் கேள்விகளுமே. இந்தக் கேள்விகளுக்குப் பதில் காணும் முயற்சியில் தத்துவம், வெறும் யூகத்தையும் கற்பனையையும் பயன்படுத்தினதைப் போல் அல்லாமல் விஞ்ஞானம் பொருட்களை அலசிப் பார்த்து அறிந்து பயன்படுத்தி அறிவை வளர்த்தது. உணவுப் பொருட்களைப் பற்றியும், நோய், மருந்து சம்பந்தப்பட்ட மூலிகை, பச்சிலை முதலிய பொருட்களைப் பற்றியும், வானத்தில் காணப்படும் நட்சத்திரங்கள் கிரகங்கள் முதலியவற்றையும் நாட்கணக்கில் ஆண்டுக்கணக்கில் பார்த்து கவனித்து அறிந்த அறிவும்தான் விஞ்ஞான அறிவாக வளர்ந்தது. இங்கே கற்பனைக்கும் யூகத்திற்கும் இடமில்லை. அனுபவ பலனை வைத்தே விஞ்ஞான அறிவு வளர்ந்தது. அன்றாட வாழ்க்கைக்கு உதவுவதாக, வாழ்க்கை வசதிகளைப் பெருக்குவதில் அனுகூலமாய் இருந்தவற்றை மட்டும் நம்பினர்.

அதாவது உடல் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் விஞ்ஞான அறிவு பயன்பட்டது.

எனினும் தத்துவ அறிவு வாழ்க்கைக்கு ஒளி, வழி காட்டுவது போல் தோன்றியதால், தத்துவ விசாரத்தில் ஈடுபட்ட ஞானிகளும் தம் ஆய்வை நிறுத்தாமல் அமைதியான கூட்டு, சமூக வாழ்க்கைக்கு உதவக்கூடிய நீதிநெறி, அன்பு, சத்தியம், பாவ புண்ணிய உணர்வு, ஒழுக்கம் முதலியவைகளை, ஒவ்வொருவரும் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நீதி நெறிகளை முன் வைத்து தத்துவ விசாரத்திற்கு முக்கித்துவம் கொடுத்தனர்.

ஆனால் அவர்கள் மக்களை நல்வழிகளில் திருப்புவதற்காக, கடவுள் நம்பிக்கையை மையமாக வைத்து, நிறைய புராணக் கதைகளைப் புனைந்து நம்ப வைத்து, தத்துவ சிந்தனையே தோன்றாதவாறு செய்துவிட்டனர். இக்கும்பலின் சுயநலம், சமூக ஏற்றத் தாழ்வுகளைச் சிந்தனையின்றி ஏற்றுக் கொள்ளும்படி செய்தது. அறிவுப் பூர்வமான விஞ்ஞான வளர்ச்சிக்கு இது தடை ஏற்படுத்தியது.

மொத்தத்தில் தத்துவ விசாரம் பிரபஞ்சத்தில் நான் யார், எங்கிருந்து வந்தேன், எங்கே போகிறேன் என்ற கேள்விகளுக்குப் பதில் காணும் போது, பணிவும், ஆணவம் குறைந்த அன்பும், தியாக உணர்வும் வளர்ந்து குறுகிய இன, மொழி ஜாதிப் பற்றுகளிலிருந்து விடுபட்ட உலக மனிதனாக உயர்வதற்கு உதவ வேண்டும்.

ஆனால் இன்று சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தியடிகளைப் போன்ற ஒரு சிலரைத் தவிர, தத்துவ விசாரத்திலேயே தம் வாழ்க்கையைக் கழிப்பவர்கள் சமூகத்திலிருந்து வெகுதூரம் விலகி வாழ்வதால், மக்கள், உழைப்பில் ஈடுபட்டுள்ள சாதாரண மக்கள் தத்துவ மேதைகளின் தத்துவ விசாரத்தால் பலன் அடைந்து வருகிறார்கள் என்று சொல்ல முடியாது. மேதைத் தத்துவ ஞானிகள் பொது வாழ்க்கையில் இறங்கி வாழ்க்கையை ரசித்துக் கொண்டு மக்களுக்கு முன் உதாரணமாக இல்லாததால் வெறும் தத்துவ விசாரம் அதிக பலன் அளிப்பதில்லை. வாழ்க்கையானது, பலவித வர்ண நூல்களால் அழகாக நெய்யப்பட்ட ஆடையைப் போன்றது. அதன் கலைத்திறனை ரசிக்காமல், நூல்களின் எண்ணிக்கையில் ஈடுபட்டு காலத்தைக் கழிப்பது போன்றதுதான் இன்றைய தத்துவ அறிஞர்களின் தத்துவ விசாரமும்.

### 6. குடும்ப அமைதிக்கு வழிகள்

பிரச்சினைகளே இல்லாதவர் எவரும் இல்லை. பிரச்சினைகள் நிறைந்ததுதான் நம் வாழ்க்கை. பிரச்சினைகள் பலவிதம். அன்றாடப் பிரச்சினைகள் நீண்டகாலப் பிரச்சினைகள், அவரவர் செயல்களாலேயே தோன்றும் பிரச்சினைகள், பிறரால் ஏற்படும் பிரச்சினைகள், இயற்கையால் நிகழும் பிரச்சினைகள், இவ்வாறு பிரச்சினைகள் எண்ணற்றவை.

வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பெற முயலும்போது தோன்றும் பிரச்சினைகள் ஒருவிதம். மனதை அடிப்படையாகக் கொண்டு தோன்றும் பிரச்சினைகள் ஒருவிதம். உடலும் மனமும் வெவ்வேறாகச் செயல்படுவதில்லை. ஆகையால் உடல் தேவைகளை அடைய முயலும்போது மனமும் தீவிரமாக செயல்படுவதால், பேராசையும், ஆத்திர புத்தியும், போட்டியும், பொறாமையும் செயல்படுவதால் பிரச்சினைகள் எளிதாக இல்லாமல் சிக்கலாகி விடுகின்றன. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மனப்பக்குவம் தேவை. அத்துடன் மனத்திற்கு வழிகாட்டி உதவும் அறிவுதான் பிரச்சினைகளை சமாளிப்பதில், தீர்ப்பதில் முக்கிய அங்கம் வகிக்கிறது. அறிவு நல்ல முறையில் செயல்படுவதற்கு அனுபவம் தேவை. அதனால்தான் பிரச்சினைகள் முன் நிற்கும்போது இளைஞர்கள் மன நிலையும் அணுகுமுறையும், அனுபவசாலிகளான வயதானவர்களுடைய அணுகு முறையும் வித்தியாசப்படுகின்றன.

மன அன்றாடப் பிரச்சினைகளை எடுத்துக் கொள்வோம். காலையில் பால் வரவில்லை. அல்லது நேரமாகி வந்தது. அதனால் காப்பி காலாகாலத்தில் அருந்த முடியவில்லை. அல்லது வேலைக்காரி சொல்லாமல் விடுமுறை எடுத்துக் கொண்டிருக்கிறாள். அதனால் துணிமணி துவைக்கப்படாமலும் பாத்திரங்கள் அலம்பப்படாமலும் குவிந்து கிடக்கின்றன. இது போன்ற சாதாரணப் பிரச்சினைகளிலிருந்து வீட்டு வாடகை இன்னும் கட்டவில்லை உடல்நிலை சரியில்லை போன்ற ஆயிரம் பிரச்சினைகள் மனதை சஞ்சலப்படுத்திக் கொண்டே இருக்கின்றன. இவற்றை எவ்வாறு தவிர்ப்பது? நிதானமாய், அவசரப்படாமல் இந்தப் பிரச்சினைகளைத் தவிர்க்க முயலாமல், எதிர் கொண்டு செய்ய வேண்டியவற்றை அமைதியாகச் செய்து கொண்டே இருக்க வேண்டும். பிரச்சினைகள் என்று கருதாமல் கடமைகளாக நினைத்து செய்ய முடிந்ததை, முடிந்த அளவு செய்த கொண்டே இருக்க வேண்டும். முதலில் தன்னம்பிக்கை வேண்டும். பிரச்சினை எதுவுமே நிலையானதல்ல. உடனே தீராத பிரச்சினையும் சில நாட்கள் கழித்து நிச்சயமாய் தீர்ந்துவிடும்.

நாம் தான் நம் பிரச்சினைகள் தோன்றுவதற்குக் காரணங்கள் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். முதலில் நம் பழக்க வழக்கங்களைச் சற்று உற்று நோக்கி சிந்திக்க வேண்டும். நமக்குத் தெரியாமலேயே நாம் உட்கொள்ளும் பொருட்களில் சிலவற்றிற்கு அடிமையாகிவிட்டதை உணர்ந்து அவற்றைக் களைய முயல வேண்டும். பகுத்தறிவுக்கு ஒவ்வாத சில சடங்கு சம்பிரதாயங்களுக்கும் நாம் அடிமையாகி இருப்பதையும் சிந்தித்து அறிந்து அவற்றிலிருந்து விடுபட துணிச்சலுடன் முயல் வேண்டும்.

நம்முடைய அதிகமான பிரச்சினைகளுக்கு மூல காரணம் சமூகத்தின் பொருளாதார அமைப்பில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பதால்தான் என்பதை அறிந்து அந்த நியாயமற்ற ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவதற்கு மக்களின், அறிஞர்களின் கூட்டு முயற்சிகளில் துணிச்சலுடன் தன்னம்பிக்கையுடன் ஈடுபட வேண்டும்.

அண்ணல் காந்தியடிகள் ஆழ்ந்து சிந்தித்து பரீட்சை செய்து அறிந்த வழிமுறைகளை, நாம் துணிவுடன் கடைப்பிடித்தால் எவ்வளவோ பிரச்சினைகள் சூரியனைக் கண்ட பனி போல்

மறையும். சமூகத்தில் சர்வோதயக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க முயல வேண்டும். நம் தேவைகளைப் பெருக்குவதால் மட்டுமே எத்தனையோ பிரச்சினைகளுக்கு ஆளாகிறோம். தேவைகளை அவசியமான அளவு மட்டும் வைத்துக் கொண்டு கை கால்களைக் கொண்டு வேலை செய்யத் தயாரானால் யந்திரங்களுக்கு அடிமையாவது குறையும். அதன் காரணமாகவும் பல பிரச்சினைகள் குறையும். அவற்றை சமாளித்து மகிழ்ச்சியுடன் வாழ நம்மால் முடியும்.

**7. கடவுள் உண்டா?**

கடவுள் சிந்தனை மனித உள்ளத்தில் தோன்றி மனிதனால் உருவாக்கப்பட்டதுதான். பாவம், புண்ணியம் நியாயம், அநியாயம் போன்ற கருத்துகளும் மனிதனால் உருவாக்கப்பட்டவைதான். மனித வாழ்க்கையிலும் இயற்கையிலும் நம் கருத்துகளுக்கு மாறுபாடான, முரண்பாடுகள் நிறைந்த நிகழ்ச்சிகளைச் சந்திக்கும் போது நாம் கடவுளை நொந்து கொள்கிறோம். கடவுளை மறுக்கிறோம். மனித உள்ளம், நம்பிக்கைகளை வளர்த்து அவற்றின் அடிப்படையில் இயங்க விரும்புகிறது. உள்ளத்தில் உறையும் இறை சக்திதான் நம்பிக்கைகளை உருவாக்குகிறது. வாழ்க்கைக்கு வழிகாட்டியாக செயல்படுகிறது. இறை சக்தி ஒரு சமயம் கடினமாகவும், ஒரு சமயம் மென்மையாகவும் செயல்படுகிறது. கொடிய செயல்கள் புரியத் தூண்டுவதும் இறை சக்தி தான். இரக்கத்துடன், அன்புடன், பரிவு காட்டி செயல்பட ஊக்குவிப்பதும் இறை சக்தி தான். அவ்வப்போது மனித வளர்ச்சி வரலாற்றில் மகான்களைத் தோற்றுவித்து சமயக் கருத்துகளை, அமைதி நிறைந்த வாழ்க்கை நெறிகளை போதிக்க வைப்பதும் இறை சக்தியே தான். அதுபோன்றே அவ்வப்போது முரடர்களையும், துணிச்சல் நிறைந்த தலைவர்களையும் உருவாக்கி கொலை, கொள்ளை, படையெடுப்பு போன்ற செயல்களை ஊக்குவிப்பதும் இறை சக்தியே தான்.

என்றாலும் நியாயம், அநியாயம், பாவம், புண்ணியம் போன்ற கொள்கைகளின் மனித அளவுகோலோடு இறை சக்தியின் அளவுகோல், வரலாற்றில், முற்றிலும் நேர் விரோதமாகத் தேர்ன்றுவதுண்டு. முற்றிலும் நியாயமானதாக மனிதன் நினைத்தது சில நூற்றாண்டுகளுக்குள், சூழ்நிலைகள் மாறுவதன் காரணமாக, அநியாயமாகத் தோன்றுகிறது. மனித நாகரிக வளர்ச்சிப் பாதையில் இறை சக்தியே வல்லவன் எளியவனை அடிமைப்படுத்தி பல காரியங்களை சாதிப்பதற்கு அவசியமாகக் கருதி

வல்லவனை ஊக்குவித்திருக்கிறது. இன்று கொள்கையளவில், மனித சிந்தனையில் எளிவர்களிடம் அன்பும் இரக்கமும் காட்டித்தான் நாகரிகம் முன்னேற முடியும் என்ற எண்ணம் பரவிக் கொண்டிருக்கிறது. அதாவது அன்பும், இரக்கமும் இல்லாத பலாத்கார வாழ்க்கை எவ்வளவுதான் வல்லவர்களாயிருந்தாலும் இறுதியில் அழிவில்தான் கொண்டுபோய் சேர்க்கும் என்னும் நிரந்தர உண்மையை, மெஞ்ஞானத்தை, மேற்கத்திய வல்லரசுகளை நடத்துவோரும், வல்லவன் தான் வாழத் தகுதி பெற்றவன் என்னும் கொள்கையில் நம்பிக்கை உள்ளவர்களும் உணரத் தொடங்கியிருக்கின்றனர்.

**8. தன்முனைப்பு**

பிரஞ்சம் எல்லையற்றது. பூமியில் வாழும் உயிரினங்களும் எண்ணற்கரியவை. கோடானு கோடி உயிர்களில் நானும் ஒருவன். என்றாலும் எல்லாவற்றிலும் மிக மிக முக்கியமானவன் நான்தான். இந்த நான் இருப்பதால் தான் பிரபஞ்சமும், ஆகாயமும், பூமியும், கடலும் மற்ற உயிரினங்களும், எல்லாம் என்னை மையமாகக் கொண்டு தான் இயங்குகின்றன.

ஆகையால் அகங்காரம் என்பது பரந்த அர்த்தத்தில் நான் என்னும் உணர்வுதான். உயிர் வாழ்வதற்கு உடலும் உயிரும் தேவைப்படுவது போல் தான் நான் என்னும் உணர்வும் தேவைப்படுகிறது.

எவ்வளவு பெரிய அறிவாளியாக இருந்தாலும் ஞானியாக இருந்தாலும் நான் எனது என்பதைத் தவிர்க்க முடியாது. ஞானிகளும் சிறப்பு மரியாதையையும் சலுகைகளையும் தவிர்ப்பதில்லை. கூட்டத்தோடு ஒன்றுவதை அவர்கள் விரும்புவதில்லை. பணிவு, அடக்கம் என்பதெல்லாம் தன்னை சிறப்பிப்பதற்காகத்தான், அகங்காரத்தின் அணிகலன்களாகத்தான் அவை உள்ளன. சொத்து, சுக வாழ்க்கை முதலிய எல்லாவற்றையும் துறந்து துறவறம் பூண்டாலும் நான் என்னும் அக உணர்வைத் தவிர்க்க, துறக்க யாராலும் இயலாது. என்றாலும் அறிவாளிகள் ஆணவத்தைச் சற்று குறைத்து, பணிவை வளர்க்கலாம்.

தான் சத்திய சீலன், பொய் பேசாதவன், அகிம்சைவாதி, வாக்குத் தவறாதவன், பிறருக்குத் தீங்கு செய்யாதவன் என்று பலவாறாகத் தன்னை உயர்வாகக் காட்ட முயல்வதும் தான் என்னும் அகங்காரத்தின் அடிப்படையில் தான். அகங்காரம் கூடாது என்று எவ்வளவு தான் சொன்னாலும் அக உணர்வை, நான், என் என்னும் உணர்வைத் தவிர்க்க, துறக்க சான்றோர்களாலும் முடியாது. காரணம் இந்த உலக வாழ்க்கையே என்னை மையமாக வைத்து தான் இயங்க முடியும். அபாண்டமான பழி ஒன்றை ஒருவர் மேல் சுமத்தினால் அவர் உள்ளம் கொதித்து எழுகிறது. சஞ்சலப்படுகிறது. அவர் ஏதாவது ஒரு நல்ல காரியத்தை செய்திருந்தால் அதற்காகப் பாராட்டை நாடுகிறது. இது தான் மனித இயல்பு.

வீட்டைத் துறந்தாலும், சமூகத்தைத் துறக்க முடியாது. நண்பர்களைத் துறக்க முடியாது. தன்னைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதில் எவ்வித அக்கரையும் காட்டாமல் வாழ்க்கை நடத்துபவர்கள் இல்லையென்றே சொல்லலாம். சுற்றுப் புற சூழலும், சமூகமும் தன்னை உருவாக்கி, ஊக்குவித்து நடத்திச் செல்கின்றன. நல்லது செய்வதும், தீயது செய்வதும் ஒருவன் தான் மட்டும் விரும்பிச் செய்வதில்லை. சமூகமும் சுற்றுப் புற சூழலும் அவன் செயல்களுக்குக் காரணமாகின்றன. அவனுடைய அக உணர்வு அவனுடைய சிந்தனைக்கும் செயலுக்கும் காரணமாகிறது. இந்த அகங்காரத்தின் ஊன்றுகோல்களாகவும், தூண்டுகோல்களாகவும் இருப்பவைதான் அவனுடைய அறிவு, அன்பு, ஆசை, நம்பிக்கை முதலியன.

## 9. மரணம்

மனித வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளில் மரணம் ஒன்றுதான் இயற்கை விதிகளில் எவ்வாறேனும் தடுக்க முடியாத, மாற்ற முடியாத ஒன்றாகும். இந்தத் தீர்ப்பிற்கு அப்பீல் கிடையாது. உச்ச நீதிமன்றத்திற்கும் போக முடியாது. ஏழை பணக்காரன், ஞானி அஞ்ஞானி என்னும் எவ்வித பாகுபாடும் இல்லாமல் எல்லாரையும் ஒன்றாகப் பாதிக்கும் விதிதான் மரணம். நிகழ்ச்சிகளும், இயற்கையில் நடக்கும் எல்லாவித காட்சிகளும் சில அடிப்படை விதிகளின் பிரகாரமே நடந்து கொண்டிருக்கின்றன. அத்தகைய விதிகளில் முதன்மையானதாகவும், மாறாததாகவும், என்றைக்கும் தவறாமல் நடந்து கொண்டிருக்கும் விதிதான் இது. எதுவானாலும் தோன்றினது எல்லாம் மறையும் என்பதுதான் முதல் விதி. ஆகையால் பிறந்தவர்கள் யாவரும் நிச்சயமாக சாவார்கள். இதுதான் தர்க்கத்திற்கு அப்பாற்பட்ட, நிரந்தரமான உண்மை. இது யாவருக்கும் தெரிந்த உண்மையே. ஆனாலும் மனிதன் விரும்பாத நிகழ்ச்சிகளில் இதுவே முதலிடம் பெறுகிறது.

வாழ்க்கையே ஒரு மாயை, உப்பு சப்பு இல்லாத வெறும் தோற்றம் தான் என்று பேசினாலும் மனிதன் வாழத்தான் விரும்புகிறான். வாழ்க்கையில் சுகத்தைவிட துக்கந்தான் அதிகம் என்று சொன்னாலும் முடியுமானால் சாகாமல் இருக்கத்தான் விரும்புகிறார்கள். மரணபயம் எல்லாருக்கும் உண்டு. என்றாலும் ஞானிகள் மனதைப் பக்குவப்படுத்திக் கொண்டவர்கள். மரணத்தை இயற்கையின் விதி என்பதை அறிந்து தெளிந்தவர்கள். மரணத்தைக் கண்டு மனம் கலங்காமல் அமைதியாக இருப்பார்கள்.

மரணம் என்பது வாழ்க்கையில் உண்டாகும் தொடர்புகள், உறவுகள், உடைமைகள், நினைவுகள், ஆசைகள், பற்றுகள் போன்ற எல்லாவற்றிலிருந்தும் அறுந்து போய் மறைந்து போவதுதான். மேற்கூறிய பற்றுகளால் மனிதனுக்கும் பல்வேறு அனுபவங்கள் கிடைக்கின்றன. இவற்றில் துன்பங்கள் நிறைந்திருந்தாலும் துன்பங்கள் அகலும் போது ஒருவித திருப்தியும் இன்பமும் கிடைக்கிறது. ஆகையால் முடிந்த வரை

மனிதன் வாழத்தான் விரும்புகிறான். பற்றுகளைத் தவிர்க்காமல் வளர்த்துக் கொண்டு போவதில்தான் சுகம் காண்கிறான். நான் என்னும் அக உணர்வை வளர்ப்பதிலேயே இன்பம் காண்கிறான். அக உணர்வுக்குப் பற்றுகள் மிக அவசியமாகின்றன. எவ்வித பற்றுகளும் இல்லாமல் மனிதனால் உயிர்வாழ முடியாது.

சாவு அல்லது மரணம் என்பது எல்லாவித பற்றுகளுக்கும் முற்றுப் புள்ளி வைப்பது என்பதே. இந்த உண்மையை ஏற்றுக் கொள்வதற்கு மனதைப் பக்குவப்படுத்தும் நோக்கத்தோடு தான் மரணத்தைப் பற்றி, பழைய சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டு புதிய சட்டையைப் போட்டுக் கொள்வது போலத்தான் மரணம் என்று சொல்கிறார்கள்.

மரணத்தின் போது உடலை விட்டுப் பிரியும் ஆத்மா அழிவில்லாதது. அழிவது உடல் மட்டும் தான். மரணத்தின் மூலம் ஆத்மா புதிய உடல் பெற்று புதிய வாழ்க்கை அனுபவங்களைப் பெறுகிறது. மனதிற்கு ஒருவித ஆறுதலைக் கொடுப்பதற்காகத் தான், மனம் கற்பனை செய்து கொள்ளும் உதாரணங்கள் இவை.

சிலர் மரணத்தை அமிர்தத்திற்கு ஒப்பிடுகிறார்கள். அமிர்தம் ஒரு தெய்வீக மருந்து. அதை அருந்துவோர் என்றைக்கும் சாகாமல் சிரஞ்சீவிகளாக வாழமுடியும் என்பது கருத்து. அதாவது மரணத்தையே பயமில்லாது சஞ்சலப்படாமல் அமைதியுடன் ஏற்றுக் கொண்டு விட்டால், மரணமில்லாத சிரஞ்சீவி உணர்வை வளர்த்துக் கொண்டால் மரணபயமில்லாத

ஒரு நிலையில் மனதை நிறுத்தினால் மரணமில்லாத பெருவாழ்வைப் பெறுவதற்கு உதவுகிறது என்கிறார்கள். இவை யாவும் இந்த வாழ்க்கையை நன்கு பயன்படுத்தி வாழத் தெரியாதவர்கள், மக்கள் சமூகத்திலிருந்து விலகி, கற்பனை உலகத்தில் வாழப்பழகினவர்களின் கூற்று என்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது. மரணத்தை, இயற்கையின் விதியாக ஏற்றுக் கொள்ள விரும்பாதவர் தம் விருப்பப்படி கற்பனை உலகத்தில் வாழ அவர்களுக்கு முழுச் சுதந்திரம் இருக்கிறது. அவர்களுடன் தர்க்கம் செய்ய முயல்வது வீண்.

தத்துவ விசாரங்கள் மூலம் மரணத்தைப் பற்றி அறிவதற்கு அதிகமாக ஒன்றும் இல்லை. விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தி மிகவும் சாதாரண உண்மையாகிய மரணத்தை சஞ்சலப் படாமல் அமைதியாக ஏற்றுக் கொள்வதுதான் அறிவுடைமை. மரணத்தைப் பற்றி சிந்திப்பதை விட முக்கியமானது, உயிருடன் இருக்கும் போது எல்லாருக்கும் பயன்படும் வகையில் நல் வாழ்வை அமைத்து, வாழ்வாங்கு வாழ்வதற்காக மனத்தையும் செயலையும் ஈடுபடுத்துவது தான் மிக முக்கியம்.

## 10. பெரும் புயல்

இயற்கைச் சீற்றங்களில் ஒன்று புயல். சில சமயங்களில் புயல் மிகப்பெரிதாக பலமாக வீசும் போது ஏற்படும் சேதம்-உயிர்ச்சேதம், பொருட்சேதம் கணக்கிலடங்காது.

இந்தக் கட்டுரையின் மூலம் நான் கூற விரும்புவது மனித நாகரிகப் பாதையில் தோன்றும் புயல்கள். புதிய கொள்கை வெறி, இனவெறி, சமயவெறி, நாட்டுப்பற்றின் வெறி, ஆதிக்க வெறி, மொழி வெறி போன்ற வெறிப் புயல்கள் வீசி மக்களுக்குப் பலத்த சேதத்தை விளைவித்திருப்பது வரலாறு கண்ட உண்மை .

இவைகளுக்கும் அப்பால் இன்றைய யந்திர நாகரிகத்தின் அடிப்படையிலான, விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் தோற்றுவித்திருக்கும் உல்லாசப் புயல், அது வேண்டும், இது வேண்டும் - மேலும் மேலும் வேண்டும் என்று பொருட்களின் தேவைகளைப் பெருக்கிக் கொண்டு போவதால் காணும் இனிய கனவின் மயக்கத்தால் விளையும், ஓயாது அடித்துக்கொண்டிருக்கும் யந்திர நாகரிகப் புயல், இவை மனிதன் வாழ்வைச் சீரழிக்கின்றன.

இயற்கைச் சீற்றமாகிய புயல் வீசும்போது தம்மைக் காப்பாற்றிக் கொள்ள உயிரினங்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி ஒதுங்கியிருந்து புயலின் சேதத்திலிருந்து தப்பித்துக் கொள்ளும். ஆனால் இந்த யந்திர நாகரிகமாகிய புயலிலிருந்து மனிதன் தப்பிப்பானா? எங்கு சென்று ஒதுங்குவான்? மற்ற புயல்கள் குறிப்பிட்ட காலம் வரை வீசி ஓய்வு பெறும். ஆனால் யந்திர நாகரிகப் புயலினால் நன்மைகள் கிடைத்து வருவதாக நினைத்து மனிதன் மயங்கியிருப்பதால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்னும் பேச்சுக்கே இடமில்லை.

இதுவரை மனித சமுதாயம் வாழ்க்கையில் உயர்ந்த லட்சியம் எனக்கருதி வந்த அன்பு, தியாகம், மனித நேயம், ஞானம், சிந்தனைச் சுதந்திரம் முதலிய எல்லாவற்றையும் பரிகசித்து உதறித் தள்ளி, உடல் இன்பங்களை மட்டுமே பெரியதாகக் கருதும் புயலில் சிக்கி, அமைதியற்ற போட்டி வாழ்க்கையில் அகங்காரத்தை மட்டும் வளர்த்துக் கொண்டு போவதைத் தான் நாம் பார்க்கிறோம்.

இந்தப் புயலில் முதல் பலியாவது சிந்தனைச் சுதந்திரம்தான். தொழிலதிபர்களும், வியாபாரிகளும், அரசியல்வாதிகளும் தம் பயங்கர சக்தி வாய்ந்த பிரச்சாரக் கருவிகள் மூலம் மனிதனை சிந்திக்க விடாமல் மயக்கத்தில் ஆழ்த்தும் சூழ்நிலையில் தனிமனித சுதந்திரத்தைக் காப்பாற்றுவது என்பது முற்றிலும் பகற்கனவுதான்.

இயற்கையின் சீற்றமாகிய புயல் உலகத்தில் எல்லா நாடுகளிலும் ஒரே சமயத்தில் தோன்றாது. ஆனால் யந்திர நாகரிகப் புயல் உலகத்தின் எல்லா மூலை முடுக்குகளிலும் அதிவேகமாகப் பரவிக் கொண்டிருப்பதால் எந்த நாடும் எதிர்த்து நின்று தப்பித்துத் தன்னைப் பாதுகாத்துக்கொள்வது என்பது கனவுதான். Globalisation உலகளாவிய முயற்சிகள், ஆக்கிரமிப்புகள் பார்ப்பதற்கு நல்லதொரு புதிய இனிய சமுதாயத்தைத் தோற்றுவிப்பதுபோல் தோன்றினாலும் இதை நடத்துபவர்கள், குறுகிய உள்ளம் படைத்த சுயநல நோக்குடன் செயல்படும் அரசியல்வாதிகளும், ராணுவத் தளபதிகளும், ஆதலால் உலக வியாபார அமைப்பின் கருவிகளாகவே இவர்களால் செயல்பட முடிகிறது. இவர்களுக்குத் தெரியாமலேயே யந்திர உற்பத்தி ஸ்தாபனங்கள் இவர்களை அடிமைகளாகவே மாற்றிவிட்டது. இவர்களை மிகத்திறமையுடன் செயல்படும் அடிமைகள் என்று சொன்னால் தவறாகாது.

போர் புரிதல், போரில் வெற்றியைக் காண்பதற்காக போர்த்தளவாடங்கள் உற்பத்தி செய்தல், எவ்வாறேனும் எதிரிகளை ஒழித்துக் கட்டுவது - இவைதான் மனித வாழ்க்கையின் குறிக்கோளாக ஆக்கப்பட்டுவிட்டதால், இதை எதிர்ப்பவர்களோ, ஏற்றுக் கொள்ளாதவர்களோ வாழத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுகின்றனர். இத்தகைய மக்களை ராட்சஸப் பிரச்சாரக் கருவிகள் ஓரங்கட்டி ஒதுக்கிவிடுகின்றன.

இயற்கையின் சீற்றமாகிய புயலைப்பற்றி அறிவோம். இந்தப் புயல்கள் சேதங்களை விளைவிப்பதைப் போன்றே சில நன்மைகளையும் விளைவிக்கின்றன. வயதாகி, நைந்துபோன மரங்கள் சாய்வதுடன், மேடு பள்ளங்களும் சமமாகின்றன. வெள்ளத்தால் வண்டல் மண் படிந்து பயிர் விவசாயத்திற்குப் புதிய உரமாக அமைகிறது. இது போன்ற நன்மைகளும் இருக்கின்றன.

மனித வரலாற்றில் மற்றுமொரு புயல் தோன்றுவதையும் பார்த்து வருகிறோம். அவ்வப்போது ஆற்றல் மிக்க வீரர்கள் தோன்றி படைகளைத் திரட்டி பிறநாடுகள் மேல் படையெடுத்து தம் நாட்டு எல்லையை பெரிதாக்கும் பெயரில் அளவற்ற உயிர்ச்சேதம், பொருட் சேதங்களையும் விளைவிக்கின்றனர். அலெக்சாண்டர், செங்கிஸ்கான், தைமூர்லேன், நெப்போலியன், ஹிட்லர் போன்றவர்களின் செயல்களும் இயற்கையன்னை தோற்றுவிக்கும் புயல்களே. இவ்வித படையெடுப்புகளால் நன்மைகளும் விளைகின்றன. கோட்டை, கொத்தளம் கட்டும் கலைகளின் வளர்ச்சியும், வாகனங்கள் செய்வதில் வளர்ச்சியும் பார்க்கிறோம். துரித வாகனங்களுக்குக் குதிரை, ஒட்டகம், யானை போன்றவற்றைப் பழக்குதல் போன்ற நன்மைகளும் நிகழ்ந்திருக்கின்றன. நம் காலத்திலேயே போர்களால்தான் அதி விரைவில் விஞ்ஞான வளர்ச்சியும் கருவிகளின் கண்டுபிடிப்புகளும் முன்னேறியிருக்கின்றன.

மனித வரலாற்றில் நல்ல எண்ணங்கள், கொள்கைகள், தத்துவச் சிந்தனைகள், சமயக் கருத்துக்கள், இவற்றை மனிதர்களுக்கு எடுத்துக் கூறும் மகான்களும் புயல் போன்றவர்களே தான். சமயங்கள் தோன்றி மனித வாழ்க்கைக்கு ஒழுங்கையும் அமைதியையும் கொடுத்திருத்தாலும் சமயங்களால் நடந்தேறிய சச்சரவுகளும், கொடுமைகளும் கொலைகளும் அளவிட்டுச் சொல்ல முடியாதன.

நம் காலம் விஞ்ஞான யுகம். விஞ்ஞான கண்டுபிடிப்புகளும் அதன் விளைவுகளும் பயங்கர அழிவையும், அற்புத நன்மைகளுக்கு உதவும் கருவிகளையும், தோற்றுவிக்கும் புயல் போன்றவை என்பதை இக்கட்டுரையின் ஆரம்பத்திலேயே கூறியுள்ளோம். அழிவைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால், சிறந்த மனிதப் பண்புகளை வளர்ப்பதால் தான் முடியும். அந்த மனிதப் பண்புகளை வெற்றிகரமாக செயலாக்குவதற்கு மறுபடியும் மகாத்மா காந்தியடிகள் போன்று மகான் ஒருவர் தோன்றி புயல் போன்று தீவிரமாகச் செயல்பட்டால் தான் முடியும். அன்னை பராசக்தியை அத்தகைய மாமானிதரை சீக்கிரம் அனுப்புமாறு பிரார்த்திப்போமாக!

## 11. சத்தியம்

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் கூட கிராமப்புற மக்கள் ஒன்றை உறுதியாகச் சொல்லும்போது, சத்தியம் என்னும் வார்த்தையை அடிக்கடி பயன்படுத்துவார்கள். சத்தியமாகச் சொல்கிறேன் நான் செய்யவில்லை-எடுக்கவில்லை-சொல்லவில்லை என்று சொல்வது வழக்கம். நீ எடுக்கவில்லை என்று சத்தியம் செய் என்றும் கட்டாயப்படுத்துவார்கள். சத்தியம் என்னும் வார்த்தைக்கு அவ்வளவு மதிப்புக் கொடுத்தார்கள். முக்கியத்துவம் கொடுத்தார்கள். சமீபத்தில் கூட ஒரு பிரபலமான மனிதர் மேல் லட்சக்கணக்கான பணம் மறைவாகக் கையாடல் செய்திருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டபோது, அவர் அத்தகைய குற்றம் செய்யவே இல்லை என்பதை எந்தக் கோவிலில் வேண்டுமானாலும் சத்தியம் செய்யத் தயார் என்று தெரிவித்தார். சத்தியத்திற்கு விரோதமான எந்தக் காரியம் செய்தாலும் கடவுள் தண்டிப்பார் என்பது திடமான நம்பிக்கை .

இந்துக்கள் சிறுவயதிலிருந்தே சத்தியவான் சாவித்திரி கதை, அரிச்சந்திரன் கதை போன்ற கதைகள் மூலமாக சத்தியத்தின் பெருமையை வளர்த்திருக்கிறார்கள். அண்ணல் காந்தியடிகளும் தன் வாழ்க்கைச் சரித்திரத்திற்கு 'சத்திய சோதனை' என்றே பெயரிட்டார். நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் சத்தியத்தின் அடிப்படையிலேயே அமைய வேண்டும். நம் செயல்கள் யாவும் சத்தியத்திற்கு உட்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு சத்தியத்தின் அடிப்படையில் அமையாத எந்தச் செயலும் தீச்செயல்கள்தான் என்று நம்பினார்கள். தீச்செயல்கள் தற்காலிகமான வெற்றியைக் கொடுத்தாலும் இறுதியில் அழிவில்தான் முடியும், என்பதுதான் திடமான நம்பிக்கை, அனுபவ அறிவும் கூட.

சத்தியத்திற்கு எதிரிடை பொய். பார்க்காததைப் பார்த்ததாகவோ, நடக்காததை நடந்ததாகவோ ஒருவர் சொல்வாராகில் அவர் பொய் சொல்கிறார் என்கிறோம். இல்லாத ஒன்றை இருப்பதாகவோ காணாத ஒன்றைக் கண்டதாகவோ சொன்னால் அவர் பொய் பேசுகிறார் என்கிறோம். சத்தியம் ஒன்றே நன்மை பயக்கும். நிலைத்திருக்கும். சத்தியத்தைக் கடைபிடித்து வாழும் ஒருவரை மிக்க நேர்மையானவர், நாணயமானவர், சொல் தவறாதவர்' என்று மரியாதை செலுத்திப் பேசுகிறோம். சத்தியம் வளர்ச்சிக்கு உதவும். அசத்தியம் வளர்ச்சியைக் கெடுக்கும். தோல்வியில் தான் முடியும். அதனால்தான் நம் இந்திய அரசின் மூலமந்திரம் “சத்தியமேவ ஜயதே” என்று அமைந்திருக்கும். “உண்மையே வெல்லும்” என்பதுதான் நம் நாட்டின் தாரக மந்திரம், 'நியாயம் - அநியாயம்' 'பாவம் - புண்ணியம்' என்னும் பதங்களின் பாகுபாடு அறிவது, அறிந்து செயல்படுவது சத்திய நாட்டம் உள்ளவர்களால்தான் இயலும். தனிமனித வாழ்க்கையில் மட்டுமல்ல சமூக வாழ்க்கைக்கும் வழிகாட்டும் ஒளி போன்றது தான் சத்தியம், சத்தியத்தைப் புரிந்து, கடைப்பிடித்து வாழ்வது தான் சன்மார்க்கம் என்பதும் ஆகும். சன்மார்க்கத்தை உபதேசம் செய்த வள்ளலாரும் "..... உள்ளொன்று வைத்துப் புறம்மொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும் .....” என்றார்.

எல்லா நாட்டினரும், எல்லா மதத்தினரும் சத்தியத்தின் சிறப்பைப் போற்றி ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலத்தில் 'God is truth - Truth is God' கடவுளே சத்தியம், சத்தியேமே கடவுள் என்றும் எல்லா அறிஞர்களும் சொல்லி இருக்கிறார்கள். அவ்வாறிருந்தும், மனித நாகரீக ஆரம்பகாலத்திலிருந்தே மன்னர்கள் மாற்று நாட்டின் மேல் படையெடுத்துக் போர் புரிவதையும், மதவாதிகள் மதத்தின் பெயரில் கலகங்கள் புரிந்து கொலை செய்வதையும் பெருமையாகவே கருதி செயல்பட்டு வந்திருக்கிறார்கள். காரணம் என்ன?

மக்கள் சத்தியத்தைப் பற்றி நன்கு புரிந்து கொள்ளவில்லை என்பது காரணமா? அல்லது சத்தியத்தை விட சக்திவாய்ந்த சத்தியத்தையே மறைக்கும் வேறு சில மனித இயல்புகள்தான் காரணமா? சிந்திக்க வேண்டியவைதான். இரண்டு வல்லரசுகள் போருக்கு ஆயத்தம் ஆகும்போது அந்நாட்டுத் தலைவர்கள் தங்கள் பக்கம் தான் சத்தியம் இருக்கிறது. தாங்கள் சத்தியத்திற்காகவே போர் புரிகிறோம் என்று சொல்வது நமக்குத் தெரியும். மதவாதிகளும் அவ்வாறே சத்தியத்தைப் பரப்ப, நிலைநாட்ட வேறு மதத்து மக்களுடன் சண்டை போடுவதாக் கூறுகின்றனர்.

சத்தியம் தான் மனித சமுதாயம் முழுமைக்கும் வழிகாட்டும் துருவ நட்சத்திரம் போன்றது. ஒற்றுமையை வளர்ப்பது, இனிய உறவுடன் வாழ்வதற்கு அஸ்திவாரம் போன்றது. அவ்வாறிருக்க மக்கள் சத்தியத்தின் பெயரிலும் மோதுகின்றனர் ஏன்? நாட்டுக்கு ஒருவித சத்தியமும், வெவ்வேறு மதங்களுக்கு வெவ்வேறு சத்தியமும் இருக்கின்றனவா? இல்லையே பின்னர் ஏன் சண்டை?

காரணம்? மனிதன் மிருக நிலையில் இருந்த போது பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்த்த போட்டி மனப்பான்மை, சந்தேக மனப்பான்மை, அச்சம், ஆணவம், பேராசை போன்ற குறுகிய சுயநல இயல்புகள் இன்னும் மனிதனை விட்டு அகலவில்லை. அறிவிலும் ஆற்றலிலும் எவ்வளவோ முன்னேறி இருந்தாலும் முன்கூறிய இயல்புகள், மிருக இயல்புகள் மறைவதற்கு இன்னும் ஆயிரம் ஆண்டுகள் தேவைப்படலாம். அதுவரை மனித இனம் பூமியில் நிலைத்திருக்குமா என்னும் சந்தேகம் தோன்றுமளவு மனிதன் அழிவுப் பாதையை நோக்கிச் சரிந்து கொண்டிருக்கிறான்.

எனினும் எல்லாம் வல்ல இறைசக்தி, பாராசக்தி மனிதனை தெய்வ நிலைக்கு உயர்த்த தன்னால் இயலாது என்று கையை விரித்துவிடவில்லை. அவ்வப்போது மகான்களை தோற்றுவித்து அவர்களுடைய அறிவுரைகள், செயல்கள் மூலம் அடிப்படையில் மிருகமாகிய மனிதனை, உயர் மனிதனாக்குவதில் இடைவிடாது செயலாற்றிக் கொண்டிருக்கிறது. இதை நாம் நம்பியே, நாமும் ஒத்துழைக்க வேண்டும். அவ்வாறு நாம் ஒத்துழைப்பதற்கு முதல் தேவை நாம் நம் அறிவின் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும். மேலும் அறிவின் நெறியைப் பின்பற்றுவதற்கு மிக மிக அவசியம் அன்பு என்னும் பசை அல்லது சாரம் என்பதை உணர்ந்து மகிழ்ச்சியுடன் செயல்படவேண்டும்.

அறிவும் அன்பும் மலர்வதற்கு சற்று தாமதம் ஏற்படும் போதெல்லாம் தெய்வ சக்திக்குப் பதில் சாத்தானின் குயுக்தி நிறைந்த தந்திர மந்திரங்கள் தலை தூக்குவதால் சத்தியம் என்னும் பெயரில் போலி கருத்துக்களுக்கு இடம் கொடுக்கிறோம். அதன் காரணமாக அசத்தியத்தையே சத்தியம் என்று கூறி நியாயப்படுத்தி சுய நலத்தை இம்மியளவு கூட விட்டுக் கொடுக்கமாலேயே ஆத்மீகம் பேசுகிறோம்.

ஒருவன் தன் தேவைகளுக்கு மேல் சொத்து சேர்ப்பானாகில், மற்றவருடைய தேவை அந்த அளவுக்கு பூர்த்தி செய்ய இயலாமல் குறைபட்டு நிற்கும். அவ்வாறு பிறருடைய உழைப்பின் பலனை தனது என்று உரிமை கொண்டாடி சொத்து சேர்ப்பதை நியாயப்படுத்திக் கொண்டு வல்லவர்கள் இதுவரை நலிந்தோரை அடிமைப்படுத்தியே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். உள்ளவர்கள், இல்லாதவர்கள் என்னும் பிரிவுகளின் இடைவெளி அகலமாகவே விரிந்து கொண்டிருக்கிறது.

'சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை' இந்த உரிமையை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது, பறிக்க முடியாது என்று கூவிக் கொண்டு மகாத்மாவின் தலைமையில் விடுதலைப்

போராட்டம் நடத்தினோம். நாடும் அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. ஆனால் இன்னும் நம் கிராமங்கள் விடுதலை பெறவில்லையே. கிராம மக்கள் நகர வாசிகளின் அடிமைகளாகவே இன்னும் வாழ்கின்றனர். சத்தியத்தைப் பற்றி, நியாயத்தைப் பற்றி, தனி மனித சுதந்திரத்தைப் பற்றி வாய் கிழியப் பேசும் நகரவாசிகள் சத்தியம் என்பது ஏதோ ஆகாயத்தில் இருப்பது, நம் தினசரி வாழ்க்கையோடு சம்பந்தமில்லாத ஒரு கற்பனை கருத்து (abstract ideal) என்று தான் நினைக்கிறோம். தெரிந்த உண்மையை நம் வாழ்க்கையில் கடைபிடிக்க இயலாத நிலையில்தான் வாழ்கிறோம். அநியாயத்தை நியாயப்படுத்திக் கொண்டு வாழும் மற்ற எல்லாரையும் போலவே தான் வாழ்கிறோம். நாம் எல்லோருமே சூழ்நிலைகளாலும் வாய்ப்பு வசதிகளாலும் உருவானவர்கள் என்பதுதான் உண்மை , அது தான் சத்தியம்.

முதலில் சத்தியம் என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். ஒரே வாக்கியத்தில் விளக்க முடியுமா? முடியாது. ஏன் விளக்க முயற்சி செய்யலாம். சூரிய ஒளி போன்று பிரகாசமானது. சந்தேகத்திற்கு இடம் இல்லாதது. அதனால் தான் உடம்புக்கு மெய் என்று சொல்கிறோம், சத்தியம் என்பது ஒரு பொருளா? (சூரிய ஒளி, காற்று, நீர் போன்று) அல்லது பொருட்களின் இயக்கமா? பூமியின் ஆகர்ஷண சக்தி போன்ற விதியா? அல்லது நல்லது, தீயது கடினம் மென்மை போன்ற தன்மைகளின் எண்ணங்களா? என்று அறிய விரும்பி முடிவில் இறைசக்தி போன்ற ஒரு நிரந்தர உண்மைதான், இல்லை, இறை சக்தியேதான் சத்தியம் என்ற முடிவிற்கு வருகிறோம். அதனால் தான் கடவுள் சாட்சியாக நாம் சத்தியம் செய்து சொல்கிறோம். சத்தியம் தூய்மையானது. கறைபடாதது, மாற்றமில்லாது வலிமையானது. சக்தியேதான் சத்தியம் என்று சொல்லுமளவு உறுதியானது. அதனால் தான் சத்தியமேவ ஜயதே என்ற சுலோகம் நம் தேசியக் குறிக்கோளாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

சத்தியம் மிக மிக உறுதியானது தான். ஒடியுமே தவிர வளையாது. ஆனால் சத்தியத்தைப் பற்றி பேசும் நாமே, குறுகிய சுயநலத்திற்காக, எவ்வளவு வளையச் சொன்னாலும் வளையத் தயார், வளைந்து கொண்டே இருக்கிறோம். முதுகை வளைத்துக் கொண்டேயிருக்கிறோம். முதுகில் சவாரி செய்பவன் கொடுக்கும் அற்ப சௌரியங்களுக்காக, பதவிக்காக, கௌரவத்திற்காக அசத்தியத்தைப் பார்க்கும்போதெல்லாம் கண்களை மூடிக் கொள்கொள்கிறோம். சத்தியத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள். நாமோ, நாம் பெற்றுவரும் அற்ப மரியாதையும் பதவியும், பறிபோகாமல் தக்க வைத்துக் கொள்வதற்காக அசத்தியம் நடந்திருந்தாலும் அதை சுட்டிக் காட்டி திருத்த முயற்சி செய்யாமல், வாயை திறக்காமல் சபையை அலங்கரிப்போம். ஆகையால் சத்தியத்தைப் பற்றி பேசுவது எழுதுவது தவிர அன்றாட வாழ்க்கையில் நெளிந்து வளைந்து கொடுத்து தான் நம்மால் வாழ்க்கை நடத்த முடிகிறது. தலைவர்களென போற்றப்படுபவர்களின் நிலைமைகளிலும் அதிக வித்தியாசமில்லை. சத்தியத்திற்காகப் போராடுவதற்கு, மகாத்மா காந்தியடிகளுக்கிருந்த தன்னலம் தவிர்த்த, அச்சமின்மை, துணிச்சல், தியாக உணர்வு பட்டப்படிப்புகளால் மட்டும் வருமா?

12. **வாலைப் பிடித்தது போல**

மாடு பிடிக்குச் சிக்காமல் ஓட முயலும் போது தும்புக் கயிற்றைப் பிடித்து மாட்டைக் கட்டுப்படுத்தாமல், மாட்டின் வாலைப்பிடித்து நிறுத்த முயல்வது போன்றுதான் நாம் செய்யும் பல காரியங்களும் நடக்கின்றன. இந்தக் கிராமியப் பழமொழி தனி நபர்களுடைய செயல்களுக்குப் பொருந்துவது போலவே, பல சமூக ஸ்தாபனங்களின் செயல்முறைக்கும் பொருத்தமாகவே இருக்கிறது.

எதை முறைப்படி காலாகாலத்தில் செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல் காலங்கடந்த பின் அவசரமாகச் செய்ய முயல்வதற்குத்தான் இந்தப் பழமொழி முற்றிலும் பொருந்தும்.

தனி நபர்களும், உணவை விட, உடல் ஆரோக்யத்தைவிட, ஆடையலங்காரத்திற்கும், சடங்கு சம்பிரதாயங்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து உடல்நிலை கெட்ட பின்னர் மருத்துவர்களை நாடுகிறார்கள்.

ஜனநாயக அரசும் கிராமங்கள்தான் இந்தியாவின் உயிர்நாடி என்பது அறிந்தும், கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கும், விவசாயத்திற்கும் முதல் முக்கியத்துவம் கொடுக்காமல், நகரங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை வசதிகளைப் பெருக்குவதில் அதிக கவனம் செலுத்தியது. அதனால் அவர்களுடைய பேராசையையும் சுயநலத்தையும் வளர்த்து கீழ்த்தரமான மக்களை உருவாக்கி அவர்களை ஆட்சிபீடங்களில் அமர்த்தியது. அதன் பலனாக கிராம மக்களும் எல்லாவித அரசியல்வாதிகளின் தீய சக்திகளுக்கு இரையாகி எளிமை, நல்லெண்ணம், ஒற்றுமை முதலிய சீரிய பண்புகளை இழந்து நோய்வாய்ப்பட்ட நிலையில் வாழ்கின்றனர்.

இந்த நிலைக்குக் காரணம் அரசு பீடத்தில் அமர்ந்தவர்கள், அண்ணல் காந்தியடிகள் காட்டின நெறிமுறைகளைப் புறக்கணித்துவிட்டு, இப்பொழுது திடீரென்று விழித்துக் கொண்டவர்கள் போல, கிராமப் பஞ்சாயத்து சட்டங்களைச் சீர்திருத்தி செயல்பட முனைந்திருக்கின்றனர்.

இதுவேதான் தும்பை விட்டு வாலைப் பிடித்தது போல என்னும் பழமொழிக்கு உதாரணம்.

13. **சர்வோதயமும் சிக்கனமும்**

மகாத்மா காந்தி அடிகள் உலக மக்களுக்கு எடுத்துரைத்த வாழ்க்கைத் தத்துவம் தான் சர்வோதயம் என்பதை நாம் அறிவோம். சர்வோதயத்தில் சிக்கன வாழ்க்கையும் ஒரு முக்கிய அம்சமாகும்.

சிக்கனம் என்றால் அவசியமான தேவைகளுக்குக் கூட செலவு செய்ய மனம் வராமல் கஞ்சத்தனமாக வாழ்க்கை நடத்துவது அன்று. அநாவசியமாக ஊதாரித்தனமாக செலவு செய்யமால், கட்டுப்பாடுடன் தேவைக்கு அவசியமான அளவு செலவு செய்வதைத்தான் சிக்கனம் என்று சொல்ல வேண்டும்.

சிக்கனமாக வாழத்தெரியாதவரால் பொறுப்புள்ளவராக பணியாற்ற முடியாது. நேர்மையுடன் பணியாற்றுவதும் அவரால் இயலாது என்றுதான் சொல்ல வேண்டும். தம் சொந்தக் குடும்பச் செலவு விஷயங்களில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முயலாதவர்களால் பொதுக் காரியங்களில் எவ்வாறு சிக்கனத்தைக் கடைபிடிக்க முடியும்?

ஆனால் நாம் பார்ப்பது என்ன? தம் சொந்த காரியங்களுக்காக சொந்த செலவில் 2ம் வகுப்பு ரயில் பயணம் செய்பவர்களும், பொதுக்காரியங்களுக்காக பொதுச் செலவில் பயணம் செய்யும்போது முதல் வகுப்பில் தான் பிரயாணம் செய்கிறார்கள். தம் சொந்தக் காரியங்களுக்காக பயணம் செய்ய நேரும்போது ரயில் பயணம் செய்பவர்கள் கூட பொதுக் காரியங்கள் என்னும் போது விமானப் பயணத்தையே, பொதுச் செலவில் மேற்கொள்கின்றனர். தம் சொந்த விஷயமானால் கடிதம் மூலமோ தொலைபேசி மூலமோ காரியத்தை முடிக்க முயல்பவர்கள் பொது விஷயமானால் டில்லிக்கு அடிக்கடி விமானத்தில் பறக்கிறார்கள். தாம் பொறுப்பேற்றுள்ள ஸ்தாபன காரியங்கள் அப்படியே தேங்கிக் கிடந்தாலும் மாதத்தில் பல நாட்கள் தலைநகரில் தான் கழிப்பார்கள். அதனால் பயணப்படி போன்ற உபரி வருமானமும் இருக்கிறது.

இதன்மூலம் நமக்கு என்ன தெரிகிறது? சர்வோதயம் பிறருக்கு உபதேசிப்பதற்காகத் தான் என்று தெரிகிறது. தாம் உபதேசிப்பதைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடிக்காவிட்டால், பொதுமக்களை சர்வோதய இயக்கத்தின் பக்கம் ஈர்க்க முடியாது என்பதைத் தலைவர்கள் உணர வேண்டும்.

மதுரை நகரில் சர்வோதய இயக்கத்தின் தலைவர்கள் எனக் கருதப்படுபவர்களில் இருவருடைய மகன்களின் திருமணத்திற்கு வெவ்வேறு நாட்களில் போய் வந்தேன். என்ன ஆடம்பரம்? சாதாரண வியாபாரிகளில் வசதிபடைத்தவர்களின் குடும்பத்து திருமணங்களைப் போன்றே சர்வோதயத் தலைவர்கள் குடும்பத்துத் திருமணங்களும் ஆடம்பரமாக நடந்தன. சிறப்பாக மணமகன் ஆங்கிலேயர் உடையில் காட்சியளிக்கிறார். சினிமாப் பாட்டுக் கச்சேரிக்கும் ஏற்பாடாகி இருந்தது. இதை எழுதுவதற்கு என்மனம் வருத்தப்படுகிறது. சிக்கனம் பிறருக்கு உபதேசம் செய்வதற்கு மட்டும் தானா?

14. **சீர்த்திருத்த இயக்கங்கள்**

மனித வாழ்க்கை வரலாற்றில் ஒவ்வொரு கால கட்டத்திலும் புதிய தலைவர் ஒருவர் தோன்றி சிந்திக்கத் தூண்டுகிறார். அறிவுக்கு ஒவ்வாத மூட நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் கைவிட்டு முன்னேற்ற பாதையில் செல்லத் தூண்டுகிறார். தலைவருடைய சொல்லாற்றல் இளைஞர்களை ஈர்க்கிறது. பொதுவாக, இளைஞர்கள் சுய சிந்தனை குறைந்தவர்களாகவும், ஒஉதுமையில் உற்சாகம் காட்டுபவர்களாகவும் இருப்பதால் புதிய தலைவரின் கீழ், ஒருவித சீர்த்திருத்த இயக்கம் உருவாகிறது.

அத்தகைய இயக்கங்களில் ஒன்றுதாள் தந்தை பெரியார் ஈ.வே.ராவின் திராவிடக் கழகத்து சுயமரியாதை இயக்கம். இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம் ஜாதிப் பிரிவினரால் நிகழ்ந்த சமூக அநீதிகளைக் களைந்து, சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் மற்றவர்களுடன் சமமாக, சுயமரியாதையுடன் வாழ்வதற்கு வழிவகுப்பதுதான். இந்த நோக்கத்தைப் பற்றி எந்த அறிவாளியாலும் குறை சொல்ல முடியாது. உயர்ந்த நோக்கம், நியாயமான கோரிக்கை எதுவாக இருந்தாலும் அதிக எதிர்ப்புகள் இல்லாமல் பெரும்பான்மை மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு சீக்கிரமாகவே இயக்கம் வெற்றியடையும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் நோக்கம் எதுவாயிருந்தாலும் ஒவ்வொரு சீர்த்திருத்த இயக்கமும் ஒரு போராட்டமாகத்தான் கருதப்படுகிறது. அதாவது கட்சிகள் உருவாகி வெற்றி தோல்வியில் முடியும் போராட்டமாகத் தான் இயங்குகிறது.

நன்றாகச் சிந்தித்துப் பார்த்தல் நியாயமாகப் பார்த்தால், மக்களின் நன்மையையே கருத்தில் கொண்டு நடத்தப்படும் இயக்கத்திற்கு எதிர்ப்புகள் தோன்றுவதற்கு காரணமில்லை. எனினும், ஜாதி பிரிவினைகளாலும், பகுத்தறிவுக்கு ஒவ்வாத மூட நம்பிக்கைகளாலும் பலனடைந்து வரும் கும்பல் எதிர்க்கத்தான் செய்யும். இந்தக் கும்பல் யார் என்பதை இணங்கண்டு இந்த இயக்கத்துத் தலைவர் உரக்கப் பிரகடனம் செய்யத்தவறவில்லை. அவர்கள்தான் பிராமணர்கள். இந்த பிராமணர்கள் சுயமரியாதை இயக்கத்தை எதிர்த்துப் போராடினார்களா? அவ்வாறு பிராமணர்கள் போராட்டம் நடத்தினதாகவும் தெரியவில்லை. ஜாதி வித்தியாசம் பாராட்டுவதை அகற்றி எல்லாரும் சமம் என்னும் உணர்வைப் பரப்புவதற்கு பகுத்தறிவின் வளர்ச்சி மிக அவசியமாகும். மூட நம்பிக்கைகளை நீக்குவதும் விஞ்ஞான மனப்பான்மையை வளர்ப்பதும் மிக மிக அவசியம் என்பதை வலியுறுத்தும் இயக்கமாகவா சுயமரியாதை இயக்கம் செயல்பட்டது? பிராமண துவேசமும், நாத்திக பிரசாரமும் தான் இயக்கத்தின் முக்கிய செயல்பாடுகளாக வளர்ந்தன.

ஏழை எளிய மக்களின், தாழ்த்தப்பட்ட மக்களின் நலனையே முக்கியமாகக் கருதி இயக்கம் நடத்தப்பட்டிருந்தால் முதலில் வறுமையையும், அறியாமையையும் அகற்றுவதற்கான திட்டங்கள் வகுத்து மக்கள் ஆதரவுடன் இயக்கம் செயல்பட்டிருக்கும். கல்வியறிவின் மூலமாகத்தான் மூட நம்பிக்கைகளை அகற்ற முடியும். கல்வியறிவு வளர்வதற்கு முதல் வேலையாக வறுமையை ஒழிப்பதற்கு வல்லவர்கள் எளியவர்களை ஏமாற்றிச் சுரண்டி வாழும் முறைக்கு முடிவு கட்ட வேண்டும். ஜாதி வித்தியாசம் பாராட்டுவதற்கு முக்கிய காரணம் சமூகத்தில் நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் தான். பொருளாதார ரீதியில் கொத்தடிமைகளாக வாழும் மக்களின் முன்னர் சுய மரியாதையைப் பற்றி பேசுவது கேலிக்கூத்துதான். பொருளாதாரச் சுதந்திரம் பெறாதவர்களிடம் சிந்தனைச் சுதந்திரத்தையோ, சுயமரியாதை உணர்வையோ எதிர்பார்க்க முடியாது.

மக்களிடையே பகுத்தறிவை வளர்ப்பது, பகுத்தறிவுக்கு ஒவ்வாத மூடநம்பிக்கைகளை விடச் செய்வது அவ்வளவு சுலபமான, எளிய காரியமன்று. பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்க்கப்பட்ட மூட நம்பிக்கைகள் ஆபாசப் பேச்சாலோ ஆவேசப் பேச்சாலோ மறைந்து விடாது. அன்பையும் அறிவையும் கைவிட்டு, வசை மொழிகளாலோ, முரட்டுப் பேச்சாலோ சீர்திருத்தத்தைக் கொண்டு வரமுடியும் என்று செயல்படுவதை புத்திசாலித்தனம் என்று சொல்லவியலாது.

சுயமரியாதை இயக்கத்தலைவர் செய்த முதல் தவறு பிராமணர்களை எதிரிகளாகப் பாவித்து, அவர்களை அந்நியர்களென்றும் ஆரியர்களென்றும் ஒதுக்கிப் பிரித்து வைத்துப் பேசினது. பிராமணர்களும் நம்மவர்கள்தான். நம் தமிழ்நாட்டிலேயே ஆயிரம் ஆண்டுகளாக வாழ்பவர்கள்தான். மேலும் அறிவாளிகளும் கூட அவர்களுடைய முன்னோர்கள் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன் செய்த குற்றத்திற்காக இப்பொழுது நம்கூட நம் நாட்டில் வாழும் பிராமணர்களை பொறுப்பாளிகளாகக் கூறி பகைமையை வளர்ப்பது புத்திசாலித்தனம் அல்ல. பிரமாணர்களுடைய ஒத்துழைப்பையும் பெற்றுத்தான் சமூகசீர்திருத்தம் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கையுடன் செயல்பட்டிருக்கவேண்டும்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு எவ்வாறு நிலவளம், நீர்வளம், கனிவளம், வனவளம் அவசியமோ, அவ்வாறு தான் அறிவாளின் கூட்டமும் அவசியமாகிறது. உடலுழைப்பால் வாழும் மக்களைப் பாதுகாக்க வேண்டியது போலவே அறிவாளிகளையும், கலைஞர்களையும் நாட்டுச் சொத்தாகக் கருதி ஆதரவு கொடுத்து நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த வேண்டும் அவர்கள் தவறு செய்தால் அதைச் சுட்டிக்காட்டி, திருத்த வேண்டுமே தவிர பகைவர்களாகக் கருதி விரட்டக்கூடாது. துரத்தக்கூடாது.

அறிஞர்கள், தங்களை உயர்ந்த ஜாதியினர் என்னும் செருக்கினால் உயர்வு மனப்பான்மையில் ஆயிரம் ஆண்டுகளாக ஊறிப்போனவர்கள் தம் தவறுகளை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். கீழ்ப்படியில் இருந்து கொண்டு உயர் ஜாதியினருக்கு அவசியமான எல்லா வாழ்க்கை வசதிகளை தம் உடல் உழைப்பால் செய்து கொடுக்கும் மக்களையும் சமமாக சம மரியாதை கொடுத்து நடத்த மாட்டார்கள். அவர்கள் இன்றைக்கும், ஆங்கிலக் கல்வியறிவு பெற்றிருந்தும் மக்களில் கீழ்ப்படியில் உள்ளவர்களைத் தீண்டாதார், சூத்திரர்கள் என்று நடத்துவதைப் பார்ப்பவர்களுக்குக் கோபம் பொங்கத்தான் செய்யும்.

ஆனால் சமூக சீர்திருத்த இயக்கம் நடத்தும் தலைவர், அறிவாளியாகையால் தம் கோபத்தையும், ஆத்திரத்தையும் அடக்கி அறிவைப் பயன்படுத்தி அமைதியான வழிகளில் தீர்வு காண முயலவேண்டும். மகாத்மா காந்தி அடிகளும் நாட்டின் விடுதலைக்காக அஹிம்சை, சத்தியம் அடிப்படையில் போராட்டம் நடத்தினார். நாட்டின் விடுதலை மட்டுமல்ல சமூக, பொருளாதார சீர்திருத்தங்களையும் குறிக்கோளாகக் கொண்டது தான் அவர் தலைமை தாங்கி நடத்தின இயக்கம். தமிழ்நாட்டு பிராமணர்களும் காந்தியடிகளின் சமூக சீர்திருத்த முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைப் போடவில்லை. உதாரணமாக மகாகவி சுப்பிரமணிய பாரதியார் சமூகத்தில் நிலவிய எல்லாவித அநியாயங்களுக்கும் எதிராக அழுத்தமாக குரல் எழுப்பினார். போர்க்கொடி தாங்கினார். இக்கால கட்டத்திற்குப் பின்னர் தோன்றினது தான் ஈ.வெ.ரா.வின் தலைமையில் தோன்றின சுயமரியாதை இயக்கமும். உயர்ஜாதிகளில் ஒன்றைச் சேர்ந்த திரு.வி.கல்யாணசுந்தர முதலியார் அவர்களும் சமூக சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு மக்களின் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் முயற்சியில் தமிழில் அரிய நூல்கள் எழுதி தம் சேவையை விடாமல் செய்து கொண்டிருந்தார்.

பிராமணர்களின் உயர்ஜாதித் திமிரும், வெறியும், மூடநம்பிக்கைகளும் நம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் பரவியிருந்தவைதான். இந்த சமூக அநீதிகளை எதிர்த்து மற்ற மாநிலங்களிலும் சமூக சீர்திருத்த இயக்கங்கள் தோன்றி அறிவாளித் தலைவர்களால் நடத்தப்பட்டு கணிசமான அளவு வெற்றியும் கண்டிருக்கின்றன. சென்ற நூற்றாண்டிலேயே ராஜாராம் மோகன்ராய் உடன்கட்டை ஏறும் கொடிய வழக்கத்திற்கு சட்டங்களியற்றி முற்றுப் புள்ளி வைத்தார். அவரால் தோற்றுவிக்கப்ட்ட பிரம சமாஜ இயக்கம் குறிப்பிடத்தக்க அளவில் இந்துக்களின் அறிவுக் கண்ணைத் திறப்பதில் வெற்றிகண்டது. வட இந்தியாவில் தயானந்த சரஸ்வதி ஆரிய சமாஜ இயக்கத்தின் மூலம் அரும் பணியாற்றியிருக்கிறார். ஆந்திராவில் வீரேசலிங்க பந்துலு அவர்களும் சீர்திருத்தப் பணியாற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவராவர். நம் அண்டை மாநிலத்திலேயே கேரளாவில் மகான் நாராயணகுரு அவர்களும் சமூகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சேவை செய்வதில் முழு வெற்றி கண்டார். அறிவு வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து கோவில் தலமனைத்தும் பள்ளித் தலமாக்கி, எந்த சீர்திருத்தத்திற்கும் அடிப்படை தேவை கல்வியறிவு தான் என்பதை உணர்ந்து செயல்பட்டார்.

நாராயண குரு தம் ஜாதியினரான தாழ்த்தப்பட்ட மக்கள், மேல் ஜாதியினரால் எவ்வளவு கேவலமாக, இழிவாக, இரக்கமற்றவாறு நடத்தப்படுகிறார்கள் என்பதை நேரில் பார்த்து சகிக்க முடியாத அளவு வேதனைப்பட்டார். தரையோடு தரையாய் கீழே விழுந்து கிடக்கும் மக்களை எழுந்து நிற்க வைப்பதற்குத்தான் வழிகளைத் தேடினார். முதலாவது வழி தெய்வபக்தி, இரண்டாவது வழி ஒழுக்கம், மூன்றாவது வழி கல்வியறிவு. ஆனால் மேல்ஜாதியினருடைய கோவில்களுக்குப் போய் வழிபடும் உரிமை கொண்டாடாமல் தம் ஜாதியினருக்கென்றே கோவில்கள் கட்டுவித்து, அங்கேயே பள்ளிக்கூடங்கள் திறந்தார். வங்காளத்திலிருந்து குருதேவ் ரவீந்திரநாத்தாகூர், ஆண்ட்ரூஸ் அவர்களும் நாராயணகுருவின் சமூக சீர்திருத்த சேவையைப் புகழ்ந்து பாராட்டியிருக்கிறார்கள். பிரெஞ்சு நாட்டின் மேதை ரொமாரோலா அவர்களும் பாராட்டியிருக்கிறார். ஒரு சமூக சீர்திருத்த இயக்கம் திராவிட ஆரிய இனங்களின் மோதலாக உருப்பெற்றது நம் தமிழ் மக்களின் துர்பாக்கியம் என்றே சொல்ல வேண்டும். எல்லாத் துறைகளிலும் விஞ்ஞான அறிவு வளர்ந்து கொண்டிருக்கும் இந்த நூற்றாண்டில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட காவியமாகிய ராமாயணத்தின் அடிப்படையில் இன்றைய தமிழர்களை திராவிடர்களென்றும் ஆரியர்களென்றும் பிரித்து மோதலுக்கு அடிகோலியது மிக மிக துரதிருஷ்டமான செயல் என்பதை சொல்லத் தான் வேண்டும். ஜெர்மனியில், ஹிட்லர் ஆட்சியைக் கைப்பற்றியதும் இனவெறிளைக் கிளப்பி ஆரியர்கள் தான் ஆட்சி புரியத் தகுதி பெற்ற உயர் மக்கள் என்றும் யூதர்கள் யாவரும் எதிரிகள் என்றும் பிரச்சாரம் செய்து அவர்களை ஒழித்துக் கட்டச் செய்த முயற்சியின் பலனை நாம் எல்லோரும் அறிவோம். யூதர்கள் ஒரு விதத்தில் கெட்டவர்களாயிருந்தாலும் அவர்கள் முக்கியமாக அறிவாளிகளாகவும், உழைப்பாளிகளாகவும் இருந்தனர். ஹிட்லரின் படுகொலைக்குத் தப்பி அநேக யூதர்கள் அமெரிக்காவில் குடியேறினர். ஹிட்லரின் இனவெறி ஜெர்மானிய மக்களை எந்த நிலைக்குக் கொண்டு சேர்த்தது என்பதை வரலாறு சொல்லும்.

தமிழ்த்தாய் செய்த நற்றவத்தின் காரணமாக தமிழ் மக்கள் தங்களை திராவிடர்களென்றோ, ஆரியர்களென்றோ கருதி வாழாமல் ஒரே கலாச்சாரத்தில் வளர்ந்த காரணத்தால் வெறியைக் கிளப்பும் முயற்சிகளுக்கு இரையாகாமல் தங்களைக் காப்பாற்சிக் கொண்டனர்.

மனித வரலாற்றை எடுத்துக் கொண்டால் எந்த நாட்டிலும் ஒரே இனத்து மக்கள் தான் அந்த நாட்டில் இன்று வரை வாழ்ந்து வருகிறார்கள், மற்ற எந்த நாட்டு மக்களும் வந்து குடியேறவில்லை என்றோ, அந்த நாட்டு மக்கள் வேறு நாடுகளுக்கு கணிசமான அளவில்

சென்று குடியேறவில்லை என்றோ சொல்ல முடியாது. நாடுவிட்டு நாடு சென்று குடியேறுவதும், மனித இனத்தின் வளர்ச்சிக்காக முன்னேற்றத்திற்காகவே இயற்கையன்னை செய்யும் திருவிளையாடல் என்று தான் சொல்ல வேண்டும். அதன் மூலம் இரத்தக் கலப்படம், மொழிக்கலப்படம், கலாச்சாரக் கலப்படம் நிகழ்கிறது. மனித இனத்தின் வளர்ச்சிக்கு கலப்படம் அவசியமாகிறது.

ஒரு தாய் பிள்ளைகளுக்கு உணவு கொடுக்கும்போது கைக் குழந்தைக்கு ஒருவித உணவும் வயது வந்த பிள்ளைகளுக்கு வேறுவித உணவும் அதாவது அவரவர் ஜீர்ணசக்திக்குத் தகுந்தவாறு உணவு கொடுப்பாள். அது போன்றே கிராமங்களில் தம் உடலுழைப்பை நம்பி வாழ்க்கை நடத்தும் ஏழை எளிய மக்களிடம் சுயமரியாதையும், பகுத்தறிவு வாதமும் புகுத்துவது, உபதேசிப்பது சற்றும் ஜீரணிக்க இயலாத உணவைக் குழந்தைக்குக் கொடுப்பது போலாகும். சற்றும் கல்வியறிவு இல்லாமலும், நிலம்புலம் அதிகம் இல்லாமலும், பெரிய நிலச்சுவான்தாரர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் உழைத்துப் போடுவதே வாழ்க்கையின் குறிக்கோளாக வாழ்பவர்களிடம் சென்று உங்கள் மூடநம்பிக்கைகளைக் கைவிடுங்கள் என்று சொல்வது அவ்வளவு புத்திசாலித்தனம் என்று சொல்லவியலாது. ஏழை எளிய மக்களின் சொத்து என்பதற்கு அவர்களுடைய மூடநம்பிக்கைகள்தான், அவர்கள் நம்பும், வணங்கும் தெய்வங்களாகிய மாரியாத்தாளும், காளியும், சாத்தார் தேவதையும், பேச்சியம்மனும் தான் அவர்களுடைய சொத்து சுகம் எல்லாம்.

சமுக சீர்திருத்தம் கொண்டுவர விரும்பும் தலைவர் முதலில் செய்ய வேண்டியது ஏழை எளிய மக்களின் உழைப்பின் பலனை ஏமாற்றி உறிஞ்சி வாழும் நிலச்சுவான்தார்கள் செல்வந்தர்களின் பிடியிலிருந்து காப்பாற்றுவது தான். பின்னர்தான் வறியவர்கள் கல்வியறிவின் மூலமாகச் சிந்திக்கும் ஆற்றல் பெறும்போது தான் பகுத்தறிவுவாதமும், சுயமரியாதைத் தத்துவமும் அவர்கள் மனதில் வேலை செய்யும்.

மருத்துவர் நோயாளிக்கு மருந்து கொடுக்கும்போது நோயாளியின் நிலையையும் நோயின் தன்மையையும் அறிந்துதான் தகுந்த மருந்து கொடுப்பார். அவ்வாறு செய்யாமல் கடுமையான மருந்து ஒன்றைக் கொடுத்தால் நோயாளியின் உயிரைத்தான் கொண்டுபோகும்.

சுயமரியாதை, பகுத்தறிவுவாதம் என்னும் கோட்பாடுகளின் பெயரில் இயக்கம் நடத்தினவர், ஏழை மக்களைச் சுரண்டிப் பிழைக்கும் செல்வந்தர்களின் ஆதரவால் ஊக்குவிக்கப்பட்டு செயல்பட்டதால், பொருளாதார ஏற்றத்தாழ்வை நீக்கும் இயக்கமாக இந்தச் சீர்திருத்த இயக்கம் செயல்படவில்லை என்பது எல்லாருக்கும் தெரிந்ததே. ஆங்கில அரசு வட இந்தியாவில் இந்து முஸ்லீம்களுக்குள் பிளவை உண்டு பண்ணி தம் பிரித்தாளும் கொள்கையைக் கடைபிடித்து வந்தது போலவே (தமிழ் நாட்டிலும்) தென்னிந்தியாவிலும் பிராமணரல்லாத மேல் ஜாதித் தலைவர்களைத் தூண்டி விட்டு Justice party நீதிக்கட்சி என்னும் பெயரில் ஒரு பிளவை வளர்த்து வந்தது. இந்த நீதிக்கட்சியின் தலைவர்களில் பெரும்பாலோர் நிலச்சுவான்களும், ஜமீன்தாரர்களும், செல்வந்தர்களும் ஆவார்கள். இவர்களேதான் சுயமரியாதை இயக்கமாகிய திராவிட இயக்கத்திற்கும் ஆதரவு தந்தவர்கள். ஆகையால் தந்தை பெரியார் தம் இயக்கத்தில் பொருளாதாரச் சீர்திருத்தத்திற்கு எவ்வித முக்கியத்துவமும் கொடுக்கவில்லை.

## 15. பேசிக்கொண்டே இருப்போம்

மணிக்கணக்கில், நாட்கணக்கில் ஆண்டு முழுவதும் விடாது பேசிக்கொண்டே இருப்போம். ஒரே விஷயத்தைப் பேசிக்கொண்டே இருப்போம். எழுதிக் குவித்துக் கொண்டே இருப்போம். அது எது? அதுவா, எதை நம் வாழ்க்கையில் மனமாறக் கடைப்பிடித்து வாழ இயலாது என்று நினைத்து, கடைப்பிடிக்க அதிக முயற்சி செய்ய மாட்டோமோ, அதை தினம் பேசுவோம். மேடைகளில் பேசுவோம். அரங்குகளில் பேசுவோம். பேசிக்கொண்டே இருப்போம். அதைக் கேட்பவர்களாவது கடைப்பிடிப்பார்களா? அதுவும் இயலாது.

பின்னர் எதற்காகப் பேசுகிறோம்? எழுதுகிறோம். அது நம் பிழைப்புக்கு ஒரு தொழில். மேலும் அதனால் நமக்கு சமூகத்தில் மரியாதையும் பாராட்டும் கிடைக்கிறது. வசதியாக வாழவும் முடிகிறது.

யாராலும் வாழ்க்கையில் கடைப்பிடிக்க இயலாததுதான் என்னவாம்? அதுதான் எல்லாவற்றிலும் மிக மிக எளியது, இனியது, நல்லது, உயர்ந்தது, சிறந்தது. நாம் ஆதி காலம் தொட்டுப் பேசிப் பேசி வியாக்யானம் செய்து, பிரசாரம் செய்து, எழுதிக் குவித்துக் கொண்டு வருவது.

அதுதான் பிற உயிர்களைத் தன்னுயிரைப் போல் பாவித்து, அன்பு செலுத்தி, உதவி செய்து, கூடி மகிழ்ந்து வாழ்வது. இவ்வளவு தானா என்று கேட்காதீர்கள். முயற்சி செய்து பாருங்கள். அவ்வாறு வாழ ஓரிருவர் முயற்சி செய்தால் அவர்களைக் கேலி செய்வோம். அல்லது அவர்களை மகாத்மாக்கள் ஆக்கிப் பூஜை செய்வோம். நாம் மட்டும் அசைய மாட்டோம்.

## 16. இது வியாபார யுகம்

இந்து புராணங்களின் பிரகாரம் நாம் வாழும் காலத்தைக் கலியுகம் என்று சொல்வதுண்டு. அதைவிட நம் காலத்தை வியாபாரயுகம்' (The Age of Commerce) என்று சொன்னால் மிகப் பொருத்தமாயிருக்கும். இன்றைய கல்லூரிப் பாடங்களிலும் வியாபாரத் தொழில் விஞ்ஞானம்' (The Business Management) முக்கிய இடம் பெற்றுவிட்டது. அதற்கு உதவுவதற்காக கணினி' (Computer) யந்திரமும் வாழ்க்கையின் முன்வரிசையில் இடம் பெற்றுவிட்டது.

மனித சமுதாயத்தின் நன்மையைக் கருதி தோன்றியிருக்கும் பல அமைப்புகளும், பல துறைகளும் வியாபாரிகளின் லாபத்தையே பெரிதாகக் கருதிதான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று சொன்னால் தவறாகாது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், ஆத்மீகப் பிரசார அமைப்புகள், மருத்துவத்துறை, கல்வித்துறை, இலக்கியம், செய்தித்தாள்கள், வார மாத இதழ்கள், சினிமாத்துறை, விளையாட்டுத்துறை முதலிய ஒவ்வொன்றும் வியாபாரிகளின் லாபத்தையே முக்கியமாகக் கருதி இயங்கும் அமைப்புகளாகவே மாறிவிட்டன.

எல்லாவற்றிற்கும் மேலாக மக்கள் சேவைக்காகவே தம்மை அர்ப்பணித்துக் கொள்வதாகத் தம்மை பிரகடனம் செய்யும் அரசியல்வாதிகள் கொள்ளையடிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு இயங்கும் அமைப்பாக அரசியல் பணியை மாற்றிக் கொண்டுவிட்டனர். சர்வ தேசீய வியாபார நிறுவனத்தின் கொள்ளையடிக்கும் தொழிலுக்கு ஆதரவாகவும் துணையாகவும் அரசியல்வாதிகள் இயங்குவதையும் பார்க்கிறோம்.

சமுதாயத்திற்கு மிக அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யும் விவசாயத் துறையையும் வியாபாரத் துறையாக மாற்றிவிட்டார்கள். நிலத்தில் உழுது பாடுபடும் விவசாயியின் வருமானத்தை விட பன்மடங்கு, உணவுப் பொருட்களை விநியோகம் செய்யும் வியாபாரி பெறுகிறான். விவசாயியின் வாழ்க்கைத் தரத்தை விட வியாபாரியின் வாழ்க்கைத்தரம், வாழ்க்கைச் சௌகர்யங்கள் அதிகமாகவே கிடைப்பதற்கான அமைப்பாகத் தான் சமுதாயம் இயங்குகிறது.

விவசாயி, தானே தன் தொழிலை நடத்தி தன்னிறைவு பெற்று வாழ்க்கை நடத்த வியாபாரம் உதவுவதில்லை. பன்னாட்டு வியாபார நிறுவனங்கள் நம் விவசாய முறையையே கட்டுப்படுத்துகின்றன. அடுத்த ஆண்டு விவசாயத்திற்கு வைத்துக் கொள்ள வேண்டிய விதை நெல்லைக் கூட தம் வசம் வைத்துக் கொள்ள விவசாயிக்கு உரிமை மறுக்கப்படுகிறது. வியாபாரியின் தயவை எதிர்பார்த்துத்தான் விவசாயம் நடத்த வேண்டியிருக்கிறது. உரம் பயன்படுத்தும் விஷயத்திலும் விவசாயி பரம்பரையாய்ப் பயன்படுத்தும் இயற்கை உரங்களைப் பயன்படுத்த விடாமல் கனரக தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் செயற்கை உரங்களை வியாபாரியிடமிருந்து வாங்கித்தான் விவசாயம் செய்ய முடியும்.

நோய் வராமல் உடலைப் பாதுகாத்துக் கொள்ளும் விஷயத்திலும் மக்கள் பரம்பரையாய் பயன்படுத்தி வந்த இயற்கை மருத்துவத்தைக் கைவிட்டு வியாபாரிகளிடமிருந்து செயற்கை மருந்துகள் வாங்கி பயன்படுத்தித்தான் வாழ முடியும் என்னும் நிலைமை வந்துவிட்டது. மருத்துவமே ஒரு பெரிய வியாபாரமாகி விட்டது. மருத்துவர்களும் தம் தொழில் மூலம் சமூக சேவை செய்வதை மறந்து கொள்ளை லாப வியாபாரிகளைப் போல் தம் தொழிலை வியாபாரமாக்கிவிட்டனர்.

கடவுள் வழிபாடு, விழாக்கள், கோவில் பூஜை, யாவும் இன்று வியாபாரிகளுக்காகவே நடத்தப்படுகின்றன. மக்கள் நாள்தோறும் பார்க்கும், ரசிக்கும் சூரிய சந்திரர்கள், நட்சத்திரங்கள் இவற்றை வணங்கி மகிழ்ந்தால் போதாதா? குறிப்பிட்ட கோவில்களில்தான் கடவுள் காட்சியளிக்கிறார் என்று சொல்லிக் கொண்டு கூட்டங்கூட்டமாக மக்கள் செல்வதால் பயனடைபவர்கள் வியாபாரிகள்தான். நம்மைச்சுற்றியுள்ள தாவரங்கள், செடி கொடிகள், மலர்கள், பறவைகள், மிருகங்கள் முதலியவற்றை பிரியத்துடன் பார்த்து ரசித்து மகிழ்வதற்கும் வியாபாரிகள் நடத்தும் சுற்றுலாக்களில் கலந்து பணம் செலவு செய்தால்தான் முடியும் என்னும் நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள்.

கல்வித்துறைகளில் வியாபாரம்தான் நடக்கிறது. சிறுவர், சிறுமியர்களுக்கு நடத்தப்படும் பள்ளிகளும், அந்நிய மொழி மூலம் கற்பிக்கும் பள்ளிகளின் நோக்கமும் வியாபாரம்தான். முறைசாராக்கல்வி என்றும், அஞ்சல் வழிக் கல்வியென்றும் நடத்தப்படும் அமைப்புகளின் நோக்கமே வியாபாரம் தான்.

மக்களிடையே அறிவைப் பரப்புவதற்காக உதவும் சினிமாவும் தொலைக் காட்சியும் வியாபாரிகளின் கையில் சிக்கியிருப்பதால் அறிவைப் பரப்புவதற்குப் பதில் கீழ்த்தரமான ஆபாச உணர்வுகளையும் வன்முறையையும் தூண்டும் குறிக்கோளுடன் பண லாபத்தையே முக்கியமாகக் கருதி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

செய்தித் தாள்கள் வார, மாத இதழ்கள் நடத்துவோரும் காலத்தை அனுசரித்துப் போனால்தான் முடியும் என்று சொல்லிக் கொண்டு கீழ்த்தரமான குப்பைகளையும் பரிமாறத் தயங்குவதில்லை. நோக்கம் பணம்தான். நூல்கள் எழுதுவோரும், கவிஞர்களும் ஓவியர்களும் தம் படைப்புகளை வியாபாரப் பிரச்சார நோக்கத்தை கவனத்தில் வைத்துதான் உருவாக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

## 17. ஊர் வாய்

பொதுவாக நம் நாட்டு கிராம மக்கள் தமக்குத் தெரிந்த ஒருவர் நோய்வாய்ப்பட்டு சிரமத்துடன் தெருவில் நடந்து செல்வதைப் பார்க்கும்போது இரக்கத்துடன் என்ன நேர்ந்தது என்று விசாரித்து நோய்க்கு என்ன சிகிச்சை செய்ய வேண்டும், எந்த மருத்துவரிடம் அல்லது மாந்திரீகரிடம் போனால் குணமாகும் என்று தமக்குத் தெரிந்த கோளாறுகள், உபதேசங்கள், யோசனைகள் சொல்லாமல் விடமாட்டார்கள். இது அவர்களுடைய சுபாவம். அது போன்று அவர்கள் தமக்குச் சம்பந்தமில்லாத ஊர் விஷயங்களைப் பற்றியும் விமர்சனம் செய்வதுண்டு.

நீதிபதி நீதிமன்றத்தில் நன்கு விசாரித்து தீர்ப்பு கூறும் வரை கிராம மக்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடாமல், தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளாமல் சும்மா இருக்க மாட்டார்கள். அந்த சுபாவத்தை, அந்த உரிமையை விட்டுக் கொடுக்க மாட்டார்கள். அதனால்தான் ஊர் வாய்க்கு உலை மூடி கிடையாது என்னும் பழமொழியும் தோன்றியது.

கல்வி கற்றவர்களாயிருந்தாலும் சரி, கல்லாதவர்களாயிருந்தாலும் சரி, நாட்டு நடப்பைப் பற்றியும், பலவித சமூக, அரசியல், ஆத்மீக இயக்கங்களைப் பற்றியும், செயல்பாடுகளைப் பற்றியும், பலாபலன்களைப் பற்றியும் சிந்திக்காமலும், விமர்சனம் செய்யாமலும் விட மாட்டார்கள், ஏன்? அவர்களுடைய காது, கண், மூக்கு முதலிய ஐம்புலன்களும், மனமும் எப்பொழுதும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தமக்கு சம்பந்தமில்லாத விஷயங்களைப் பற்றியும் கூட விமர்சித்துக் கொண்டு இருப்பார்கள். அது அவர்களுடைய பிறப்புரிமை. நல்லவற்றைப் பாராட்டுவார்கள். அது போன்ற குற்றங்குறைகளையும் விமர்சிப்பார்கள். மேலும் நாம் மக்கள் ஆட்சியில் வாழ்வதால் பேச்சுத் சுதந்திரம் பெற்றிருக்கிறோம். வீட்டிலும் சாப்பாடு ருசியாயிருந்தால் பாராட்டுவதும், சப்பென்று ருசியில்லாதிருந்தால் குறை கூறுவதும் வழக்கம்தான்.

ஆம், இன்று நாம் மக்களாட்சியில்தான் வாழ்கிறோம். பேச்சுத் சுதந்திரம் நிறைய இருக்கிறது. ஆகையால் கிராம மக்கள் மட்டுமல்ல, எல்லோருமே தத்தம் கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். இந்தச் சுதந்திரமும் யதேச்சதிகார ஆட்சியில் இருக்கவே இருக்காதுதான். பலவித சுயநலங்களையும், பலவித குறிக்கோள்களையும் மனதில் வைத்து ஒவ்வொரு இயக்கமும் கட்சியும் தத்தம் கொள்கைகளைப் பரப்புகிறார்கள். பத்திரிகைகள், நூல்கள், தொலைக்காட்சி, ரேடியோ, சினிமா போன்றவற்றைப் பயன்படுத்திக் கொள்ளையடித்துக் கொண்டும், தம்மைச் சார்ந்தவர்களின் வயிற்றுப் பிழைப்புக்கும் அகங்காரத்திற்கும் வழிவகுத்துக் கொண்டும், நாட்டு மக்களின் ஒட்டு மொத்த நலன்களைக் கூட அந்நிய நாட்டு வியாபாரிகளிடம் அடகுவைத்துக் கொண்டும் இருப்பதைப் பார்த்து, வருத்தத்தினால் புலம்பும் கிராமவாசி ஒருவர் தம் எண்ணத்தை சர்வோதய இயக்கத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நண்பரிடம் வெளியிடுகிறார். இந்த நாட்டை, இந்த சமுதாயத்தைக் காப்பாற்ற, ஒழுங்குபடுத்த சர்வோதய இயக்கத்தினால் மட்டும் முடியாது. ராணுவ ஆட்சியினால் மட்டுமே முடியும் என்று சொல்கிறார்.

நம் சர்வோதய இயக்கப் பிரசார நண்பர் கூறும் பதில் என்ன? புலம்பும் கிராமவாசி, ராணுவ ஆட்சியினால் மட்டும் நிலைமையை சமாளிக்க முடியும் என்று கூறும் நண்பர் நல்லவர். இராணுவ ஆட்சியினால் இத்தகைய நல்லவர் கூட வாய்திறக்க இயலாது. இராணுவ ஆட்சியின் பலாத்காரக் கொடுமையை அனுபவித்த ஜெர்மனி, இத்தாலி போன்ற நாட்டு மக்கள் இவ்வாறு கூற மாட்டார்கள். காந்திய அகிம்சை நெறியை இத்தகையோர் முற்றும் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்கிறார்.

சர்வோதயத் தத்துவத்தைப் பற்றி ஒன்றும் தெரியாமல் பேசுகிறார் என்றும் மேலும் ராணுவ ஆட்சியைப் பற்றியும் கிராமவாசிக்கு ஒன்றும் தெரியாது என்ற நினைப்பில், தமக்கு மட்டும் எல்லாம் தெரியும் என்னும் அகங்காரத்தில் பதிலளிக்கிறார்.

சர்வோதய நண்பர்களுக்குத் தெரிந்ததெல்லாம் யதேச்சதிகாரம் என்றாலே ஹிட்லர், முசோலினி, ஸ்டாலின் ஆட்சிகளைப் பற்றித்தான்.

மனித வரலாறு முழுவதிலும் மன்னர்கள் ஆண்ட போதெல்லாம் சர்வாதிகாரர்களாகத்தான் ஆட்சி நடத்தியிருக்கிறார்கள். சொல்லப் போனால் ராமராஜ்யம் என்று பெருமையுடன் பேசப்படும் ஆட்சியும் ஒரு விதத்தில் சர்வாதிகார ஆட்சியாகத்தான் இருந்திருக்கிறது. உதாரணமாக ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ராமபிரான் ஆண்டு கொண்டிருந்தபோது பத்து வயது பிராமணப்பையன் இறந்து போனதால் அவன் தந்தை ராமபிரானிடம் வந்து முறையிடுகிறார். அவர் ஆட்சியில் எங்கோ பயங்கர தவறு ஒன்று நடந்திருக்கவேண்டும் அதனால்தான் தம் 10 வயது பையன் அகால மரணமடைந்தான் என்று முறையிட்டதைக் கேட்ட ராமபிரான் தம் ஞான திருஷ்டியால் எங்கோ ஒரு இடத்தில் தவம் செய்ய உரிமை இல்லாத ஒரு சூத்திரன் தவம் செய்கிறான் என்று கண்டறிந்த ராமபிரான் அங்குச் சென்று அந்த சூத்திரனை சிரச்சேதம் செய்தார். அதனால் பிராமணப் பையன் உயிர் பெற்றெழுந்தான் என்பது கதை.

இதைத் தவிர சர்வாதிகாரிகளாக ஆட்சிபுரிந்த மன்னர்களால் தான் எகிப்து நாட்டு பிரமிடுகளும், கோட்டை கொத்தளங்களும், அரண்மனைகளும், தாஜ்மகாலும், கோபுரங்கள் நிறைந்த கோயில்களும் கட்டப்பட்டன. கலை, காவியம், வானசாஸ்திரம், சங்கீதம், நடனம், விழாக்கள் யாவும் விஞ்ஞானமும் கூட யதேச்சாதிகார மன்னர்கள் ஆட்சியில் தான் வளம் பெற்று வளர்ந்திருக்கின்றன.

மேலும் சர்வோதயத் தத்துவத்தின் அனுதாபி, ஒரு வயோதிகர் வருத்தத்துடன் சர்வோதய இயக்கத் தலைவர்களால் சர்வோதய இயக்கத் தத்துவத்தை கிராம மக்களிடை பரப்புவதற்காக நாளிதழ் ஒன்றை இது வரை வெளியிட முடியவில்லையே இன்று கிராமவாசிகள் காலையில் ஆவலுடன் வாங்கிப் படிக்கும் நாளிதழ்கள் தினத்தந்தி, தினமலர், தினமணி போன்றவைகளே. இந்த உண்மையை சர்வோதய பிரச்சார நண்பருக்குச் சொன்னதும் அவரால் அமைதியாக பதிலளிக்க முடியவில்லை. நம் சர்வோதய பிரச்சாரப் பணியில் ஈடுபட்டுள்ள அன்பருக்கு வந்தது கோபம். சர்வோதய அனுதாபி வயோதிகர் சொன்னது உண்மை தான். உண்மை எப்பொழுதும் கசக்கும். ஆகையால் சர்வோதய பிரச்சாரப் பணியில் முழுநேர ஊழியராக பணியாற்றும் நண்பர், வயோதிகர் சர்வோதயத் தலைவர்களையும் ஊழியர்களையும் குறை சொல்கிறார் என்று நினைத்து, நீங்கள் தான் என்ன செய்கிறீர் குறை சொல்வதைத் தவிர, என்கிறார். வயோதிகர் சிரித்துக் கொண்டு, சர்வோதய இயக்கம் மக்களிடை பரவ, நாடு முழுவதும் வலுவுள்ள இயக்கமாக வளர்ந்து வெற்றி காணத் என்னாலியன்றதை செய்து கொண்டு தான் இருக்கிறேன். மாதச் சம்பளம் வாங்கிப் பணிபுரியும் ஊழியர்களால் மட்டும் சர்வோதய இயக்கம் நாடு முழுவதும் பரவி மக்கள் விழிப்படைந்து செயலில் ஈடுபடுமாறு செய்ய முடியும் என்று நான் கருதவில்லை. இந்தப் பணியில் மக்கள் யாவரும் முக்கியமாக கல்விகற்ற சமுதாயம் முழுவதும் ஈடுபட வேண்டும் என்பது தான் என் விருப்பம். அதற்காக, மக்களை விழிப்படையச் செய்யும் பணியை முக்கியமாக கருதுகிறேன். அதனால் தான் சர்வோதய நாளிதழின் அவசியத்தை எடுத்துச் சொன்னேன். குறை கூறுவது என் நோக்கமல்ல", என்று சொல்லி விடை பெற்றார்.

## 18. நிதானம் வேண்டும்

நம் கொள்கைகள், குறிக்கோள்கள் சிறந்தவைகளாக இருந்தால் மட்டும் போதாது அவற்றை அடைவதற்கு எடுக்கும் முயற்சிகளிலும், செயல்களிலும் நிதானம் மிக அவசியமாகும். ஆத்திரப்பட்டோ, ஆவேசத்தாலோ ஒருவர் தம் காரியத்தில் இறங்கினால் பலன் நன்றாக இருக்காது. அதனால்தான் ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்னும் பழமொழி தோன்றியது.

தம் சொந்தக் குடும்பக் காரியங்களானாலும், அரசியல் ஆனாலும், சமூக சீர்திருத்த இயக்கமாயிருந்தாலும் தலைவர்கள் நன்கு சிந்தித்து நிதானமாக செயல்படுவதுதான் முறை. மாறாக அவசரப்பட்டு, ஆபாச வார்த்தைகளைப் பயன்படுத்தி அசிங்கமாக நடந்து கொண்டால் தற்காலிகமாகக் கூட்டம் சேரும். ஆனால் நிரந்தரமான நீண்டகாலம் நீடிக்கும் நற்பலன் கிடைக்காது.

எதிலும் நளினம் வேண்டும்; அச்சமின்மையோடு அறிவின் அன்பின் அடிப்படையிலும், சத்தியத்தின் அடிப்படையிலும் மட்டுமே பிரச்சினைகளை அணுக வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் தீவிரமான வெறுப்புக்கும் துவசேத்திற்கும் இடம் கொடுக்கக் கூடாது. சுருக்கமாகச் சொன்னால் காதலில் எவ்வாறு முரட்டுத்தனம் நல்லதல்லவோ, அதே மாதிரிதான் நம் பிரச்சினைகளைத் தீர்க்கும் முயற்சியிலும் முரட்டுத்தனம் அறவே கூடாது. முரட்டுத்தனத்தால் கல்வியறிவில்லாத ஏழை, எளிய மக்களை ஈர்க்கலாம். ஆனால் அவர்களைச் சிந்திக்க வைக்காது, சிந்திக்கத் தூண்டாது. அதனால் அவர்களுடைய முன்னேற்றத்துக்கும், அறிவு வளர்ச்சிக்கும் சற்றும் உதவாது, சீக்கிரமே பாமர மக்களுடைய உற்சாகம் ஓட்டையான பலூன் மாதிரி சுருங்கிப் போகும். பழைய சொக்கர்கள் சொக்கர்களாகத்தான் இருப்பார்கள்.

தலைவராயிருப்பவர் சீடர்களைச் சேர்ப்பதிலும் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். முரட்டுத்தனத்தைப் பாராட்டி ஆதரித்து சுய விளம்பரத்தைப் பெற விரும்பும் சீடர்கள் தத்தம் முன்னேற்றத்திற்கு ஏணியாக மட்டும் தலைவரைப் பயன்படுத்தும் நோக்கத்தோடு கூட்டத்தில் சேருவார்கள். மக்கள் நலனில் கருத்தும் கவனமும் செலுத்தாத சீடர்கள் தலைவரைப் புகழ்ந்து பாராட்டி ஆகாயத்திற்கு தூக்குவார்கள். அச்சமயம் தலைவர் தம் அறிவைப் பயன்படுத்தி நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். தவறினால் தம் இயக்கம் புஷ்வாணம் மாதிரி மிகப் பிரகாசத்தோடும் இரைச்சலோடும் வானில் உயர்ந்து நொடியில் மறைந்து போகும். நம் சமீபகால சில சீர்திருத்த இயக்கங்களின் கதி என்னவாயிற்று என்பதை சமீப கால வரலாறு கூறுகிறது. எனினும் மல்யுத்தத்தில் தோற்றவர் மீசையில் மண் ஒட்டவில்லையே என்று சொல்வது போல்தான் தம் கட்சி மிகப் பெரிய வெற்றி கண்டதாகப் பறைசாற்றிக் கொள்வார்கள்.

## 19. கண்ணுக்குப் புலப்படாத கட்டுகள்

குழந்தை தாய், இவர்களிடையே உள்ள உறவு நம் கண்ணுக்குத் தெரியாத அன்பாகிய கட்டினால் தோன்றியதே. கணவனுக்கும் மனைவிக்கும் இடையே நிலவும் உறவும் காதலாகிய அன்புக்கட்டினால் தோன்றுவதுதான். இறை சக்தியின் விருப்பத்தினால் தான் இம்மாதிரியான அடிப்படைக் கட்டுகள் தோன்றியிருக்கின்றன. மனிதர்கள் கூட்டமாக சமூகமாக வாழ்வதும் நம் கண்ணுக்குத் தெரியாத இறைசக்தியின் கட்டினால்தான்.

தனி மனித சுதந்திரம் என்பதெல்லாம் இந்த அன்பாகிய இறை சக்தியின் கட்டுக்கு உட்பட்டதுதான். இயற்கையில் நடக்கும் எல்லாவித இயக்கங்களுக்கும் அடிப்படையே நம் கண்ணுக்குத் தெரியாது ஈர்ப்பு ஆகிய அன்புக் கட்டுகள் தான்.

விண்ணில் எண்ணற்ற நட்சத்திர கோளங்கள் பிரகாசத்துடன் சுற்றிக் கொண்டிருப்பதும் ஒன்றையொன்று இழுக்கும் ஈர்ப்புக் கட்டுக்களால் தான். எந்தக் கட்டும் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. இந்தப் பூமியில் தோன்றி இயங்கிக் கொண்டிருக்கும் எல்லாம் படைப்புகளும் இயற்கையின் விதிகளால் கட்டுண்டவைகளே. நம் கண்களுக்குத் தெரியாத சங்கிலி போன்ற ஒன்றால் பிணைக்கப்பட்டுதான் இவை வாழ்கின்றன.

மரம், செடி, கொடி, ஆகிய தாவரங்களும் வளர்ந்து துளிர் விட்டு மலர்ந்து காயாகிக் கனியாகிக் காட்சியளிப்பதும் அவை தம் வேர்களால் தரைக்குக் கீழே கட்டுண்டு இருப்பதால் தான். மற்ற உயிரினங்களும் தத்தம் சூழ்நிலைக்கும் தக்கவாறு சுற்றுப் புறத்தோடும் இனத்தோடும் கட்டுண்டுதான் வாழ்கின்றன. ஒன்று பலவானாலும் கட்டு அவற்றை ஒன்றாக்குகிறது. பஞ்ச பூதங்களின் கட்டுதான் படைப்பு தோன்றுவதற்கும் பரிணமிப்பதற்கும் காரணமாகிறது.

ஒளியும் தகுந்த சந்தத்தினால் கட்டப்படும்போது இன்னிசை சங்கீதம் ஆகிறது. உருவ வடிவங்களையும் சந்தத்தினால் கட்டி அமைக்கும்போது சித்திரமாகவும் சிற்பமாகவும் பரிணமிக்கிறது.

மக்களைச் சட்ட திட்டங்களால் கட்டுப்படுத்துவதுதான் அரசு ஆகிறது. சமூக நல் வாழ்வுக்கு சட்ட திட்டங்களுடன் எழுதப்படாத கட்டுப்பாடுகளும் அவசியமாகிறது. வண்ண மலர்களும் கட்டப் படுவதால்தான் அழகிய மாலைகளாக மாறுகின்றன.

பெரிய மாளிகைகளை நாம் பார்க்கும் போது செங்கல், சுண்ணாம்பு, இரும்பு சிமெண்டை நாம் பார்ப்பதில்லை. கம்பீரமான கோட்டைகளும், அரண்மனைகளும், பாதுகாப்பான வாழ்க்கைக்கு அவசியமான மாளிகைகளும் கட்டப்படுவதால் தான் பயனுள்ளவையாக மாறுகின்றன.

**20. சாமியைக் காணவில்லை**

என்றைக்கும் போல் கோவில் பூசாரி காலையில் கர்ப்பகிரகத்துக் கதவைத் திறந்ததுமே அங்கு சாமி இல்லாததைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார். சிலை திருடுபவர்களின் வேலையோ என்று நினைக்கும்போது அசரீரியின் குரல் கேட்டது. பூசாரி ஆர்வத்துடன் கவனமாய்க் கேட்டார். அசரீரி சொன்னது, "ஏ பூசாரி, இத்தனை நாட்கள் பூஜை செய்து வந்த சாமிதான் பேசுகிறேன். நீ வீணாகக் கவலைப்படக்கூடாது என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். தினமும் நீ என்னைத் தனியாக இருட்டறையில் பூட்டிவிட்டுப் போய் விடுகிறாய். பூஜை நடக்கும்போது மட்டும் ஏதோ சில பக்தர்கள் வந்து தங்கள் குறைகளைத் தீர்க்கச் சொல்லிப் போவதைத் தவிர வெளியே என்ன நடக்கிறது என்பது ஒன்றுமே எனக்குத் தெரியாது. இவ்வாறு பல்லாண்டுகள் ஆயுட்கைதியைப் போல் காலங்கழித்து வந்த எனக்கும் தனிமை அலுத்து விட்டது. அதனால்தான் நேற்று இரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. யோசனையில் ஆழ்ந்தேன். என்னை யாரும் கட்டி வைக்க முடியாது, என் விருப்பப்படி எங்கும் சென்று உலவித்திரிய என்னால் முடியும் என்பதை உணர்ந்தேன்.

உடனே கிளம்பி விட்டேன். விடுதலை பெற்ற என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அதிகாலை ஆனதால் உதய சூரியனே என்னை வரவேற்றது. தன் ஒளிக் கிரணங்களையே எனக்கு வாகனமாகக் கொடுத்தது. நானும் மகிழ்ச்சியுடன் விரும்பியவாரெல்லாம், கண்படும் பொருளையெல்லாம், காட்சியெல்லாம் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறேன்.

நீ வீணாகக் கவலைப் படாதே. அதோ பார் நீ பூஜை செய்து வந்த சிலை அப்படியே அதே இடத்தில் திரும்பவும் இருப்பதைப் பார். உன் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் அல்லவா. அதனால் தான் நான் சிலையை விட்டு விட்டு வெளியே சுற்றக் கிளம்பி விட்டேன். சற்று முன்னர் தாமரைத் தடாகத்துக் கரையிலமர்ந்து மலர்களையும், மொட்டுகளையும், இலைகளையும், மீன்களையும் பறவைகளையும் பார்த்து மகிழ்ந்தேன். நீரில் இறங்கி ஆசைதீர நீந்தினேன். சில பறவைகள் பறந்து செல்வதைப் பார்த்து நானும் அவைகளுடன் பறந்து சென்றேன்".

21. **அறிவுவெள்ளம் கரைபுரண்டுதான் ஓடுகிறது. ஆனால்...?**

இந்த யந்திரமய காலத்தில் மக்களிடையே அறிவைப் பரப்புவதற்கான கருவிகள் ஏராளம், ஏராளம். ஒன்றல்ல, இரண்டல்ல. மேலும், அவை மிக மிக சக்திவாய்ந்தவை என்பதையும் மறுக்க முடியாது. அறிவாளிகளும், எழுத்தாளர்களும், கவிஞர்களும், கதை ஆசிரியர்களும், கட்டுரை எழுதும் சிந்தனையாளர்களும் தத்தம் துறையில் மிக அழகாக, ஆழமாகத் தம் கருத்துக்களை தவறாமல் வெளியிட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். தவிர, வானொலி தொலைக்காட்சி, சினிமாத்துறைகளில் பணியாற்றுவோரும் கவர்ச்சிகரமாகவும், இனிமையாகவும் பாமரர்களுக்கும் போய்ச் சேரும்படி, புரியும்படி அறிவை விநியோகம் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். எங்கும் எதிலும் குறையில்லை, கறையில்லை. கல்வித் துறையிலும், சிறிய சிறிய ஆரம்பப் பள்ளிகளிலிருந்து, பல்கலைக் கழகங்கள் வரை பன்மடங்காகப் பெருகி அறிவு வெள்ளத்திற்கு அணைபோட இயலாத அளவு பணியாற்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். மேலும் சமூகத்தின் மேல்தளத்தில் வாழும் வசதி படைத்த கும்பல் அறிவையே இரண்டாகப் பிரித்து ஆத்மீக அறிவென்றும், விஞ்ஞான அறிவென்றும் தமக்குள் போட்டி போட்டுக் கொண்டு முரணான கருத்துக்களையும் பரிமாறிக் கொண்டு மக்களுடைய அறிவுக் கண்களைத் திறப்பதில் சளைக்காமல் பணியாற்றிக் கொண்டும் இருக்கிறார்கள். இந்த மாபெரும் கைங்கரியத்தில் மக்கள் சேவைக்காவே தம்மை அர்ப்பணித்துக் கொண்ட அரசியல் வாதிகளும் அயராமல் புரட்சித் தலைவர் தலைவிகளாக பணியாற்றிக் கொண்டும் இருக்கிறார்கள்.

இவ்வளவு எண்ணற்ற ஏற்பாடுகள் இருந்தும் இன்று மனிதன் பயன்தரும் உண்மையான அறிவைப் போதிய அளவு வளர்க்காமல் தவறான வழிகளில் சென்று வழுக்கி விழுந்து திண்டாடிக் கொண்டிருக்கின்றான். அறிவு வளர்ச்சியின் மூலம் மனிதன் உயரவில்லை என்று சில அறிஞர்கள் மறைவாக மூலைகளில் உட்கார்ந்து கொண்டு புலம்புவதும் நம் காதில் விழுகிறது. நாமும் அவர்களைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கிறோம்.

மனித வரலாற்றில் அவ்வப்போது பலவித வெள்ளங்கள் தோன்றி வனமான வண்டலைக் கொட்டிவிட்டுச் செல்வதை நாம் பார்க்கலாம். படையெடுப்புகள், கோவில் குளங்கள், சடங்கு சம்பிரதாயங்கள், பக்திப் பரவசங்கள், யந்திர தொழில் புரட்சி வெள்ளம், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் கருவிகளின் வெள்ளம், அறிவு வெள்ளம், இவ்வாறு பல வெள்ளங்களைத் தோற்றுவித்து அனைத்தையும் ஒரு நொடியில் அடித்துக் கொண்டு போவதுதான் கால வெள்ளம்.

பிரபஞ்சத்தின் எல்லா படைப்புகளின் எல்லாவற்றிலும் இருந்து, இயங்கும், இயக்கும் பிரபஞ்ச சக்தியின் திருவிளையாடல்தான், கால வெள்ளம். மனிதன் போன்ற படைப்புகளைக் கொண்டே கால வெள்ளம் உருவாகிச் செயல்படுகிறது. மனிதன் பிரபஞ்ச சக்தியின் விருப்பம், நோக்கம், குறிக்கோள் போன்றவற்றை அறிந்தோ அறியாமலோ கால வெள்ளம் உருவாவதற்கு மனிதனே கருவியாகவும் கர்த்தாவாகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறான். நம் பூமியில் வாழும் உயிரினங்கள் யாவும் இதுவரை கண்டிராத அளவு பயங்கர அழிவுக்கு அறிகுறியாக அணுகுண்டு போன்ற நாசகார ஆயுதங்களையும் தயார் செய்து கால வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகும் வேடிக்கையைப் பார்ப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறான்.

இந்த உண்மையை உலகத் தலைவர்கள் எனப் பேசப்படுவர்கள் அறிந்தும், புரிந்தும், சிந்தித்தும் செயல்பட்டால்தான் நாம் புலம்புவதற்கு அவசியம் சீக்கிரம் வராது என்றாலும் நாம் இன்றைய மனிதனின் அறிவுவளர்ச்சியின் போக்கைக் கண்டு வருந்துவதும்

பராசக்தியின் கால வெள்ளமாகிய லீலைக்கு உதவுவதாகவும் அங்கமாகவும் இருப்பதை நாமும் உணர்ந்து செயல்படுவோமாக.

22. **தூய்மை இயக்கங்கள்**

அமெரிக்காவில் பல்லாண்டுகள் வாழ்ந்து தாய் நாட்டிற்குத் திரும்பி வந்த தமிழ் அறிஞர்களில் சிலர் நம் நாட்டு இழிந்த நிலைக்காக வருத்தப்படுகிறார்கள். ஆத்திரப்படுகிறார்கள். நாமும் திட்டம் போட்டு உழைப்போமானால் நிச்சயமாக முன்னேறலாம். அநாவசியமான சச்சரவுகளில் ஈடுபடுவதை நிறுத்தி, முதலில் முழு ஆற்றலையும் அறிவையும் பொருளாதார முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்ட திட்டங்கள் வகுத்து உழைப்பில் மனம் செலுத்தினால் நாமும் சீக்கிரமாக இன்றைய இழிநிலையிலிருந்து, வறிய வாழ்விலிருந்து சுக வாழ்வை நோக்கி, ஆரோக்கிய வாழ்வை நோக்கி முன்னேற முடியும் என்கிறார்கள்.

நாட்டை உயர்த்துவதற்கு, மக்களின் வறுமையை அகற்றுவதற்கு முதல் வேலையாக பொருள் உற்பத்திக்கான தொழிற்சாலைகள் அமைப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். அத்துடன் வாக்கிலும் செயலிலும் தூய்மை வேண்டும் என்பதை வற்புறுத்தி முதல் வேலையாக தூய்மை இயக்கம் நடத்த முயல்கின்றனர்.

உண்மை தான், இவர்களுடைய நல்ல எண்ணங்களைப் பாராட்ட வேண்டும். ஆற்றல் படைத்தவர்களும், அறிவாளிகளும் தாமதமின்றி காரியத்தில் இறங்க வேண்டும்.

ஆனால் பயிரிடப்பட்ட வயலுக்குத் தக்க வேலியும் போடக்கூடாது. மாடுகளைக் கட்டிப் போடவும் கூடாது. பயிறும் காப்பாற்றப்படவேண்டும். அதாவது இந்த அறிவுரை சாற்றும் அறிஞர்கள், நம் இன்றைய வறிய நிலைமைக்கு அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதைப் பற்றி அழ்ந்து சிந்தித்ததாகவோ, தெளிவடைந்ததாகவோ தெரியவில்லை.
தனி மனிதனுடைய உரிமைகளை எவ்வாறேனும் பாதுகாக்க வேண்டும் என்பார்கள். ஜனநாயக ஆட்சிமுறை தான் சிறந்தது என்பார்கள், மனிதர்களுடைய குறுகிய சுய நலத்தின் தீய விளைவுகளைப் பற்றி ஒன்றும் சொல்ல மாட்டார்கள். பல்லாயிர ஆண்டுகளாக நாம் வளர்த்து வந்த ஆன்மீகம், கலாச்சாரம், பண்பாடுகளுக்கும் குறைவில்லை. எழுதும் போதும், பேசம்போதும் எடுத்துக் காட்டாகக் கையாள்வதற்கு இலக்கியச் சான்றுகளும் ஏராளம் இருக்கின்றன.

வீட்டில் மருந்து புட்டிகள் இருப்பதனால் மட்டும் நோய் தீர்ந்து விடுமா? துருப்பிடித்து கசடு ஏறிய இயந்திரத்தைத் தண்ணீர் விட்டுக் கழுவினால் மட்டும் இயந்திரம் இயங்குமா? குறுகிய சுயநலம். ஜாதிநலம் போன்ற நோய்கள் அறிவுரைகளால் மட்டும் தீருமா?

'சுத்தம் சோறிடும்', 'செய்வன திருந்தச் செய்', 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்', 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' போன்ற அறிவுரைகளுக்கு தமிழ்நாட்டில் பஞ்சமா? பின்னர் ஏன் இந்த இழிநிலை?

முதல் காரணம், முக்கிய காரணம் நம் நாட்டு செல்வந்தர்களுக்கு மனிதாபிமான உணர்ச்சிகள் சற்றும் கிடையாது. தீவிரமாக சிந்திக்கும் ஆற்றலும் கிடையாது. எப்பொழுதும் எதிர்காலத்தைப் பற்றி பயம். தங்கள் செல்வம் மேலும் மேலும் வளர்வதற்கு என்னென்ன வழிமுறைகள் போன்றவற்றைப் பற்றித்தான் சிந்தனைகள் யாவும். தங்கள் செல்வத்தின் மேல், பணத்தின் மேல் வைத்திருக்கும் அளவு நம்பிக்கை, கடவுள் மேல் கிடையாது. பேசுவது, படிப்பது, உபதேசிப்பது எல்லாம் ஆத்மீகம். நடைமுறையில் முற்றிலும் மாறாகத்தான் செயல்படுகிறார்கள்.

அண்ணல் காந்தியடிகள் நமக்குக் காட்டின சர்வோதயத் தத்துவத்தைப் பற்றி மறந்தும் சிந்திக்க மாட்டார்கள். ஏனென்றால் அவர் சொன்னதெல்லாம், நம் ஒவ்வொரு செயலும் சமூகத்தில் கீழ்மட்டத்திலுள்ள மனிதர்களுக்கு எந்த வழியிலேனும் உதவவேண்டும் என்பதே.

### 23. நேர்பாதையைத் தவறவிட்ட அபூர்வ மனிதர்கள்

பொதுவாக நடுத்தர வர்க்க மக்களின் வாழ்க்கைக் குறிக்கோள் கல்வியென்னும் பெயரில் ஏதாவது கல்லூரிப் பட்டங்கள் பெற்று உத்தியோகம் ஒன்றில் அமர்ந்து பணியாற்றி ஓய்வு பெறுவதுதான் என்று சொன்னால் தவறாகாது. இதுதான் வாழ்க்கையின் நேர் பாதையாகக் கருதப்படுகிறது. ஆனால் சில சமயங்களில் சூழ்நிலைகளின் காரணமாக, வாய்ப்பு வசதிகள் கிடைக்காததன் காரணமாக ஒரு சிலர் இந்த நேர் பாதையைப் தவற விட்டிருப்பார்கள். ஒரு விதத்தில் இவர்கள் சுய முயற்சியால், பலவித நூல்களைப் பயின்று அனுபவங்கள் பெற்று தனிச் சிறப்புடன் தனித்துவ ஒளியுடன் பிரகாசிப்பதையும் பார்க்கலாம். தமக்கென தனி வழியொன்றைத் தேடிக் கண்டுபிடித்து, அதில் தீவிரமாக ஆர்வம் செலுத்துகின்றனர். அத்தகையோரை நாம் இன்னும் அங்காங்கு சந்திக்கிறோம். உலகம் போற்றும் மேதைகளுக்குள்ளும் நாம் அத்தகையோரைப் பார்க்கிறோம். இடைஞ்சல், இடையூறுகளையே ஏணிப்படிகளாக அமைத்துக் கொள்கின்றனர் இவர்கள்.

மகாத்மா காந்தியடிகள் பார் அட் லா பட்டத்துடன் தாய் நாடு திரும்பி சில காலம் வேலையும் வருமானமும் இல்லாது ஏக்கத்துடன் இருந்த சமயத்தில் பம்பாய்ப் பள்ளிக்கூடம் ஒன்றில் ஆசிரியர் பதவி (ஆங்கில மொழி கற்பிக்க) காலியாக இருப்பதை அறிந்து அதற்காக விண்ணப்பித்தார். என்ன பதில் வந்தது? இவர் பல்கலைக்கழகப் பட்டதாரியாக (B.A., M.A., போன்ற) இல்லாத காரணத்தால் வேலை கொடுக்க இயலாது என்று தெரிவித்து விட்டனர். அதனால் வழக்கமான நேர்பாதை அடைபட்டுவிட்டது என்பதை உணர்ந்தார். நேர் பாதையைப் தவற விட்டது அவருக்கும் நாட்டுக்கும், மனித சமுதாயத்திற்கும் அரிய பெரிய அதிர்ஷ்டம் என்பதை அன்று யார் தான் உணர்ந்தார்கள்.

இது போன்று நேர் பாதையைக் கைவிட்டவர்கள்தான் கவிகுரு ரவீந்திரநாத் டாகூரும். நம் மகாகவி பாரதியாரும், இந்தியத் தாயின் இந்திய மக்களின் தவப் பயனாக இவர்கள் கல்லூரிப் பட்டதாரிகளாகாமல், நேர் பாதையைத் தவற விட்டே வரலாற்று வானில் சுய ஒளியால் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறார்கள்.

மறுபக்கம் பெரும்பான்மை பட்டதாரிகள் நேர் பாதையில் சென்று உயர்ந்த பதவிகளில் அமர்ந்து பணியாற்றி ஓய்வு பெறுகின்றனர். இவர்களுடைய இளம் வயதில் மாணவப் பருவத்தில் கண்ட லட்சியக் கனவுகள், மேதைக் குறிக்கோள்கள் யாவும் சிறுகச் சிறுக மறைந்து மந்தமாகி, மந்தை மனப்பான்மையில் ஊறி ஒரு வித ஏக்கத்துடன் விடை பெறுகின்றனர். வாழ்க்கை மேடையில் நடத்தப்படும் பொம்மலாட்டத்தின் பொம்மைகள் தான் தாங்கள் என்பதை உணர்வதற்குள் கண்களை மூடிக் கொள்கின்றனர்.

சாதாரண மக்களுக்குள், நேர் பாதையைத் தவறவிட்டவர்கள்தான் தம் சுய ஆர்வத்தால், முயற்சியால் பின்னர் மேதைகளாக பிரகாசித்திருக்கின்றனர். உதாரணமாக வாரியார், ம.பொ.சி., கி.ஆ.பெ., முத்துராமலிங்கத் தேவர், ஜீவானந்தம், குன்றக்குடி அடிகளார் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

## 24. பகல் திருடனும், இரவுத் திருடனும்

யார் திருடன்? தான் பாடுபட்டு உழைக்காமல் பிறர் வைத்திருக்கும் பொருளை அவருக்குத் தெரியாமல், அவருடைய அனுமதியின்றி தனக்காக எடுத்துக் கொள்பவன்தான் திருடன். இந்த விளக்கத்தைத் தவிர இன்னும் கச்சிதமாக சுருக்கமாக மகாத்மா காந்தியடிகள் ஒரு விளக்கத்தைத் தருகிறார். அதாவது எவனொருவன் உழைக்காமல் சாமர்த்தியத்தினால் தந்திரங்களைக் கையாண்டு தன் தேவைக்குமேல் பொருள் சேர்த்து வைத்துக் கொண்டு மேலும் அப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறானோ அவனும் திருடன்தான் என்கிறார் காந்தியடிகள். இந்த விளக்கம் பகல் கொள்ளைக்காரனுக்கு முற்றிலும் பிடிக்காது.

இந்தக் கட்டுரையின் வாயிலாக ஒரு பகல் திருடனும் ஒரு இரவுத் திருடனும் சந்தித்து உரையாடின கருத்துக்களைக் கேட்போம்.

இரவுத்திருடன் : அண்ணே, தாங்கள் சௌக்கியமா? நாம் சந்தித்து வெகு நாட்களாகும். தங்கள் தொழில் எப்படி நடக்கிறது? தங்கள் குடும்பத்தினர் யாவரும் சௌக்கியமா? என்பதை விசாரித்துப் போக வந்தேன்.

பகல் திருடன் : என்னை அண்ணே என்று அழைப்பதற்குக் காரணம் என்ன? வயதில் நீ தானே மூத்தவன்.

இரவுத்திருடன் : வயதில் நான் மூத்தவனாயிருந்தாலும் தொழிலில் தாங்கள்தான் மூத்தவர். மனித நாகரிக வரலாறு தங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆரம்ப காலத்தில் பழங்குடி மக்களாக வாழ்ந்த காலத்தில், நிலம், ஆடுமாடு, உபயோகப் பொருட்கள் யாவும் பொதுச் சொத்தாகவே கருதி வாழ்க்கை நடத்தினர். அக்காலத்தில் திடீரென்று ஓரிருவர் நிலங்களில் வேலிகள் போட்டு அந்த நிலங்கள் தங்களுக்குத்தான் சொந்தம் என்று உரிமை கொண்டாடினார்கள். நாங்கள் அந்த வேலிகளை அகற்றி பொது உடைமைக்காக அறப்போர் நடத்தினோம் என்றாலும் சைத்தான் அவர்கள் பக்கம் இருந்ததால் அவர்களே வெற்றியடைந்தனர். நாங்கள் வேறு வழி இல்லாமல், அவர்கள் இரவில் தூங்கும்போது எங்கள் அறப்போரை எவ்வளவோ ஆபத்துக்களிடையிலும் இன்று வரை விடாது நடத்திக் கொண்டு வருகிறோம். முதலில் தோன்றியது பகல் கொள்ளை. பின்னர்தான் இரவில் திருடும் எங்கள் தொழில் தோன்றியது. இதனால்தான் தொழிலில் நீங்கள் தான் மூத்தவர். பின்னர்தான் நாங்கள் தோன்றினோம்.

பகல் திருடன் : என்ன சாமர்த்தியம், நீ திருட்டுப் பயல் என்பதையும் மறந்து என்னோடு உறவு கொண்டாட வந்திருக்கிறாய். உன் துணிச்சலை ஒரு நொடியில் பறந்து போகச் செய்கிறேன் பார் என்று சொல்லி தொலைபேசியைக் கையில் எடுத்தார். இராத்திருடனும் மறைந்தார்.

பகல் திருடன் பகல் உணவு முடித்துக் கொண்டு உண்ட மயக்கத்தால் சற்று சாய்ந்தார். அவ்வளவுதான் இரவுத்திருடன் அவர் கனவில் தோன்றி அவனுக்குத் தெரிந்த சில உண்மைகளை எடுத்துச் சொன்னான்.

இரவுத்திருடன் : தாங்கள் தொழில் துறையின் என் உறவினர் என்பதை மறுக்கிறீர். தாங்களும் தங்களைப் போன்ற பகல் திருடர்கள் எல்லாருமே ஏழை உழைப்பாளின் உழைப்பின் பயனை சட்டங்கள் மூலமாக நியாயப்படுத்திக் கொண்டு கொள்ளையடித்துக் கொண்டு வருகிறீர்கள். உழைப்பாளிகளின் உழைப்பினால் தயாராகும் உணவுப்

பொருட்களை நீங்கள் மலிவு விலையில் விலைக்கு வாங்கி பன் மடங்காக விலையை ஏற்றி விற்பனை செய்து செல்வந்தர் ஆகிறீர்கள். உற்பத்தி செய்பனுக்கு நியாயமாக சேர வேண்டிய கூலியைக் கொடுக்காததால் அவன் வாழ்நாள் முழுவதும் ஏழையாகவே அரை வயிற்றுக் கஞ்சிகுடித்து குடிசையில் வாழ்கிறான் இந்த அநியாயமான கொள்கையை நியாயப்படுத்துவதற்காக, தலைவிதி - கர்மபலன், கடவுள் விருப்பம் என்றெல்லாம் பொய் சொல்லி நம்பவைத்து எதிர்க்கும் சக்தியில்லாதவனாக்கி விடுகிறீர்கள். அப்படி எதிர்த்தாலும் போலீஸ், கோர்ட், சிறைச்சாலை என்றெல்லாம் உங்கள் சொத்துக்கு நல்ல பாதுகாப்பு அரண்கள் கட்டி பகல் கொள்ளைக்குப் பங்கம் வராதபடி பார்த்துக் கொள்கிறீர்கள். இவைகளை மட்டுமா நீங்கள் அரண்களாக பயன்படுத்துகிறீர்கள். கடவுள் பெயரில் நியாயப்படுத்துவதற்காக சொல்லாற்றல்மிக்க சாமிகளையும் உங்கள் பகல் திருட்டுக்குப் பங்கம் வராதபடி நீதிகளை உபதேசிக்க ஏற்பாடுகளும் செய்திருக்கிறீர்கள்.

எங்களைப் போன்ற இராத்திருடர்களுக்கு எவ்விதமான பாதுகாப்பும், ஆதரவும் கிடையாது. எங்கள் தொழிலை எவ்வளவு ரிஸ்க் எடுத்து செய்துவருகிறோம் என்பது உங்களுக்கு தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் கடவுளுக்கு நன்றாகவே தெரியும். எங்களுக்காக பரிந்து பேச அவ்வப்போது மகான்கள் தோன்றி உண்மையை எடுத்துக் கூறினாலும் இயேசு நாதர், மகாத்மா காந்தி போன்றவர்களை பகல் திருடர்களாகிய உங்கள் கையாள்கள் அவர்களை ஒழித்துக் கட்டி விடுகிறார்கள். மகான்களின் உண்மை உபதேசங்களை கீழ்ப்படியில் வாழும், சுரண்டப்பட்டு ஏமாற்றப்பட்டு வாழும் மக்களின் தெய்வங்களாக்கி பூஜைக்கும் ஏற்பாடு செய்துவிடுகிறீர்கள். இந்த நிலையில் நாங்கள் இரவில் ஒழிந்து மறைந்து உயிரையும் மதிக்காமல் எங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டுதான் வருகிறோம். எங்களுக்கு சீக்கிரம் வெற்றி கிடைப்பதாகவும் தெரியவில்லை.

இப்பொழுது புதியதொரு பகல் திருடர்கள் கூட்டம் கொள்ளைக்காரர் கும்பல் அரசியலில் புகுந்து பட்டப்பகலில் பல கோடிக்கணக்காகப் பணம் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறது. இவர்கள் தங்களை ஏழைப் பங்காளன், உடன் பிறப்பு, புரட்சித் தலைவர்கள் என்றெல்லாம் பறை சாற்றிக் கொண்டு ஏழைகளை ஏமாற்றி அவர்களுடைய உழைப்பின் பலனைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். சாத்தானே பகல் கொள்ளைக் கூட்டத்தைக் தன் ஆசீர்வாதத்துடன் இயங்கிக் கொண்டிருப்பதாகத்தான் தெரிகிறது.

நல்ல தூக்கத்தில், கனவில் இரவுத்திருடன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த பகல் திருடனுக்கு அரசியலில் ஈடுபட்டுள்ள கொள்ளைக் கூட்டத்தைப் பற்றி இரவுத்திருடன் சொன்னது சரியாகத்தான் தோன்றியது. ஏனென்றால் அரசியல்வாதிகள் இந்தப் பகல் திருடரிடமிருந்தும் பட்டப் பகலில் பல இலட்சம் ரூபாய் கொள்ளையடித்திருக்கிறார்கள். இதன் காரணமாக இரவுத்திருடனைப் பாராட்டுவதற்கு வாயைத் திறந்தார். கனவு கலைந்து கண் விழித்தார்.

என்றாலும் தாம் கண்ட கனவைப் பற்றிய சிந்தனை அவரை விடவில்லை. சில நாட்களுக்கு முன்னர் தான் தம் மகன், கல்லூரியில் பொருளாதாரத்தைப் பாடமாகப் படித்துக் கொண்டிருப்பவன், காந்தீய பொருளாதாரத்தைப் பற்றி தம்மிடம் சொன்ன விஷயங்களும் அரைகுறையாக மனதில் எழுந்தன. படுத்துக் கொண்டே சிந்திக்கலானார். பக்கத்தூர் செல்வந்தரின் ஒரே பையன் மேற்படிப்புக்காக அமெரிக்கா சென்றவன் அங்கேயே ஒரு வெள்ளைக்காரியை மணந்து கொண்டு அப்பாவின் கடிதங்களுக்குப் பதில் எழுதுவதையும் நிறுத்திவிட்ட செய்தியும், தம் மகன் விஷயத்தில் என்ன ஆகும் என்ற கவலையும் மனதைக் குழப்பிக் கொண்டிருந்த சமயம் இரவுத்திருடன் வந்து ஆஜாரானான். இவர் மனக் கலக்கத்துடன் படுக்கையை விட்டு வெளியே வந்தவர் இரவுத்திருடனை

உட்காரச் சொல்லிவிட்டு குளிப்பறைக்குச் சென்றார். ஏதோ ஒன்று விழுந்த சப்தம் கேட்டது... அவ்வளவுதான்...

**25. குடும்ப கௌரவம்**

செல்வந்தரான தந்தை மகனைக் கூப்பிட்டு "ராஜா நீ எது செய்தாலும் ஒன்றை மட்டும் மனதில் வைத்துக் கொள். அதாவது, நம் குடும்ப கௌரவத்திற்குப் பங்கம் வராதபடி பார்த்துக் கொள். உனக்குத் தெரியும், நம் குடும்பம் இந்த ஊரிலேயே பல தலைமுறைகளாக செல்வாக்குடன் கௌரவமாக வாழும் குடும்பம். இதுவரை எவரும் நம் குடும்பத்தில் மரியாதைக் குறைவான காரியம் எதுவும் செய்ததில்லை. இப்பொழுது காலம் கெட்டுப் போய் விட்டது. பக்கத்தூர் மிராசுதாரர் மகள் யாரையோ கூட்டிக் கொண்டு போய் விட்டாளாம். ஊரெல்லாம் ஒரே ரகளை. இதற்கு மேல் நான் உனக்கு ஒன்றும் சொல்ல விரும்பவில்லை நீ போகலாம்" என்று கூறி முடித்தார்.

மகன் ராஜசேகரன் பக்கத்து ஊர் கல்லூரியில் படிக்கிறான். தந்தை ஆங்கிலக் கல்வி பெறாதவர். நல்ல மனிதர். ஆனால் சமூகம், பொருளாதாரம் முதலிய விஷயங்களைப் பற்றிய புதிய சிந்தனைகள் ஒன்றும் தெரியாதவர். காதலைப் பற்றியும் நவீனப் போக்கு அவருக்குப் பிடிக்காது.

தலைமுறை தலைமுறையாக செல்வாக்குடன், கௌரவமாக தம் குடும்பம் வாழ்கிறதாக அவர் எண்ணம். ஆனால் ராஜசேகரன் வாலிபன். புதிய கருத்துக்கள் கொண்ட ஆங்கில நூல்கள் பல பயின்றவன். விரும்பிப் படிப்பவன். ஆகையால் அவனுக்குக் குடும்ப செல்வாக்கு, கௌரவம் போன்றவை முக்கியமானதாகத் தெரியவில்லை. அவன் மூளை வேலை செய்கிறது. சிந்திக்கிறான். தன் மூதாதையர் எவ்வாறு செல்வந்தர்கள் ஆனார்கள் என்ற வரலாறும் அவனுக்கு ஓரளவு தெரியும். தன் மிக நெருங்கிய உறவினர்களில் சிலரது வாழ்க்கை வரலாறும் அவனுக்குத் தெரியும். அவர்களில் சிலர் மிகவும் ஏழ்மை நிலையில் கூலிவேலை செய்து பிழைப்பதும் அவனுக்குத் தெரியும். ஓரிரு தலைமுறைக்கு முன்னர் அவர்களும் தன் தந்தையார் போன்றே சொத்து சம்பத்துடன் ஊரில் கௌரவத்துடன் வாழ்ந்தவர்கள்தான். ஆனால் அவர்கள் அவன் தந்தையைப் போல் சிக்கனமாய் வாழாததால், வரவுக்கு மீறி செலவு செய்து, அவன் தந்தையிடமே கடன் வாங்கி, கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாததால் தம் நிலத்தையே அவன் தந்தைக்கு மிகக் குறைந்த விலையில் விற்று வறியவர்கள் ஆனார்கள்.

கிராமத்து வாழ்க்கையில், இம்மாதிரியான நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்து, சிந்தித்து, ராஜசேகரன் செல்வம், கௌரவம் போன்ற விஷயங்களைப் பற்றி திடமான ஒரு முடிவுக்கு வந்திருக்கிறான். ஆனால் கிராமவாசிகளுக்கோ இவையெல்லாம் மிகச் சாதாரண விஷயங்களாகவும், சிந்தனைக்குரியவையல்ல என்பதும்தான் தெரியும்.

ராஜசேகரின் மூதாதையர் நான்கு தலைமுறைகளுக்கு முன்னர் வாழ்ந்தவர்களின் பெயர் யாருக்குமே தெரியாது. இனி, நான்கு தலைமுறைகளுக்குப் பின்னர் யார், எங்கே, எப்படி வாழ்வார்கள் என்பதையும் யாராலும் சொல்லவும் முடியாது. இந்த நிலைமையில் குடும்ப கௌரவம் என்பது ராஜசேகரின் தந்தையின் குடும்பத்தின் கௌரவம்தான் என்பது அவனுக்குத் தெரியும், தந்தை செல்வந்தர் ஆன வரலாறும் ராஜசேகரனுக்கு நன்கு தெரியும்.

குடும்பத்து கௌரவம் என்பது செல்வந்தர்களின் குடும்ப கௌரவம்தான். வறியவர்களின் குடும்ப கௌரவம் நிச்சயமாக இருந்தாலும், அவர்கள் அதைப்பற்றி அலட்டிக் கொள்ளாமலே கௌரவமாகத்தான் வாழ்கிறார்கள்.

பிறர் உழைப்பால் வாழ்பவர்களுக்குத்தான் கௌரவம் உரித்தாகும். ஏழை, எளியவர்களின் கௌரவத்தைப் பற்றி செல்வந்தர்கள் எப்பொழுதும் கவலைப்பட்டதில்லை. ஆனால் கௌரவம் சுயமரியாதை அல்லது மானம் என்பது எல்லோருக்கும் உண்டு. மானம் உயிரினும் பெரிது என்று நம்பிச் செயல்படும் ஏழைகளும் இருக்கிறார்கள். தம் குடும்ப கௌரவத்திற்கு ஆபத்து வந்து விட்டால், ஏழைகளும் சற்றுக்கூட தயங்காமல் பழிவாங்கித் தம் உயிரையும் பலியிடத் தயாராகிறார்கள். மனித உரிமை (Human Right) சுதந்திரம் (Freedom) என்பதெல்லாம் அமெரிக்க நாட்டு வெள்ளையர்களுக்குத்தான், பின்தங்கிய, ஏழை நாட்டு மக்களுக்கு அல்ல என்பதைப் போல் கிராம வாழ்க்கையிலும் செல்வந்தர்களுக்குத்தான் கௌரவம் காப்பாற்றப்பட வேண்டிய அவசியமாகும்.

இதுபோன்ற சிந்தனைகள் ராஜசேகரின் உள்ளத்தில் உதித்து வேர் விட்டுக் கொண்டிருந்தது.

குடும்ப கௌரவத்தைப் பற்றி தந்தையின் எச்சரிக்கை ராஜசேகரனுக்குப் புரியாமல் இல்லை. ராஜசேகரின் கல்லூரியில் அவன் வகுப்பில் பயிலும் ஏழை மாணவியுடன் நெருங்கிப் பழகுவதாகக் கேள்விப்பட்டதை வைத்துத்தான் தந்தை எச்சரிக்கை விடுத்தார் என்பது ராஜசேகரனுக்கு நன்கு தெரியும்.

**26. இந்தியாவில் புத்தமதத்தின் தோற்றமும், மறைவும்**

சில நாட்களுக்கு முன் தினமணி நாளிதழில் கீழ்வரும் ஒரு கருத்தை நம் மகாகவி பாரதியார் தெரிவித்ததாக கட்டம் போட்ட செய்தியொன்று வெளிவந்தது. "புத்த மதம், நம் நாட்டை மடங்களும், துறவிகளும் நிறைந்த செயலற்ற நாடாக மாற்றியிருந்தது. நல்ல வேளையாக அம்மதம் நம் நாட்டிலிருந்தே மறைந்தது".

பாரதியாரே தம் கவிதைகளில் புத்தர் பிரானுக்கு உயர்ந்த இடம் கொடுத்திருக்கிறார். புத்தர் பிரான் அருள் பொங்கிய நாடு என்றும் நம் நாட்டைச் சிறப்பித்துப் பாடியிருக்கிறார். ஆகையால் மேற்கூறிய கட்டம் போட்ட கருத்து அவருடையதாக இருக்காது. இருந்தாலும் இந்தக் காலகட்டத்தில் அக்கருத்தை கட்டம் போட்டு வெளியிட வேண்டிய அவசியம் என்ன வந்தது?

ஒரு விதத்தில் மேற்கூறிய கட்டம் போட்ட கருத்து சரியானதாகத் தோன்றலாம். ஆனால் சற்று நிதானமாக ஆழ்ந்து சிந்திப்போருக்கு, மாறுபட்ட புதிய சிந்தனைகளும் உதிக்கும். புத்த மதம் தோன்றுவதற்கு முன்னால் நாட்டில் என்ன மதம் பிரபலமாயிருந்தது? புத்தர் எதற்காக புத்த மதத்தை ஸ்தாபித்தார்? என்னும் கேள்விகளுக்குப் பதில் தேடினால் சில கசப்பான உண்மைகள் புலப்படும்.

புத்தருக்கு முன் நாட்டில் வேதத்தை அடிப்படையாகக் கொண்ட சனாதன மதம் ஆட்சி புரிந்தது. அதன் பலனாக நாடு முழுவதும் யாகசாலைகளும், வேள்வி யக்ஞம் போன்ற சடங்குகளை முக்கியமாகக் கருதின வாழ்க்கையும் ஆட்சி புரிந்தன. ஒரு பக்கம் உழைப்பாளிகளின் அடிமை நிலையும் மறு பக்கம் உழைப்பின் பலனை அனுபவித்துக் கொண்டு வீணில் உண்டு களித்து வாழ்ந்த புரோகிதக் கூட்டமும் இருப்பதைப் புத்தர் பார்த்தார். இந்த நிலையை சிந்தித்து பார்த்த புத்தருக்கு மிக்க வருத்தத்தைக் கொடுத்தது. அதனால்தான் புத்தர் தாம் கண்ட ஞானத்தை மக்களிடம் எடுத்துச் சொல்லி புத்த மதத்தை நிறுவினார். மனிதனுடைய இன்னல்களுக்கெல்லாம் காரணம் பேராசையும், இரக்கமில்லாத நெஞ்சு படைத்த, கடவுள் பக்தர்களின் ஆதிக்கமும்தான் என்று போதித்தார். ஜாதி வித்தியாசம் பாராட்டுவதையும் கண்டித்தார். இது உடல் உழைப்பைத் தவிர்த்து, 'மக்களை ஏமாற்றி வாழ்ந்து வந்த பிராமணர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் மக்களும் மன்னரும் புத்தருடைய கொள்கைகளை ஆதரித்ததால் பிராமணர்கள் எதிர்த்து நாட்டை விட்டே கப்பல்களில் ஏறி அந்நிய நாடுகளுக்கும் குடி போகவில்லை. வேஷத்தை மட்டும் மாற்றிக்கொண்டு புத்த பிட்சுகளாக மாறி இந்நாட்டிலேயே தங்கி தம் உடல் உழைப்பில்லாத சுகவாழ்க்கையும் ஆதிக்கமும் நீடிப்பதற்கு வழிவகுத்துக் கொண்டார்கள். புத்த சந்நியாசிகளின் மஞ்சள் ஆடையை ஏற்று புத்த மதப் பிரசாரகர்களாக மாறினர். அதாவது சமூகத்தின் மேல்தளத்தில் அமர்ந்து ஆதிக்கம் செலுத்தி வந்த கூட்டம் புத்த மதத்திற்குள் புகுந்து கொண்டு புத்தரையே கடவுளாக்கி திரும்பவும் பூஜை சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்தனர். ஆதிசங்கரரின் புத்தி, தர்க்க சாதுர்யத்தால் இந்து மதத்தின் மறுமலர்ச்சி ஏற்பட்டதும், அதே, புத்த சந்நியாசிகள் திரும்பவும் வேஷத்தை மாற்றிக் கொண்டு மடங்களிலும் கோவில்களிலும் நுழைந்து கொண்டு உடல் உழைப்பைத் தவிர்த்து வாழும் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி ஏழை எளிய மக்கள் மேல் ஆதிக்கம் செலுத்தலாயினர். ஆங்கிலேயர் ஆட்சி நம் நாட்டில் நிறுவப்பட்டு, வேறூன்றி நாட்டைச் சுரண்டும் பணியில் பெரிய பங்கு வகித்தனர். இந்த சனாதன இந்துக் கூட்டம்தான் இப்பொழுது பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவுக்குள் தாராளமய பொருளாதாரத்தின் பெயரில் புகுந்து இந்தியாவைப் புதிய முறையில் கொள்ளையடிக்கும் பணியில் உதவி புரிவதில் பங்கு வகிக்கின்றனர். இவர்கள்தான் அறிவு ஜீவிகள். டில்லி அரசு பீடத்தில்

ஆட்சியாளர்களுக்கு உறுதுணையாவதும் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி நாட்டு முதலாளி வர்க்கத்திற்குத் துணை போவதும் இவர்கள்தான்.

இவர்களில் சிலர் தத்துவ மேதைகளாகவும் உலக மக்களுக்கு வழிகாட்டிகளாகவும் அயல் நாடுகளில் வாழ்ந்து கொண்டே மனித சமுதாயத்திற்கு சேவை செய்வதாகவும் பாராட்டப் படுகிறார்கள். எல்லாம் பேச்சுதான் மகாத்மா காந்தியடிகள் வாழ்ந்து காட்டிய புரட்சிகரமான சர்வோதயத் தத்துவம் இவர்கள் மனதைக் தொடுவதே இல்லை. காரணம் இவர்கள் சமூகத்தின் நலிந்த பிரிவினர்களைப் பற்றி அவர்களுடைய நலனைப் பற்றி எப்பொழுதும் கவலைப் பட்டதே இல்லை. இந்து மதத்தின் தனிச் சிறப்பு என்றுதான் சொல்ல வேண்டும். ரிக்வேத காலத்திலிருந்தே தனி மனிதனின் முன்னேற்றம் பற்றி கவலைப்பட்ட அளவு சமூகச் சிந்தனையோ, பொருளாதார மேம்பாட்டு முயற்சியோ செய்ததில்லை.

**27. வீணில் உண்டு களித்திருப்பவர்கள் யார்?**

மகாகவி பாரதி 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம் என்கிறார். உழவு என்பது உயிர் வாழ்வதற்கு மிகவும் அத்யாவசியமான உணவை உற்பத்தி செய்யும் வேலை என்பது புரிகிறது. தொழில் என்பதும் வாழ்க்கைக்கு அவசியமான வேறு சாதனங்கள் உடை, இருப்பிடம், வாகனம், போன்று பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் என்பதும் புரிகிறது. இந்த இரண்டு வித தொழில்களும் செய்யாமல் வீணில் உண்டு களித்திருப்பவர்கள் யார்? அவ்வாறு ஒரு வேலையும் செய்யாமல் வீணில் உண்டு களித்திருக்க முடியுமா? யார் அவ்வாறு வாழ்க்கை நடத்தும் மனிதர்கள்?

இந்தக் கேள்விக்குப் பதில் காணும் முயற்சிதான் இந்தக் கட்டுரையின் நோக்கம். உழவு என்பது நிலத்தை உழுது பயிரிட்டு உணவு உற்பத்தி செய்யும் வேலையைக் குறித்தாலும், அந்த வேலைக்குத் துணையாக, விவசாயத்திற்குத் தேவையான கருவிகள் தயாரித்தல், நீர்ப்பாசனத் துறையில் பணியாற்றுதல், காவல் காப்போரின் வேலை, வட்டிக்குக் கடன் கொடுப்போரின் வேலை, கடை வைத்து வியாபாரம் செய்வோரின் வேலை, மருத்துவத்துறை, கல்வித்துறை, வனத்துறை, போக்குவரத்துத்துறை, அரசு அலுவலக அமைப்புகளில் வேலை, இவை எல்லாவற்றையும் விவசாயத்திற்கு உதவி புரியும் பணிகள் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

இந்தப் பணிகள் மட்டுமல்ல. விவசாயிக்கும் அதாவது உழவனுக்கும் தொழிலாளிக்கும் தெய்வ நம்பிக்கை உண்டு. இந்த நம்பிக்கைக்கு உதவியாகத்தான் கோவில் பூஜாரிகளும், புராணக்கதைகள் காலட்சேபம் நடத்துபவர்களும் தம் தொழில் நடத்துகிறார்கள். உடல் உழைப்பால் மட்டும் வாழ்க்கை நடத்துபவர்களுக்கு, பூஜாரிகள், பஞ்சாங்கம் பார்ப்பவர்கள், ஜோதிடர்கள், புராணக்கதை விரிவுரையாற்றுபவர்கள், இவர்கள் எல்லோரும் கால் மேல் கால் போட்டு வீணாக நன்கு சாப்பிட்டு சோம்பேறியாக வாழ்க்கை நடத்துவதாகத் தோன்றலாம். தவிர அரசு அலுலகங்களில் வேலை பார்ப்பவர்களும், வியாபாரிகளும் கூட சுகவாழ்க்கை நடத்துவதாகத்தான் அன்றாடக் கூலிகள் நினைக்கிறார்கள். ஆகையால், உழைப்பவர்கள் யார், உழைக்காமல் வாழ்க்கை நடத்துபவர்கள் யார் என்பது அவரவர் நிலையிலிருந்து பார்ப்பதால், குழப்பம் இல்லாத தெளிவான விளக்கமும் பதிலும் கிடைப்பது கஷ்டம்.

உடல் உழைப்பால் வாழ்க்கை நடத்துபவர்களுக்கும் தெய்வநம்பிக்கை இருப்பதால்தான் பூஜாரிகளும், புரோகிதர்களும், ஜோதிடர்களும் தேவைப்படுகிறார்கள் என்று சொன்னோம். ஆனால் இந்த பாமர மக்கள் தாமாகவே இந்த தேவைகளை உணர்ந்து அவற்றைத் திருப்தி செய்வதற்காக உயர்ஜாதி மக்களை தேடிக் கொண்டார்களா? அல்லது அவர்களுக்கு இந்தத் தேவைகள் சிறுகச் சிறுக ஊட்டப்பட்டதா? ஊட்டினது யார்? இந்தக் கேள்விகளுக்குப் பதில் காண்போம்.

மனிதன் ஆதியில் காட்டில் வேட்டையாடிக் கொண்டும் கிழங்கு கனிகளைத் தின்று கொண்டும் வாழ்க்கை நடத்தினான். ஐந்தாறு குடும்பங்கள் சேர்ந்து சிறிய கும்பலாய்தான் வாழ்ந்திருக்கிறான். அந்தக் கால கட்டத்திலும் சிலர் துணிச்சல் மிகுந்தவர்களாகவும் மற்றவர்களுக்கு ஆணையிட்டு வழிகாட்டிச் செல்பவர்களாகவும் இருந்தனர். சிலர் தயக்கமுள்ளவர்களாகவும், இட்ட கட்டளைகளை நிறைவேற்றுபவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அந்த நிலையிலும் போட்டி பொறாமையும் மூட நம்பிக்கைகளும்

நிறைந்தவர்களாகத்தான் வாழ்ந்திருக்கிறார்கள். மனித இயல்புகள் அன்றிலிருந்து இன்று வரை அதிகமாக மாறவில்லை .

தலைவர்களும், மன்னர்களும் தோன்றினார்கள். மன்னருக்கு உதவிபுரிய மேல்தளத்து மக்களும் சேர்ந்து ஏழை எளிய மக்களை உடலுழைப்பு வேலைகள் புரிவதற்காக அடிமைப் படுத்தி நாகரிகத்தை வளர்த்தனர். அடிமைகளைக் கட்டுக்குள் வைத்து வேலைவாங்குவதற்கு மூட நம்பிக்கைகளையும் பயன்படுத்தினர். மேல்தளத்து மக்களுடைய சொத்துரிமை வம்ச பரம்பரையாக்கப்பட்டது. ஆற்றல் குறைந்தவர்களும் தகுதியில்லாதவர்களும் ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலத்திற்கு உரிமையாளர்களானார்கள். இப்பொழுதும் இந்த நிலைமை நீடித்துக் கொண்டுதான் வருகிறது.

நம் நாட்டிலும், மகாகவி பாரதியார் வாழ்ந்த காலத்திலும் பெரிய பெரிய நிலச்சுவான்தார்களும், ஜமீன்தார்களும் ஒருபக்கம் செல்வச் செழிப்பில் வாழ, சாதாரண விவசாயிகள், தொழிலாளிகள், உடலுழைப்பால் வாழ்ந்த மக்கள் வறுமையிலும் வாழ்ந்ததை பாரதியார் பார்த்திருக்கிறார். நிலச்சுவான்தார், ஜமீன்தார்கள் குடும்பங்களில் எந்தவிதத் தகுதியும் இல்லாதவர்களும், ஏழை மக்கள் உழைப்பால் வரும் சொத்தை வைத்துக் கொண்டு, உல்லாச வாழ்க்கை நடத்தி வந்ததையும் பாரதியார் பார்த்திருக்கிறார். இவர்களை மனதில் வைத்துதான் அவர். "... வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்று பாடியிருக்கிறார்.

நாடு விடுதலையடைந்ததும், இன்றைக்கும் இந்த நிலைமை மாறிவிட்டதாகத் தெரியவில்லை. நகரங்களில் பங்களாக்களில் வாழும் கனவான்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்களுக்கு உரிமை கொண்டாடி, ஏழைகளின் உழைப்பின் பலனை உறிஞ்சி கொழுத்து வருகின்றனர். நில உச்சவரம்பு சட்டம் இன்னும் சரியானபடி செயல்படாததால் வீணில் உண்டு களித்திருப்போர் பல உயர் பதவிகளில் அங்கம் வகிப்பதையும் பார்க்கலாம்.

**28. மனிதனின் பாக்யமும், துர்பாக்யமும்**

விண்ணில் காட்சியளிக்கும் கணக்கற்ற நட்சத்திர மண்டலங்களும், மண்ணிலும் நீரிலும் வாழும் கோடிக்கணக்கான உயிரினங்களும், மனிதனுடைய அளவற்ற செல்வங்கள் அன்றோ! மனதில் மகிழ்ச்சியை நிரப்புவதற்கு இவை போதாதா? மனிதன் அறிவும் ஆற்றலும் பெற்றிருக்கிறான். பிரபஞ்சத்தையே தனதாக்க உதவும் தத்துவ ஞானமும், ரசிக்கும் உள்ளமும் பெற்றிருக்கிறான். இனியவற்றைக் கண்டு இன்புற்று ஆனந்தக் கூத்தாடும் உள்ளமும், தனக்குத் தேவையான அளவு அதற்கு மேலும் அள்ளிக் கொடுக்கும் இயற்கை வளங்களும் பெற்றிருப்பவனை ஏன் பாக்யவான் என்று கூறக்கூடாது?

இயற்கையின் ரகஸ்யத்தை அறிய விரும்பும் ஆவலும் அந்த ஆவலைத் தூண்டுவதற்கு எல்லையற்ற வானமும் பெற்றிருக்கிறான் மனிதன். அவனுடைய கற்பனைக்கு எட்டியவாறெல்லாம் வீரதீரச் செயல்கள் புரிந்து பெருமைப் படுவதற்கான சூழ்நிலைகள் நிறைந்த வாழ்க்கைத் தடங்கல்களும், சவால்களும் எதிரே தோன்றுவதனாலேயே இவன் மேலும் பாக்யவான் ஆகிறான்.

மனிதனின் உள்ளத்தைப் போலவே பயமில்லாது தாவிக் குதிக்கும் நீர் வீழ்ச்சிகளென்ன, பாறைகளையும் தகர்த்து உருட்டிப் பாய்ந்து செல்லும் அருவிகளென்ன! வானைத்தொடும் பனிச் சிகரங்களும், இருண்ட காடுகளால் போர்த்தப்பட்ட மலைச் சரிவுகளும், நீல நிற மலைத் தொடர்ச்சிகளும், மனிதனைக் கூவி அழைக்கும் தொலைதூர அடிவானமும், துணிச்சலுடன் புறப்படச் சொல்லும் கரை காணா கடலும் மனிதனுடைய செல்வங்களன்றோ!

இவ்வளவு பெற்றிருந்தும் மனிதன் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையை அமைப்பதில் வெற்றி காணாததற்குக் காரணம் என்ன? அதுதான் மெய்ஞ்ஞானிகளும், கவிஞர்களும் தம் அறவுரைகளால் வழிகாட்ட முயன்றும் மனிதனுடைய மிருக இயல்புகளாக குறுகிய சுயநலம், போட்டி பொறாமை, ஆதிக்கம் செலுத்த விரும்பும் ஆணவம் போன்றவை மேலோங்கி அன்பின் வழியாக அறநெறிகளைப் பின்பற்றுவதில் இன்றுவரை இடையூறுகளாகவே வளர்ந்து கொண்டிருக்கின்றன. மனிதன் எளிமையில் இனிமையைக் காணத்தவறிவிட்டான். தியாகப் பாதையைக் கைவிட்டு ஆதிக்கப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். அதன் விளைவுகளைத்தான் நாம் இன்று உலகம் முழுவதும் பார்க்கிறோம். எனினும் எல்லாம் வல்ல பிரபஞ்ச சக்தியான இயற்கையன்னையின் கருணை நிறைந்த முயற்சியும் இடைவிடாது நடந்து கொண்டுதான் இருக்கிறது. நாமும் நம் அறிவையும் அன்பையும் பயன்படுத்தி பராசக்தியுடன் ஒத்துழைக்க வேண்டும், வேறு வழியில்லை.

**29. தமிழர்களின் தனிச்சிறப்பா?**

பெயர் வைத்துக் கொள்வதில் தமிழர்கள் மிகப் பரந்த நோக்கமுடையவர்கள் போல்தான் தெரிகிறது. காந்தி, நேரு, போஸ் என்றும் கென்னடி, குருச்சேவ், ஸ்டாலின் என்றும் தம் பெயர்களை வைத்துக் கொள்வதில் தமிழர்கள் பெருமைப்படுவதாகத்தான் தெரிகிறது. மேலும், சமீப காலம் வரை வழக்கத்திலிருந்த பரம்பரைப் பெயர்களான இராமசாமி, கிருஷ்ணசாமி, சிவானந்தம், பரமசிவம், கிருஷ்ணமூர்த்தி போன்ற பெயர்களைத் தவிர்த்து இன்று சுரேஷ்குமார், சதீஷ்குமார், திலீப்குமார், தினேஷ், நரேஷ் என்ற புதிய பெயர்களை வைத்துக் கொள்வதையும் பார்க்கிறோம். மகளிரும் பழைய பெயர்களான இலட்சுமி, சரஸ்வதி, காமாட்சி, மீனாட்சி, காளி, சீதாலட்சுமி போன்ற பெயர்களுக்குப் பதில் விமலா, நிலிமா, ஷோபனா, பிரியா, சாரளா, சங்கீதா, கீதா முதலிய பெயர்களையும் வைத்துக் கொள்கின்றனர். அதாவது எல்லாவற்றிலும் பழைமை அலுத்துப் போய் புதுமையை நாடும் மனப்பான்மையைத்தான் பார்க்கிறோம். இது மனித இயல்பே.

ஆனால் இந்தியாவின் மற்ற எந்த மாநிலத்தவராவது முருகன், பெருமாள், நெடுமாறன் என்ற பிற மாநிலத்தவர்களின் பெயரை வைத்துக் கொள்கிறார்களா? என்பதுதான் தெரியவில்லை.

மேலும் தமிழ்நாட்டில் உள்ளது போல் தம் தாய் மொழியின் பெயரை முதலில் வைத்து வேறு எந்த மாநிலத்தவர்களாவது தம் பெயர்களை வைத்துக் கொள்கிறார்களா? இதுதான் தெரியவில்லை. தமிழ் நாட்டில் சமீப காலமாக தமிழ்வாணன், தமிழண்ணல், தமிழ்ச்செல்வன், தமிழ்ச்செல்வி, தமிழ்க் குடிமகன், தமிழ்த்தந்தை, தமிழ்வேள், தமிழரசன் என்ற பெயர் வைத்துக் கொள்வது போல் மற்ற மாநிலங்களில் மக்கள் பெயர் வைத்துக் கொள்வதாகத் தெரியவில்லை. காரணம் யாதோ, அறிந்தவர்கள் சொன்னால் நலமாயிருக்கும்.

சிலர் சொல்வது அதிகமாக ஹிந்தி சினிமாப் பார்ப்பதன் பாதிப்பு என்றும், மற்றொருபுறம் அரசியலில் மொழிப்பற்றைப் புகுத்தி ஒருவித மொழி வெறியை வளர்த்து வருவதன் பாதிப்பு என்றும் சொல்கிறார்கள். இருக்கலாம், ஆனால் இதனால் வறுமையால் பாதிக்கப்பட்ட கீழ்ப்படியில் வாழும் மக்கள் என்ன பலன் அடைகிறார்கள்? தமிழர்களின் தாழ்வு மனப்பான்மைதான் காரணம் என்றும் சிலர் சொல்கிறார்கள். எதுவாயிருந்தாலும் அறிஞர்கள் சிந்திக்க வேண்டிய பல விஷயங்களில் இதுவும் ஒன்றெனச் சொல்லலாம்.

**30. உடல் மன வளர்ச்சியும், தளர்ச்சியும்**

உடல் பிறவியிலிருந்தே வளரத் தொடங்கி சுமார் 22 அல்லது 23ம் ஆண்டோடு முழு வளர்ச்சி பெற்று விடும். அதாவது இயங்குவதற்கான முழு ஆற்றலைப் பெற்றுவிடும். ஆனால் உள்ளத்தின் வளர்ச்சியும் முதிர்ச்சியும் குழந்தைப் பருவத்திலிருந்து தொடங்கி அநேகமாய் சாகும் வரை நடந்து கொண்டே இருக்கும் என்று சொல்லலாம்.

அறிவு வளர்ச்சிதான் உள்ளத்தின் வளர்ச்சியாகும். மனம் ஐம்புலன்களைக் கொண்டு அனுபவம் மூலமாக, சுற்றுப்புறம், சூழ்நிலை, வாய்ப்புகளின் அடிப்படையில் அறிவு வளர்ந்து கொண்டே இருக்கும். முதிர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும். ஆசைகளின் தூண்டுதலாலும் நம்பிக்கைகளின் பலத்தாலும் மனிதனுடைய அறிவு முன்னேறிக் கொண்டும், சில சமயம் ஒரே குறுகிய வட்டத்திற்குள் சுற்றிக் கொண்டும் இயங்குவதால் முழுமையான முதிர்ச்சி எந்த வயதில் அடைகிறது என்பதை வரையறுத்துச் சொல்வது கடினம். நினைவு சக்தியும் நிகழ்ச்சிகளை ரசிக்கும் ஆற்றலும் எல்லாருக்கும் ஒரே மாதிரி இல்லை. அறிவு வளர்ச்சியின் பலனை அவரவர் எதிர்கொள்ளும் சுகதுக்கங்களின் அளவைக் கொண்டு முதிர்ந்த அறிவு படைத்தவரா, அல்லவா என்பதைக் தெரிந்து கொள்ளலாம்.

மேலும், ஒருவர் பெற்றோர்களின் சொத்துக்கு வாரிசுதாரர் ஆவதைப் போல், அவர் வாழும் சமூகத்தின் மூடநம்பிக்கைகளுக்கும், பழக்க வழக்கங்களுக்கும், சம்பிரதாயங்களுக்கும் வாரிசுதாரராகி, சுயமாக சிந்திக்கும் ஆற்றலின்றி அறிவு வளர்ச்சியில் முன்னேறாமல் உள்ளம் பக்குவம் அடையாமல், சாகும் வயதிலும் முதிர்ச்சியடையாத உள்ளத்துடன் விடைபெறுகிறார்.

ஒரு தனி மனிதனுடைய அறிவு வளர்ச்சி குழந்தைப் பருவத்திலிருந்து ஆரம்பித்து வயோதிகம் வரை நீடிப்பதைப் போன்றே மனித இனத்தின் அறிவும் கற்கால மனிதன் வாழ்க்கையில் ஆரம்பித்து இன்று வரை யந்திரமய வாழ்க்கையிலும் வளர்ந்து கொண்டே இருக்கிறது என்றாலும் மனிதனுடைய அறிவு அல்லது உள்ளம் இன்னும் உயர் மனிதன் தெய்வீக மனிதன் ஆகும் படியில் உயரவில்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. மனித இனம் இன்னும் உடல் சுகங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து குறுகிய சுயநலத்தைக் கட்டுப்படுத்தாமல் போட்டி வாழ்க்கை மூலமாகத்தான் முன்னேற்றம் காணமுடியும். தியாகத்தின் மூலமாக அல்ல என்று செயல்படுவதால் மனித உள்ளம் முதிர்ச்சி அடைய மேலும் ஆயிரம் ஆண்டுகள் ஆகலாம்.

## 31. வறுமை

"கொடிது கொடிது வறுமை கொடிது, அதனினும் கொடிது இளமையில் வறுமை.... இது நம் மூதோர் வாக்கு. நாம் எல்லோரும் கண்டறிந்த உண்மை எனினும் மனித சமுதாயத்தில் பெரும்பான்மை மக்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களாகத்தான் வாழ்க்கை நடத்துகிறார்கள். உயிர்வாழ்வதற்கும். உழைப்பதற்கும், ஓரளவு மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கும் அவசியமான அடிப்படைத் தேவைகளான உணவு, உடை இருப்பிடம் போன்றவற்றைக்கூட பெற முடியாத நிலையில் வாழ்பவர்களைத்தான் வறுமை நோயால் பீடிக்கப்பட்டவர்கள் என்று சொல்கிறோம்.

நம் நாட்டு அளவிலும், அல்லது உலக அளவிலும் கூட செல்வந்தர்களும், அரசியல் தலைவர்களும் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் போதிய அளவு வெற்றி பெற்றதாக, பலன் தந்ததாகத் தெரியவில்லை. வறுமையால் பீடிக்கப்பட்ட மக்களுக்குத் தங்கள் வறுமை நிலைக்குக் காரணம் தெரியாவிட்டாலும், சமூகத்தின் மேல் தளத்தில் வாழும் மக்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும், அறிஞர்களுக்கும் நன்கு தெரியும், தம்முடைய குறுகிய சுயநலமும் பேராசையும்தான் வறுமைக்குக் காரணம் என்பது.

மனிதன் அவ்வப்போது அனுபவிக்க நேரும் உடல் நோய்களைப் போன்று, வறுமை இயற்கையாகத் தோன்றும் பிணியல்ல. மனித நாகரிக வளர்ச்சிப் பாதையில் சில இயல்புகள் பிறர்மேல் ஆதிக்கம் செலுத்துதல், உடல் உழைப்பைத் தவிர்த்தல், பிறரைக் கொண்டு தன் விருப்பத்தை நிறைவேற்றுதல், இவ்வாறான பல இயல்புகளின் காரணமாக, பேராசை, போட்டி, பொறாமை, முதலிய குணங்களை வளர்த்திருக்கிறான். இந்தக் குணங்களின் காரணமாகத் தோன்றினது தான் வறுமை.

குழந்தைகள் பிறக்கும்போது பொருட்கள் ஒன்றையும் கொண்டு வருவதில்லை. செல்வந்தர் வீட்டுக் குழந்தைகளும் வெறும் கையுடன்தான் பிறக்கின்றன. மனிதர் சாகும்போது ஒன்றையும் கூடக் கொண்டு போவதில்லை. பணக்காரனும் வெறுங்கையோடுதான் விடை பெறுகிறான். உயிருள்ள பொழுது தான் சிலர் செல்வந்தர்களாகவும் பலர் ஏழைகளாகவும் வாழ்கின்றனர்.

வறுமையின் தீய விளைவுகளைக் கட்டுப்படுத்தும் அல்லது தவிர்க்கும் நோக்கத்தோடு தோன்றினவைதான் நீதி உபதேசங்கள். பாவம், புண்ணியம், நியாயம்-அநியாயம் போன்ற எண்ணங்கள் தோன்றுவதற்கும் வறுமைதான் ஒரு முக்கிய காரணமாக இருந்து வந்திருக்கிறது. வறுமையே தான் மனிதனுடைய மிகச் சிறந்த இயல்பான பிறர்கஷ்டங்களைக் கண்டு இரக்கப்படுதல் அன்பு செலுத்துதல் போன்றவற்றைப் போற்றிப் புகழ்வதற்கும் வாய்ப்பை அளித்து வந்திருக்கிறது.

ஏழைகள் இருந்தால் தானே தானதர்மங்கள் செய்து புண்ணியம் சம்பாதிக்கலாம். அதன் மூலம் அடுத்த பிறவியில் நல்ல வசதி படைத்த குடும்பத்தில் பிறந்து சௌகர்யமாக வாழலாம். வறுமையின் அடிப்படைக் காரணங்களைக் கண்டு அறிந்து அவற்றை நீக்க முயற்சி செய்வதில்லை. வறுமையை நிரந்தரமாக வளர்த்துக் கொண்டு வருவது மனித வரலாறு கூறும் உண்மை.

மிருகங்கள், பறவைகளிலும் கூட ஏழை மிருகம் என்றோ , ஏழை பறவை என்றோ நாம் பார்ப்பதில்லை. ஆனாலும் மனிதர்களுக்குள் மட்டும் அறிவாற்றல், செயலாற்றல்களில் வித்தியாசங்கள் இருப்பதால். வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை சேகரிப்பதும்,

சிலர் தேவைக்கும் அதிகமாகச் சேர்த்துக் கொள்வதும், சிலரால் அந்த அளவு, தோவையன அளவு கூட சேர்க்க முடியாமற் போவதும் நாம் பார்க்கிறோம். இந்த நிலை தான் வறுமை தோன்றுவதற்கு முக்கிய காரணமாக இருந்திருக்கிறது. அதாவது தனி நபர் அல்லது தனிக் குடும்பம் அல்லது ஒரு கும்பல் தேவைக்கு மேல் அதிகமாகக்க சேமிக்கத் தொடங்கியதிலிருந்து தான் சிலர் உள்ளவர்களாகவும், சிலர் இல்லாதவர்களாகவும் மனித சமுதாயம் பிளவுபட்டு வாழ்கிறது. இந்தக் கால கட்டத்தில் தான் திருடுவதும், சொள்ளையடிப்பதும் தோன்றலாயிற்று. அதன் காரணமாக காவல் காப்பதும் திருடுபவர்களை தண்டிப்பதும் தோன்றியது.

மனிதன் தன்னை எவ்வளவு தான் உயர்வாகக் கருதினாலும், பல்லாயிரம் ஆண்டுகளாக அவ்வப்போது ஞானிகள், சிந்தனையாளர்கள் மக்களின் வறுமை நிலையைக் கண்டு மனம் நொந்து, வறுமைப் பிணியை அகற்றுவதற்கு வழிகளை எடுத்துரைத்தாலும், தம்மை சமூகத்தின் தலைவர்கள் என்று கூறிப் பெருமைப்படுபவர்கள், வறுமையின் கொடுமையைத் தாமே அனுபவிக்காத காரணத்தாலோ என்னவோ வழிகாட்டும் ஞானிகளுக்கும், பெரியோர்களுக்கும் கோவில்கள் மண்டபங்கள் கட்டி பூஜை முதலிய சடங்குகளுக்கு மட்டும் ஏற்பாடு செய்திருக்கிறார்களே தவிர வறுமையை ஒழிப்பதில் சற்றும் கவனம் செலுத்துவதில்லை. வறுமைக்கு அடிப்படை காரணங்களை அறிந்து நேரடியாக செயல்படுவதைக் தவிர்த்தே தற்காலிகக் கண்துடைப்பு சீர்திருத்தங்களில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள்.

பல்லாண்டுகளாவும், ஆண்டுதோறும் வறுமையை ஒழிப்பதற்காக பெரிய பெரிய திட்டங்கள் வகுப்பதும், பேசுவதும், எழுதுவதும் நடந்து கொண்டே இருந்தாலும் வறியவர்களின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டேதான் போகிறது. காரணம் அரசியல் தலைவர்களும், வல்லரசுகளும், பொருள் உற்பத்தியைப் பெருக்கி வியாபாரம் மூலம் கொள்ளை லாபம் காண்பதே குறிக்கோளாகக் கொண்ட சமுதாயத்தில் மக்கள் நலனைக் கருதி வறுமையை ஒழிப்பதில் கவனம் செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

இன்றைய யந்திரமய நாகரிகத்தில் இளம் சிறுவர்களும், சிறுமியர்களும், பள்ளிகளுக்குச் சென்று கல்வி பயின்றும், மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டும் வளர வேண்டிய வயதில், பேராசை பிடித்த முதலாளிகளாலும் வியாபாரிகளாலும் தீப்பெட்டி உற்பத்தி, பட்டாசு உற்பத்தி இன்னும் எத்தனையோ வித வேலைகளில் அமர்த்தப்படுகிறார்கள். இந்தச் சிறுவர், சிறுமியர் காலை 5-00லிருந்து மாலை 5-00 வரை வேலை செய்தாக வேண்டும். இல்லையேல் சாப்பாடு கிடையாது. சில நூற்றாண்டுகளுக்கு முன்னவர் இன்று போல் நிலைமை அவ்வளவு மோசமாக இல்லாத போதே இளமையில் வறுமை எவ்வளவு கொடியது என்பதை நம் தமிழ்ப் புலவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதை கட்டுரையின் ஆரம்பத்தில் கூறியிருக்கிறோம்.

முதலாளிகளின் கூலிகளாகப் பணியாற்றும் பொருளாதார நிபுணர்கள் வறுமையை ஒழிப்பது மிகமிக அவசியம் என்பதை உணர்ந்து செயல் முறைகளை வகுப்பது பற்றி அதிக அக்கரை காட்டுவதில்லை என்றாலும் மனித வளர்ச்சியின் வரலாற்றை நன்கு ஆய்ந்த மேதைகள் கார்ல் மார்க்ஸ், ஜான் ரஸ்கின், அமெரிக்க ஞானி தோரோ, ரஷ்ய ஞானி டால்ஸ்டாய், நம் நாட்டு மகாத்மா காந்தியடிகள் போன்றவர்கள் நிச்சயமாக வறுமையை ஒழிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் அதற்கான வழிமுறைகளையும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

கார்ல் மார்க்ஸின் கொள்கையின்படி உணவு உற்பத்தி நிலையங்களும், பொருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் மக்களின் பொது உடமையாக்கப்பட்டால்தான் வறுமையை நீக்க முடியும் என்று உறுதியுடன் கூறினார்.

**32. சடங்குகளும், சம்பிரதாயங்களும்**

எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும் மனிதன் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் கடைப்பிடித்தே வாழ்க்கை நடத்தி வந்திருக்கிறான். சடங்கு சம்பிரதாயங்களை அனுசரிக்காத சமூகமே இல்லை என்றே சொல்லலாம். காரணம் என்ன?

ஒவ்வொரு நாளும் மனிதன் பலவித பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவனுடைய இயல்பான அறிவு உதவிக்கு வந்தாலும், நம்பிக்கைதான் அவனுக்கு எளிதில் உதவ முன் வருகிறது. ஒரு கொடிதான் படர்வதற்கு ஏதாவது கழி, கொம்பு போன்ற ஒன்றைப் பிடித்துக் கொள்வதைப் போன்றே மனிதனுக்கு நம்பிக்கை உதவுகிறது. அறிவும் நம்பிக்கையும் பிரிக்க முடியாதவை என்றே சொல்லலாம்.

இன்றைய விஞ்ஞான யுகத்தில் தான் பகுத்தறிவு முக்கியத்துவம் பெற்று பழைய நம்பிக்கைகளில் சிலவற்றை மூடநம்பிக்கைகள் என்று பிரித்துப் பார்க்க முயல்கிறோம். ஆனால் இந்த விஞ்ஞான அறிவும் ஒருவிதத்தில் மறுக்க முடியாத மெய்ஞான பகுத்தறிவு போல் தோன்றினாலும் வேறு ஒரு கோணத்தில் பார்த்தால் அதுவும் ஒருவித நம்பிக்கையாகவும் குறுகிய நாட்டுப்பற்று, மதவெறி போன்ற சக்திகளுக்கும் பிறர்மேல் ஆதிக்கம் செலுத்த விரும்பும் ஆணவச் சக்திகளுக்கும் உதவும் அறிவாகத்தான் இருக்கிறது.

மனிதன் இறை சக்தியின் உதவியால் தனக்குத் தானே எஜமானன் ஆக முடியாத வரை, எந்தவித புறச்சக்திகளாலும் நிகழ்ச்சிகளாலும் பலியாகாமல், பாதிக்கப்படாமல் வாழ இயலாதவரை மனிதனுக்கு நம்பிக்கைகளின் உதவி தேவைப்பட்டுக் கொண்டேதானிருக்கும். நம்பிக்கைகள் இருக்கும் வரை சடங்கு சம்பிரதாயங்கள் இருந்து கொண்டேதானிருக்கும்.

மனிதன் சமூகத்தில் கூடி வாழும் பிராணியாகையால் ஒழுங்கு, கட்டுப்பாடு, கடமை போன்றவற்றை வலியுறுத்தும் சட்ட திட்டங்கள் தேவைப்படுகின்றன. அவையே சடங்கு சம்பிரதாயங்களாக மாறுகின்றன.

அர்த்தமற்ற பழைய சடங்கு சம்பிரதாயங்களை மூட நம்பிக்கைகள் என்று கூறி, அவற்றை அகற்ற ஈ.வெ.ரா. பெரியார் தம் வாழ்நாள் முழுவதும் போராடினார். பலன் என்ன? முன்னைவிடப் பன்மடங்கு வளர்ந்திருப்பதைத்தான் நாம் பார்க்கிறோம்.

தவிரவும் திராவிட இயக்கத்தினரால் சமீப காலத்தில் புகுத்தப்பட்ட சடங்குகளும் சேர்ந்துள்ளன. அரசியல் கூட்டங்களானாலும் சரி, கலாச்சாரக் கூட்டங்களானாலும் சரி, கூட்டத் தொடக்கத்தில் பேசுபவர்கள் ஒவ்வொருவரும், மேடையிலும் முன் வரிசையிலும் அமர்ந்திருக்கும் எல்லாப் பிரமுகர்களின் பெயர்களைச் சொல்லி முடிப்பதற்கே சுமார் 20 நிமிடமாவது விரயமாகிறது. சிலர் பெயரைக் கூறாவிட்டால் உள்ளூர மனத்தாங்கலுக்கும் காரணமாகிறது. பேசுபவர், தலைவர் அவர்களே, கூட்டத்திற்கு வந்திருக்கும் அன்பர்களே, என்று சொல்லி உரையைத் தொடங்கினால் போதும். மேலும் பொன்னாடைகளும், மலர்மாலைகளும் அணிவிப்பதைப் பார்த்தால், சிந்தனையற்ற செலவைப் பற்றி சற்றேனும் கவலைப்படாத சடங்குகளை நடத்தும் மிக மட்டமான மனிதர்களைத்தான் பார்க்கிறோம்.

கோவில் பூஜாரிகளையும், புரோகிதர்களையும் இடைத்தரகர்களாக வைத்து செலவு செய்து கடவுள் வழிபாடு செய்து வந்ததை மூட வழக்கம் என்று நிந்தனை செய்த பகுத்தறிவு பரப்பின கூட்டம் ஆட்சிக்கு வந்தபின் ஒவ்வொரு அரசு அலுவலகத்திலும் புதிய புஜாரிகளும் புரோகிதர்களும் தோன்றியுள்ளனர். இவர்களுக்குக் காசு கொடுக்காமல் எந்தக்

காரியத்தையும் சாதிக்க முடியாது என்னும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கிராமவாசி ஒருவர் மகனைப் பள்ளிக்குச் சேர்ப்பதற்கு சான்றிதழ் பெற நாட்கணக்கில் அலைந்தும், இறுதியில் புதிய புஜாரிகளுக்குச் செலுத்த வேண்டிய லஞ்சத் தொகையை செலுத்தினதால்தான் அவர் காரியம் நிறைவேறிற்று.

பாரதியார் ஜாதிகள் இல்லையடி பாப்பா, நம்மில் உயர்ச்சி தாழ்ச்சி சொல்லல் பாவம் என்று பாடினார். பின்னர் வந்த ஈ.வே.ரா. பிராமணர்கள்தான் ஜாதிப் பிரிவினைகளை உருவாக்கி நாட்டைக் கெடுத்தார்கள் என்று கூறி ஜாதி வித்தியாசத்தை ஒழித்துக் கட்டப் போவதாக இயக்கம் நடத்தினார். ஆனால் அவர்களுடைய சீடர்களும் இயக்கத்தினரும் அரசைக் கைப்பற்றி ஜாதியின் அடிப்படையிலேயே அரசியல் நடத்துகின்றனர். கீழ்மட்டத்திலுள்ள ஏழைகளுக்கு வழங்கும் சலுகைகளும் ஜாதியின் அடிப்படையிலேயே கொடுக்கின்றனர். முந்தைய சடங்குகள் சம்பிரதாயங்களைப் போன்றே இன்று கிராமங்கள் தோறும் கட்சிகள் வளர்ப்பதற்காக மக்களைக் கட்சிக்காரர்களாகப் பிரித்து அவர்களுக்குள் கலகங்கள், வெறுப்புகள், மோதல்கள் நடத்துவது முந்தைய ஜாதிப் பிரிவினைகளை விட ஆபத்தானது என்பதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஆம் மக்கள் ஆட்சி என்னும் பெயரில் மேற்கு இருந்து வந்த கட்சிப் பிளவுகளை நாம் வரப்பிரசாதமாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

### 33. பொருத்தமான அளவு வேண்டும்

'ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு' என்ற பழமொழி இருக்கிறது. அதைப் போலவே 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்' என்னும் பழமொழி இருக்கிறது. இக்காலத்தில் பகுத்தறிவு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று தம்மை விளம்பரம் செய்து கொள்பவர்கள் கூட சிந்தனையற்ற விதத்தில் புதிய கலாச்சாரங்களில் ஈடுபடுகிறார்கள். தம் தலைவர்களின் சிலைகளுக்கு மலர் மாலைகள் அணிவிக்கும்போது அளவு உணர்வும், கலையுணர்வும் சற்றும் இல்லாத விதத்தில் போட்டி போட்டுக் கொண்டு மலைப்பாம்பு போன்ற பருமனும், உயரமும் உள்ள மலர் மாலைகளை அணிவிக்கிறார்கள். அவர்களே உழைத்து சம்பாதித்த பணத்தைக் கொண்டு மாலைகளை வாங்குவதாயிருந்தால் சிக்கன உணர்வு வரும். அதைச் சார்ந்தே மாலையின் அளவும் பருமனும் உயரமும் குறையும். பொருத்தமான அளவில் அமையும் போதுதான் அழகு உணர்வும் வெளிப்படும்.

பொருத்தமான அளவு என்றால் என்ன? நம் முகத்தில் அமைந்துள்ள கண், காது, வாய், மூக்கு இவைகள் தகுந்த அளவில் அமையாவிட்டால் எவ்வாறு இருக்கும். சற்று மிகப் பெரியதாகவோ, மிகச் சிறியதாகவோ இருந்தால் அருவருப்பாக இருக்கிறதென்று சொல்கிறோம். சரியான அளவில் இருக்கும்போது அழகாக இருக்கிறது என்கிறோம்.

நம் ஒவ்வொரு செயலிலும், சொல்லிலும், சிந்தனையிலும் பொருத்தமான அளவைக் கையாண்டால் தான் இனிய உறவும் நற்பயனும் கிட்டும். உணவு ருசிகரமாக இருக்கிறது என்பதற்காக அளவுக்கு மிஞ்சி உண்டு வயிற்று வலியையும் மருத்துவரையும் வரவழைப்பானேன்?

மேடைப் பேச்சில் ஈடுபடுபவர்களும், வாய்ப்பு கிடைத்து விட்டால் போதும் சுருக்கமாக, ஆழமாக தம் கருத்துக்களைத் தெரிவிப்பதற்குப் பதில் வள வளா என்று பேசிக் கொண்டே போவார்கள். என் நண்பர் ஒருவர் என்னை மாலையில் சந்திக்கும்போது தாம் அன்று ஒரே மூச்சில் மூன்று மணி நேரம் பேசினதாகச் சொல்லிப் பெருமைப்படுவார். இந்த மாதிரி பேச்சாளர்கள் நேரத்தின் சிக்கனத்தைப் பற்றி கவலைப்படுவதில்லை. ஏனென்றால், நம் நாட்டில்தான் நேரத்திற்கு மதிப்பே கிடையாது. நேரத்தை வீணாக்குவதில் நம் நாட்டினரைப் போல் எங்கும் காணமுடியாது.

இன்றைய தமிழ்நாட்டில் உயர்மட்ட அரசியல் தலைவர்களிலிருந்து, அடிமட்ட கிராம மக்கள் வரை மக்கள் உயரிய பொருத்தமான கலை உணர்வையும், அழகு உணர்வையும் இழந்து நிற்பதால்தான் கட் அவுட் கலாச்சாரமும், காலுக்கு விழும் கலாச்சாரமும் வளர் சினிமாக்காரர்களுடைய ஆட்சி மேலோங்கி நேர்மை தியாகம், கண்ணியம், கட்டுப்பாடு போன்ற மனிதப் பண்புகள் மறைக்கப்படுகின்றன. நாட்டில் தரமான மனிதர்கள் மதிக்கப்படுவதில்லை .

நாட்டு மக்களில் பெரும்பாலோர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வது தெரிந்தும் செல்வந்தர்களும் அரசியல்வாதிகளும் மேலும் மேலும் தம் சொத்தைப் பெருக்குவதிலேயே இன்பம் காண்கின்றனர். இன்றைய நிலைமையைப் பார்க்கும் போது சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி, பாரதி போன்ற மகான்களின் சிந்தனைகள், செயல்கள் யாவும் விழலுக்கிரைத்த நீர் போலல்லவா தோன்றுகிறது. எனினும் நல்ல எண்ணங்கள் படைத்த அறிஞர்கள் சோர்ந்து போகாமல், நம்பிக்கையை இழக்காமல் செயல்பட்டால்தான் இந்தியாவின் பொற்காலம் மலரும்.

**34. எதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும்?**

நாம் யாவரும் சௌக்கியமாக, மகிழ்ச்சியுடன் வாழத்தான் விரும்புகிறோம். ஆனால் நம் எண்ணங்கள், விருப்பங்கள் செயல்களாக மலரும்போது பலவித பிரச்சினைகள் சிக்கல்கள் தோன்றுகின்றன. எத்தனையோ இடையூறுகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. அச்சமயம் நமக்கு வழிகாட்டியாக உதவ, எச்சமயமும் தயாராக இருப்பது நம் அறிவுதான். நம் அனுபவ அறிவு, கல்வியறிவு, பெரியவர்களின் வாழ்க்கை மூலம் கிடைக்கும் அறிவு இவ்வாறாக பலவித அறிவுகள் நமக்குப் பயன்படுகின்றன.

அறிவைப் பயன்படுத்தும்போது நமக்குப் பிறருடைய ஒத்துழைப்பு மிகவும் தேவைப்படுகிறது. சொந்தக் குடும்பத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்பு, நண்பர்களின் ஒத்துழைப்பு, சமூகத்தினரின் ஒத்துழைப்பு, அரசு யந்திரத்தின் ஒத்துழைப்பு இவ்வாறாகப் பலவித ஒத்துழைப்பைப் பெற்றுதான் நாம் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

ஒத்துழைப்பைப் பெறுவதற்கு மிக அவசியமானது நம் அன்பு நிறைந்த உறவுதான். அன்பின் மூலம் உறவை வளர்த்து வந்தால் எல்லாவித ஒத்துழைப்பும் எதிர்பாராமலேயே கிடைத்துக் கொண்டிருக்கும். ஆனால் அன்புக்குப் பதிலாக ஆதிக்க வெறியும், குறுகிய சுயநல நோக்கும் தலைதூக்கினால் இனிய உறவு, உதவக்கூடிய உறவு மாறி, கசந்த எதிர்ப்பு உறவுதான் வளரும்.

அதாவது நம் வாழ்க்கை இனிதாக மகிழ்ச்சி நிறைந்ததாக அமையாவிட்டால் அதற்கு நாம் தான் காரணம் என்பதை உணர்ந்து செயல்படவேண்டும். நம் வாழ்க்கையில் சிக்கல்கள் தோன்றும்போது அதற்கு சூழ்நிலைகள் வாய்ப்புகள்தான் காரணம் என்று நம்மை தவிர்த்து பிறர்மேல் குற்றத்தைச் சுமத்த பார்க்கிறோம். மேலும், பிரச்சினைகளை நாமே பிறர் ஒத்துழைப்புடன் தீர்ப்பதற்குப் பதில், அதாவது தன் நம்பிக்கையில் நம்பிக்கை வைத்து சுய அறிவைப் பயன்படுத்தாமல், கடவுள் மேல பாரத்தைப் போட்டு பூஜாரிகளின், ஜோதிடர்களின், மந்திரவாதிகளின் மேல் நம்பிக்கை வைத்து இருள் நிறைந்த பாதைகளைத் தேடுகிறோம்.

நாம் வாழ்க்கை நடத்தும் அரங்கம், நம்மைச் சுற்றியுள்ள இயற்கைப் படைப்புகளின் மத்தியில்தான் என்பதையும் மறந்து தன்னம்பிக்கையும் இல்லாமல் அறிவையும் அன்பையும் பயன்படுத்தாமல் போலிச் சாமியார்களின் உதவியை நாடி அலையும் அரசியல்வாதிகளையும் பார்க்கிறோம். காரணம், இவர்கள் வாழ்க்கையில் முதலிடம் கொடுப்பது அன்பினாலும் அறிவினாலும் கிடைக்கும் அமைதி நிறைந்த மகிழ்ச்சிகரமான வாழ்க்கையன்று, பணத்தைக் கொண்டு எளிதில் விலைக்கு வாங்கக்கூடிய யந்திர நாகரிக வாழ்க்கைக்குத்தான் முதலிடம் கொடுக்கின்றனர். பணத்திற்கே முதல் மரியாதை செலுத்துகின்றனர்.

**35. மனிதர்களாக உயர்வோம்**

நம்மை நாம் மிருகங்களைவிட உயர்ந்தவர்கள் அறிவாற்றல் படைத்த மனிதர்கள் என்று சொல்லிக் கொண்டாலும், உண்மையில் நாம் இன்னும் மனிதர்களாக உயரவில்லை. அவ்வபோது காந்தியடிகள் போன்ற மகான்கள் தோன்றி நாம் மனிதர்களாக உயர்வதற்கு வழிகாட்டி, தாமே அவ்வழியில் வாழ்ந்து காட்டினாலும் நாம் இன்னும் மிருகங்களைப் போலவே உடல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் காரியங்களில்தான் அதிக சிரத்தையுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

நாம் நல்ல மனிதர்களாக வேண்டும் என்ற சிந்தனையே இல்லாமல் தான் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறோம். முதலில் நாம் ஒவ்வொருவரும் மனிதர்களாக வேண்டும். கற்றவராயிருந்தாலும் சரி, கல்லாதவராயிருந்தாலும் சரி, ஏழையாயிருந்தாலும் சரி, செல்வந்தராயிருந்தாலும் சரி, தலைவராயிருந்தாலும் சரி, சீடர்களாயிருந்தாலும் சரி, பக்தர்களாயிருந்தாலும் சரி, அல்லது நாத்திகராயிருந்தாலும் சரி, முதலில் மனிதப் பண்புகள், மனித நேயம், அன்பு, சத்தியம், நேர்மை, தியாகம், பணிவு போற மனிதப் பண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்க்கை நடத்த வேண்டும். முயற்சி செய்து நம்மை நாமே மனிதர்களாக உயர்த்திக் கொள்ள வேண்டும். அதாவது, நாம் உண்மையான மனிதர்களான பின்னர்தான் வாழ்க்கையில் இன்பம், அமைதி, மகிழ்ச்சி மலரும்.

மனிதன் அவ்வித முயற்சிகளில் முழுமனதுடன் செயல்படாதவரை, எவ்வளவுதான் அறிவை வளர்த்தாலும் கலைகளை வளர்த்தாலும் தத்துவ ஆராய்ச்சிகளில் ஈடுபட்டாலும் சமய ஆச்சாரங்களைக்  கடைபிடித்தாலும் விஞ்ஞானம் வளர்த்தாலும், தொழில்நுட்பக் கருவிகளைக் கண்டுபிடித்தாலும் மனித வாழ்க்கையை இனிமையாக்கவோ, பயன்தரும் பணிகளில் ஈடுபட்டு பலனடையவோ இயலாது என்னும் உண்மையை உணர்ந்து நாம் செயல்படவேண்டும்.

நல்ல சிறந்த மனிதர்கள் ஆக்கும் சூழ்நிலைகளை உருவாக்காமல், வெறும் உபதேசங்கள் செய்தோ, நூல்கள் எழுதியோ, மனித நேயத்தை வளர்க்க முடியும் என்று நினைப்பது பகற்கனவுதான், நல்ல சூழ்நிலைகளை உருவாக்குவதற்கு வெறும் பிரச்சாரம் மட்டும் போதாது. சமூக நலம் கருதும் அரசுச் சட்டங்களை இயற்றி அவற்றை மீறுபவர்களுக்கு கடும் தண்டனைகள் கொடுக்கவும் தயங்காது முன்வரவேண்டும். அரசை நடத்துபவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும். மேலும் வல்லவர்களாகவும் அச்சமில்லாதவர்களாகவும் இருக்க வேண்டும்.

## 36. காரணங்கள் ஆயிரம் உண்டு

நம் வாழ்க்கையில் வெற்றிக்கும், தோல்விக்கும் ஆயிரம் காரணங்களைக் கூறி திருப்தியடையலாம். அந்த நிலைமையை மாற்றி எவ்வாறேனும் எடுத்த காரியத்தில் வெற்றியடைய வேண்டும் என்ற உறுதியுடன் செயல்படுவது தான் அறிஞர்களுக்கு அழகு. ஆனால் நம் சமூகத்தில் சொல்லாற்றல் மிக்கவர்கள் தான் கௌரவிக்கப்படுகிறார்கள் அவர்களேதான் ஆட்சியும் புரிகிறார்கள். செயலாற்றலைப் பற்றி அவ்வளவு அக்கறை காட்டுவதில்லை. இது தான் நம் நாட்டின் தனிச்சிறப்பு என்று கூறுமளவு சொல்லாற்றல் மூலம் நாம் என்ன பயனடைந்துள்ளோம் என்பதைப் பற்றி சற்றேனும் கணக்குப் பார்ப்பதில்லை. நிலைமையில் சரிவு ஏற்பட்டிருந்தாலும் அதைப் பற்றி நாம் கவலைப்படுவதுமில்லை. அரிய கருத்துக்களை அலங்காரச் சொற்களாலும் அடுக்கு மொழியாலும் மக்களைக் கவரும் சொல்வீரரை அறிஞர் என்று புகழ்ந்து பாராட்டி மகிழ்கிறோம். கௌரவிக்கிறோம்.

ஆனால் அவருடைய ஆற்றலைப் பாராட்டும் நாம் அவருடைய அறிவுரைகளைக் கேட்டு நம் சொந்த வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் ஒழுக்கத்தையும் கண்ணியத்தையும், கடமைகளையும் கடைபிடித்து வாழத் தவறினால், அதற்குக் காரணம் என்ன என்று அறிய முனைவது தவறாகாது. அத்தகைய முயற்சிதான் இக்கட்டுரையின் நோக்கம்.

பொருளாதாரம், கல்வியறிவு, ஆரோக்யம் முதலியவற்றில் மிகவும் ஏற்றத் தாழ்வுகள் நிறைந்ததுதான் நம் சமுதாயம். சமூகத்தில் எல்லாரும் மனிதர்கள்தான். இந்தியர்கள்தான். தமிழர்கள்தான். என்றாலும் நம்மை உருவாக்கும் சூழ்நிலைகள் ஒரே மாதிரி இல்லாமல் நாம் பல படிகளில் உயர்ந்தும், தாழ்ந்தும், பிரிக்கப்பட்டும், வாய்ப்பு, வசதிகள் சிலருக்கு அதிகமாகவும், பலருக்கு இல்லாமலும் வாழும், அறிவியல் ரீதியில் அமைக்கப்படாத கூட்டம்தான் நாம். அதாவது நம் சமுதாயம், தீர்க்க முடியாத நோய் ஒன்றால் பீடிக்கப்பட்டவனைப் போன்ற ஒரு நிலையில் உள்ளது.

மந்திரத்தால் தீராத நோயை அறுவை சிகிச்சைதான் ஒரே விதி என்னும் நிலையை எட்டின நோயாளியைக் காப்பாற்ற வேண்டுமானால் அறுவை சிகிச்சையை மேற்கொள்ள சொல் வீரர் செயல் வீரராகவும் மாற வேண்டும். ஆனால் சொல்வது எல்லாருக்கும் எளிது. அதைச் செயலாக்குவது மிக மிகக் கடினம். ஆகையால் சொல்வீரர்களை, மக்கள் நலனைச் சிறிதேனும் கருதாத சுயநலமிகள் தம் வலைக்குள் போட்டுக் கொள்கின்றனர்.

சொல்வீரர் ஏன் செயல்வீரராக மாறுவதில்லை? காரணம், அவரும் மனிதர் தானே. சூழ்நிலையும், காலமும், வாய்ப்புகளும் சேர்ந்து உருவாக்கின மனிதர்தான் தலைவரும், தாம் செயல்வீரராக மாறினால் என்ன என்ன எதிர்ப்புகளைச் சந்திக்க நேரும், அந்த எதிர்ப்புகள் மிகவும் சக்தி வாய்ந்தவைகளாக இருந்தால் தம்மால் நிலைமையைச் சமாளிக்க முடியுமா? தம் சொல்லாற்றலால் மயங்கும் மக்களை நம்பி ஆற்று வெள்ளத்தில் இறங்கினால் நீந்திக் கரையேற முடியுமா? இவ்வாறான பல கேள்விகள் மனதில் எழும்பும்போது, உள்ளிருந்து ஜாக்கிரதை செய்யும் குரலுக்கு இசைந்து போவதுதான் புத்திசாலித்தனம் என்று கருதுவதுண்டு. அதே சமயம் எதிர்ப்பு சக்திகளிடமிருந்து ஜாக்கிரதைப்படுத்தும் தூதர்களும் வந்து சேர்கின்றனர். சொல்வீரர் செயல்வீரராக மாறினால் வரும் ஆபத்துக்களையும் எடுத்துக் கூறி அவற்றைத் தவிர்ப்பதற்கு வேறு மார்க்கங்களையும் சொல் வீரரை செயல் வீரரைப் போல் காட்டுவதற்கான எளிய பாதைகளையும் எதிரிகளின் தூதர்கள் சொல்லி எச்சரிக்கை விடுக்கக்கூடும்.

தவிர அயல்நாட்டு அன்பர்களும் தங்கள் சொந்தக் குறிக்கோள், கொள்கைகளுக்கும் ஆபத்து வராதபடி பார்த்துக் கொள்ள, சொல்லாற்றல் படைத்த வீரருக்கு வழிகாட்ட முன்வருவதுமுண்டு.

இவ்வாறு, சொல்லாற்றல் படைத்த ஆரம்பகால சூரர்கள், செயலாற்றலில் இறங்காமல், ஏழை, எளிய மக்களுக்கு உருப்படியான நன்மைகள் ஏதும் செய்யாமலேயே புகழேணியில் உச்சிவரை ஏறியும் மறைகிறார்கள் என்றால் அதற்குக் காரணங்கள் ஆயிரம் இருக்கலாம். அவற்றில் ஒரு காரணம், ஏழை எளிய மக்களின் தலைவிதி தான் என்று சொல்லி ஆறுதல் கூறலாம்.

ஆகையால் ஆரண்யம் முழுவதையும் தம் கர்ஜனையால் அலரவைக்கும் இளம் சிங்கத்தையும் வேட்டைக்காரன் இலகுவாகத் தன் வலையில் சிக்க வைத்து சர்க்கஸ் கம்பெனிக்கு விற்றுவிடுகிறான். வேட்டைக்காரன் தன் வலையில் இளம் சிங்கத்தை சிக்க வைப்பதற்கு காட்டில் வசிக்கும் கிழட்டு குள்ள நரியின் உதவியையும் பயன்படுத்துகிறான்.

## 37. ஒளியும், ஒலியும்

மனதை அடிப்படையாக வைத்துத்தான் மனித வாழ்க்கை அமைந்திருக்கிறது. மனதிற்கு உதவுவது மூளை. மூளை செயல்படுவதற்குப் பயன்படும் மிக முக்கியமான, அத்யாவசியமான கருவிகள் தான் கண்ணும் காதும். இந்த இரண்டு வித கருவிகளும் வெறும் ஜன்னல் கதவுகள் தான். இந்த ஜன்னல் கதவுகளின் வழியாகச் சென்று மூளையின் மிக நுண்ணிய நரம்புகளை உணர வைப்பது, இயங்க வைப்பது, ஒளியும் ஒலியும் ஆகிய வெளியிலிருந்து வந்து சேரும் பொருட்கள்தான்.

இந்த ஒளியும் ஒலியும் எப்பொழுது தோன்றின, எது முதலில் தோன்றியது, ஒளியா, ஒலியா? நமக்குத் தெரியாது. ஓங்கார நாதம்தான் முதலில் தோன்றியது என்பாரும், ஒளிப்பிழம்புதான் முதலில் தோன்றியது என்று வாதிடுவாரும் உண்டு. அநாவசியமான வாதம்.

நம் காதிற்குள் வந்து சேரும் ஒலி அலைகள் தோன்றுவதற்குக் காரணமாயிருப்பவை காற்றும் நீரும்தான் என்று உறுதியாகச் சொல்லலாம். காற்றையும் நீரையும் இயங்க வைப்பது சூரிய ஒளியே. ஆகையால் பஞ்சபூதங்களான காற்றும் நீரும் சூரிய ஒளியும் ஆதியில் பொருட்களும், உயிரினங்களும் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தவைகளே. அவைகளே ஒளி-ஒலிகளின் இயக்கங்களுக்கும் காரணமாயிருக்கின்றன.

காற்று வீசும்போது மரம் செடி கொடிகளின் சலசலப்பு, நமக்குக் கேட்கிறது. பறவைகள், மிருகங்கள், பூச்சிகள் எழுப்பும் ஒலிகளும், ஒலி அலைகளாக நம் காதுக்கு வந்து சேருகின்றன. மழை சோவென்றும், சட சடவென்றும் பெய்யும்போது காற்று அலைகளாக நம் காதிற்குள் நுழைகிறது. இடி, மின்னல், மேகங்களின் கர்ஜனையும் நம்மை வந்தடைகின்றன. நீர்வீழ்ச்சியின் இரைச்சலும், அருவி நீரின் சலசலப்பும் கடல் அலைகளின் ஓய்வில்லாத முழக்கமும் நமக்குப் பழக்கமானவை. இவை யாவும் இயற்கையில் தோன்றி நம்மை வந்தடையும் ஒலிகள். இவற்றில் சில நம் மனதில் மகிழ்ச்சியையும் சில பயத்தையும், சில ஆச்சர்யத்தையும் தோற்றுவிக்கின்றன.

இவற்றைத் தவிர மனிதர்களே உண்டாக்கும் ஒலிகளும் இருக்கின்றன. கூட்டம் கூடி உரக்க இரைந்து பேசும் போது எழுப்பும் ஒலி ஒருவிதம். உரக்கத் கத்திப் பயமுறுத்தும்போது எழுப்பும் ஒலி ஒருவிதம். பயத்தினால் ஓவென்று அலறி, கத்தி அழும் போது எழும் ஒலி ஒருவிதம். இனிமையாகப் பேசி மகிழ்ச்சியைக் கொடுக்கும் ஒலி ஒருவிதம். குழந்தைகளின் குரல் ஒலி, பெண்டிரின் குரல் ஒலி, ஆண்களின் குரல் ஒலி, இவ்வாறாக ஒலிகளின் தன்மைகளும் வேறுபடுகின்றன.

மனிதன் ஒலிகளின் தன்மையை உணர்ந்து அவற்றைப் பயன்படுத்தி மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியவாறு சேர்க்கும் ஒலிகளின் அமைப்புதான் இசை, சங்கீதம், கவிதை இவையாகும். குரல் ஒலியின் சந்தம் நிறைந்த அமைப்புதான் பாட்டு. இசைக் கருவிகளான குழல், யாழ், வீணை, மத்தளம், மிருதங்கம், கொட்டு, முதலியவற்றின் ஒலிகளும் இசைகளே ஆகும். மனிதன் மனத்திற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் வகையில் சந்தம் சேர்த்து, கேட்டு மகிழ்கிறான். சாதாரணமாகப் பேசும் பேச்சையும் சந்தம் ஒலிக்கும் அடுக்கு மொழிகளால் கவிதையாக்கி இன்புறுகிறான்.

தமக்குள் கருத்துக்களை பறிமாறுவதற்கும், எண்ணங்களை வெளியிட்டு உரையாடுவதற்கும் வாயினால் எழுப்பும் ஒலியைத்தான் மொழி என்கிறோம். வெகுகாலம் வரை மொழி

மனதில் வைத்து, மனப்பாடம் செய்து பயன்படுத்தும் ஒலி வடிவிலேயே இருந்தது. எழுத்து கண்டுபிடித்த பின்னர்தான் ஒலியை விரும்புபோது திரும்ப ஒலிக்க வைத்து எண்ணங்களை வளர்க்க நூல்கள் உதவின. அதாவது ஒலிகளின் சின்னம் எழுத்து வடிவில் நிலையான தன்மையைப் பெற்றது. ஒலிகளைப் பதிவு செய்யும் மின் யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒலிகளுக்கு புரட்சிகரமான நிரந்தர நிலையான தன்மையும், ஒலி பெருக்கிக் கருவியின் மூலம் நுண்மையான இனிமையான இசையையும் இரைச்சலாக்கி கீழ்த்தரமாகவும் பயன்படுத்தும் நிலையும் உருவாகி இருக்கிறது.

இங்கே ஒரு முக்கிய விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். அதாவது ஒலிக்கும் ஒளிக்கும் உள்ள உறவு. பிரபஞ்சத்தில் நாம் பார்க்கும் ஒவ்வொன்றும் ஒளியின் காரணமாக ஒரு உருப்பெற்று நம் கண்ணுக்குள் ஒளி அலைகளாகப் புகுந்து மூளையை அடைவதால்தான் உருவங்களின் காட்சிகளாக மனம் உணர்கிறது. ஒளி அலைகளே இல்லாதிருந்தால் உலகில் தோன்றியிருக்கும் விசித்திர விநோதமான படைப்புகள் ஒன்றையுமே நாம் உணராத நிலையில் இருந்திருப்போம். எண்ணங்களை வெளிப்படுத்தி உரையாடுவதற்கான மொழியே தோன்றியிருக்காது. ஒலி மட்டும் இருந்திருந்தால் சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்டாலும் அது எங்கிருந்து வருகிறது என்பதை அறியாமல்தான் இருந்திருப்போம்.

மனிதன் ஒலியின் மூலம் சந்தம் நிறைந்த கீர்த்தனைகள் அமைத்து இறைவனுடைய புகழ்பாடி பக்தி செலுத்தி மகிழ்வதைப் போன்று, இறைவனை ஒளிவடிவிலும் இனிய சந்தம் நிறைந்த விக்கிரகங்களை உருவாக்கிப் பூஜிக்கக் கற்றுக் கொண்டான். காவியங்கள் ஒலிவடிவில் படைக்கப்பட்டிருந்தாலும், அவைகள் யாவும் ஒளிமயமான உருவங்களின், இயற்கைக் காட்சிகளின் வர்ணனைகள்தான். ஒலிமயமான இலக்கியப் படைப்புகளும் இயற்கையின் இந்த முப்பரிமாண பருப்பொருட்களாலான நம் உலகம் ஒளி அலைகளின் இயக்கத்தின் காரணமாக வியக்கத்தக்க வடிவங்களின் காட்சிகளாக நம் மனதைக் கவர்கின்றன. நம் மனமும் ஒலி வடிவைக் கொண்டு, அதாவது வார்த்தைகளைக் கொண்டு வடிவக் காட்சிகளுக்கு மேலும் உயிர் ஊட்டி மகிழ்கிறது.

மனம் இயற்கையை, படைப்பை முழுமையாக ரசிப்பதற்கு ஒலியும், ஒளியும் சேர்ந்துதான் உதவுகின்றன. என்றாலும் ஒளியின் மூலம் கிடைக்கும் காட்சிதான் முதலிடம் அல்லது முக்கியத்துவம் பெறுகிறது. முற்றிலும் கண்பார்வை இல்லாதவர்களும் வாழ்க்கையை ரசிக்கிறார்கள் என்றாலும், கண் பார்வையை இழக்காமல், காது முற்றிலும் கேட்காமல் செவிடாக இருந்தாலும், காது இல்லாதவர்களை விட வாழ்க்கையை அதிகமாகவே ரசிக்க முடியும் என்றே சொல்லலாம்.

சிருஷ்டியின் ஆரம்பத்தில் ஒலி, ஒளி ஒன்றுமே இல்லாத சூன்யம் மட்டும் பரவி இருந்ததாகவும் திடீரென்று ஒரு பெரிய வெடிப்பு, ஒளிப்பிளம்பின் பயங்கர வெடிப்பு ஒன்று நிகழ்ந்திருக்க வேண்டும், அதன் காரணமாகத்தான் கோடானு கோடி நட்சத்திர மண்டலங்களும் தோன்றியிருக்கின்றன என்றும் வானவெளி விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அதற்காக ஒளி அலைகளின் தன்மையை ஆராய்வது போன்று ஒலி அலைகளை ஆராய்வது இல்லை. ஒரு வேளை ஒலி அலைகள் விண் வெளியிலிருந்து ஆய்வு செய்யுமளவு வருவதில்லையோ?

### 38. முளையில் கட்டப்பட்ட ஆடு, மாடுகள்

ஆடு மாடு மேய்ப்பவர்கள் சில சமயங்களில் தம் கால்நடைகள் வேறு புலங்களில் நுழைந்து மேயாமல் தடுப்பதற்காக அவைகளை நீண்ட கயிற்றால் கட்டி தரையில் பலமாக அழமாக செலுத்தப்பட்ட முளைகளில் கட்டிவிடுவார்கள். அவைகளால் கயிற்றின் நீளம் வரை சுதந்திரமாய் மேய முடியும். அப்பால் செல்ல முடியாது. ஆனால் வேண்டிய அளவு கத்துவதற்கு சுதந்திரம் உண்டு .

நம் அரசியல் வாதிகள் தம் கட்சி என்னும் முளையில் நன்றாகக் கட்டப்பட்ட ஆடு, மாடுகளைப் போன்றவர்கள் தான் என்று சொன்னால் தவறாகாது. கயிற்றின் நீளத்தைப் பொருத்ததுதான் அவர்களுடைய சுதந்திரம், கட்சியின் கட்டுப்பாடு ஆகிய கயிற்றின் நீளத்திற்குள்ளேதான் சுதந்திரம்.

சனநாயக முறையில் நடக்கும் அரசின் கீழ் வாழும் சாதாரண மக்களும் கண்ணுக்குத் தெரியாதவாறு பொருளாதார ஏற்றத் தாழ்வுகளான கயிற்றால் கட்டுண்டிருப்பதால் அவர்களுடைய சுதந்திரம் அவர்களுடைய வருமானத்தை அநுசரித்து, அவர்களுடைய பர்ஸை அநுசரித்துத்தான் இருக்க முடியும். ஆனால் அவர்களுக்கு பேச்சுத் சுதந்திரம் மட்டும் வேண்டிய மட்டும் உண்டு. எவ்வளவு வேண்டுமானாலும் 'பே... பே...' என்று கத்திக் கொண்டே இருக்கலாம். அவர்களுடைய கழுத்தில் கட்டி முளையோடு முடிச்சு போட்டிருக்கும் கயிற்றின் நீளத்தின் அளவுதான் அவர்களுடைய சுதந்திரம்.

மனிதர்களெல்லாருமே இயல்பாக விரும்புவது பாதுகாப்பும், மற்றவர்களால் மதிக்கப்படுவதும் என்று சொல்லலாம். இந்தப் பாதுகாப்பும் மதிப்பும் சமூகத்தில் சேர்ந்து வாழ்வதனால் கிடைக்கும் பலன் என்றும் சொல்லாம். இதற்காக எல்லாருமே அவரவர் வாழும் சூழ்நிலைகளை அநுசரித்தும் வாய்ப்புகளை அநுசரித்தும், நாடு, மொழி, மதம், ஜாதி ஆகிய ஏதாவது ஒரு பலமான முளையில் கட்டப்பட்ட கயிற்றைக் கழுத்தில் மாட்டிக் கொண்டு கயிறு அனுமதிக்கும் நீளத்திற்குள்ளேயே மேய்ந்து பே பே என்றும் கத்தும் சுதந்திரத்துடன் இயங்குகிறோம்.

இவ்விதமான முளைகள், தளைகளைத் தவிர்த்து சுயமாக சிந்தித்து வாழவிரும்புபவர்கள் மிகச்சிலரே இருக்கின்றனர். ஏதாவது ஒரு கும்பலில் சேர்ந்து, ஒரு தலைவரை ஏற்று ஒரு வட்டத்திற்குள் வாழ்வதில் ஒரூ நிம்மதி, சுகம், மகிழ்ச்சி கிடைக்கிறது. இத்தகைய கும்பல்களும், வட்டங்களும், தலைவர்களும் உலகெங்கும் காணப்படுகின்றனர்.

சொல்லப்போனால் நாம் ஓரளவு எல்லாருமே ஏதாவது ஒரு வட்டத்தில் சேர்ந்து உறவாடி சுயமரியாதையைப் பெற்றுக் கொண்டிருப்போம். அவரவர்கள் புரியும் பணிகளின் அடிப்படையிலும் பொருளாதார அந்தஸ்தின் அடிப்படையிலும் நம் விருப்பத்திற்கொப்ப கும்பலைச் சேர்த்துக் கொள்கிறோம். தவிர, தத்தம் அறிவு வளர்ச்சி, ஆற்றலை வெளிப்படுத்த அவசியமான வாய்ப்புகள் அளிக்கும் கும்பலைத்தான் நாடுவோம்.

ஆத்மீகம் பேசும் கும்பல்களும் அரசியல் பேசும் கும்பல்களும், இலக்கியம் பேசும் கும்பல்களும் மலிந்து பெருகிக் கொண்டிருப்பதால் ஏதாவது ஒரு கும்பலின் தலைமையின் முளையில் நம் கழுத்துக் கயிற்றை மாட்டிக் கொள்வதில் தான் நம் நிம்மதி கிடைக்கிறது. எந்த கும்பலுடனும் சேராமலும் எந்த முளைக் கயிற்றிலும் சிக்கிக் கொள்ளாமலும் வாழும் மனிதர்கள் இருக்கிறார்களா? அது இயலுமா?

எந்த மனிதரும் பிறக்கும் முன் குறிப்பிட்ட நாட்டில் அல்லது குறிப்பிட்ட மதத்தில் தாம் பிறக்க வேண்டும் என்று விரும்பிப் பிறப்பதில்லை. மதம், மொழி, ஜாதி, நாடு என்ற எந்தவித முத்திரையும் குத்திக் கொள்ளாமல்தான் எல்லாக் குழந்தைகளும் பிறக்கின்றன. எல்லா நாட்டுக் குழந்தைகளும், சீனக் குழந்தைகளும் இந்தியக் குழந்தைகளும் வெள்ளைக்கார அல்லது ஆப்பிரிக்க நாட்டுக் குழ்னதைகளும் ஒரே மாதிரிதான் அழுகின்றன, சிரிக்கின்றன, விளையாடுகின்றன. பின்னர், ஏன் அவர்களே வளர்ந்து பெரியவர்களானதும் அந்நியர்களாகி விடுகிறார்கள்? உணவு, உடை, பழக்க வழக்கங்கள் சிலவற்றில் வித்தியாசப்பட்டாலும் மனிதர்கள்தானே. ஒருவரையொருவர் நேசித்து இனிய உறவுடன் ஏன் வாழக்கூடாது?

வெறியர்கள் கும்பலாகப் பிரிந்து மதம், மொழி, நாடு, ஜாதிகளின் பெயரால் தம்மை உயர்த்திக் காட்டி, தற்பெருமையுடன் வாழ்வதற்காக அமைத்திருக்கும் ஸ்தாபனங்களில் சேர்ந்து, சாதாரண மனிதர்களும் எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் ஓர் குலம் என்ற உணர்வுடன் வாழாமல் முளையில் கட்டப்பட்ட ஆடுமாடுகள் மாதிரி சுதந்திரச் சிந்தனைகள் இல்லாமல் வாழ்வதைத்தான் நாம் பார்க்கிறோம்.

அவ்வப்போது மந்தை மனப்பான்மையையும், கும்பல் மனப்பான்மையையும் கண்டித்து அறிஞர்களும் தத்துவ மேதைகளும் எச்சரித்து வருகிறார்கள். சுதந்திரமாக சிந்திப்பதற்கும், செயல்படுவதற்கும் கும்பல் மனப்பான்மை இடம் கொடுக்காது. ஒவ்வொருவரும் தனித்தேதான் சிந்தித்து அறிவுக் கண்ணைத் திறந்து ரசனை உலகில் பிரவேசித்து முக்திப் பாதையில் முன்னேற முடியும் என்றும், கும்பலாய்க் கூடி குருவாகிய முளையில் கட்டப்பட்டு விடுபவர்களாய் ஆத்மீகத்தில் முன்னேற முடியாது, இன்பம் காண முடியாது என்றும் தத்துவ மேதை சொல்கிறார். ஆனால் தத்துவ மேதையையே குருவாக்கி சுயசிந்தனையின்றி மேதையின் சொற்களையே உளறுவதில் இன்பங்காண்கின்றனர்.

ஏனென்றால் இவர்கள் ஈடுபட்டிருக்கும் வாழ்க்கைத் தொழிலோடு இந்தத் தத்துவ மேதைகாட்டும் மார்க்கத்திற்கு எவ்வித் தொடர்பும் இருக்காது என்பது மட்டுமல்ல நேர் விரோதமாகவும் இருக்கும் என்றாலும் இந்தக் குருவின் கும்பலில் சேர்வதால் ஒருவித சமூக அந்தஸ்தும், மரியாதையும், மனதிற்கு ஒரு பாதுகாப்பும் கிடைக்கிறது. தாங்கள் ஈடுபட்டிருக்கும் தொழிலில் முழுகவனம் செலுத்திப் பணம் ஈட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருந்தாலும் மனதிற்கு சற்று ஓய்வும் போதை மாதிரி மயக்கமும் கிடைக்கிறது இந்தத் தத்துவ மேதையின் சீடர்களின் கும்பலில் சேருவதால், என்பதையுணர்ந்து செயல்படுகின்றனர்.

வேறுசில ஆத்மீக வழிகாட்டிகள் சீடர்களைப் பார்த்து முதலில் என் தலைமையாகிய முளையில் உன் கழுத்துக் கயிற்றைக் கட்டிக் கொண்டால் தான் உனக்கு முக்தி கிடைக்கும்' என்பார்கள். சங்கராச்சாரியாரின் பக்தர்கள், சாயிபாபா பக்தர்கள், மேல் மருவத்தூர் சாமி பக்தர்கள், ரமண மகரிஷியின் பக்தர்கள், விசிறி பாபாவின் பக்தர்கள் என்று பலவித முளைகளில் கட்டப்பட்ட மக்கள் கும்பல்களைத்தான் நாம் எங்கும் பார்க்கிறோம். சுதந்திரமாகச் சிந்தித்து செயல்படும் மனிதர்கள் அரிதாகிக் கொண்டே வருகிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

39. **இயற்கையும், கலப்படமும்**

மெண்டேல் என்னும் பாதிரியார் தாவரங்களின் வளர்ச்சியைப் பற்றி விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டு முதன்முதலாக பயன்படும் பல அடிப்படை உண்மைகளைக் கண்டுபிடித்தார். பட்டாணிச் செடிகளின் விதைகளை, நோயற்ற திரட்சியான விதைகளாக விளைவிப்பதற்கு ஆராய்ச்சியில் ஈடுபட்டார். மலர்களின் மகரந்தப் பொடிகளை வெவ்வேறு பட்டாணிச் செடிகளின் மலர்களின் மகரந்தத் பொடிகளோடு தடவி பலன் கண்டார். பின்னர் வந்த விஞ்ஞானிகளும் மற்ற பல துறைகளில் கலப்பு ஆராய்ச்சியை நடத்தி மனிதர்கள் வளர்க்கும் ஆடு, மாடு, கோழி, வாத்து, நாய், பூனை, குதிரை முதலிய இனங்களிலும் விதவிதமான புதிய ரகங்களை, வீரியம் மிக்க நோயற்ற இனங்களை உருவாக்கியுள்ளனர்.

ஆனால் இம்மாதிரியான கலப்பு ஆராய்ச்சியை விஞ்ஞானிகள் மனித இன மேம்பாட்டுக்கு விரிவாக்கவில்லை. என்றாலும் இயற்கையே, பஞ்சங்கள், போர்கள், படையெடுப்புகள் மூலம் மக்களை இடம் பெயரச் செய்து இனக் கலப்படம் நிகழ்த்திக் கொண்டே தான் இருக்கிறது. வட இந்தியாவில் முஸ்லீம்களின் படையெடுப்புகளின் மூலம் மறைவாக எவ்வளவோ குடும்பங்களில் இரத்தக் கலப்பு நிகழ்ந்திருக்கிறது.

மகாபாரதத்தை எடுத்துக் கொண்டால், பஞ்ச பாண்டவர் முதல் அசாதாரண வீரர்கள், அறிவாளிகள் எல்லாரும் கலப்படத்தில் பிறந்தவர்களாகத் தான் இருக்கிறார்கள். அக்கால கட்டத்தில் குலம், கோத்திரம், ஜாதி, கற்பு முதலியவற்றில் அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தாகத் தெரியவில்லை. தென்னிந்தியாவில், கேரளாவில் வெகு காலந்தொட்டே மேற்கு ஆசிய நாடுகளான அரபிய நாடுகளிலிருந்து கடல் வழியாகவும், கடற்ரையோரமாகவும் வாணிபம் செய்ய வந்தவர்களும் கிறிஸ்துவ, இஸ்லாமிய மதங்களைப் பரப்புவதற்கு வந்தவர்களும் இனக் கலப்படத்திற்கும் அரிய சேவை செய்திருக்கின்றனர். கற்பு என்பதை அவ்வளவு தீவிரமாகக் கடைப்பிடிக்காத காரணத்தால் அந்நாட்டில் மருமக்கள் தாயம் உருவானது. யார் தகப்பன் என்பதைப் பற்றி அவ்வளவு கவலைப் படாததால் குழந்தைகள் தாய் மாமன் வீட்டிலேயே வளர்ந்தனர்.

இவ்வளவு பீடிகை போடுவதன் என் நோக்கம், நம் இந்து சமயத்தைப் புனர் நிர்மாணம் செய்த ஆதிசங்கராச்சாரியார் தத்துவ விசாரத்தில் உலகத்திலேயே முதலிடம் வகிப்பதற்கு கலப்படமும் ஒரு காரணமாயிருந்திருக்கலாம். அவர் குடும்பத்தில் முன்னோர்கள் ஏதோ ஒரு காலகட்டத்தில் இரத்தக் கலப்படத்திற்கும் காரணமாயிருந்திருக்கலாம். உலக மேதைகளின் வாழ்க்கை வரலாற்றைச் சற்று ஆய்ந்தால் சில உண்மைகள் வெளிப்படும்.

கலப்படம் என்பது வெறும் இரத்தக் கலப்படம் மட்டுமல்ல. மொழிக் கலப்படம், கலாச்சார கலப்படம், தத்துவ விசாரங்களின் கலப்படம், சமயக் கருத்துகளின் கலப்படம், இவ்வாறு பல வழிகளில் இயற்கையன்னை உயிரினங்களின் மேம்பாட்டுக்காக சதா கலப்படங்களை நிகழ்த்திக் கொண்டே இருக்கிறாள். தூய்மைவாதிகளையும் தூண்டிவிட்டு செயல்படுவளும் இயற்கையன்னையேதான்.

இஸ்லாம் மதம் ஸ்தாபிக்கப்பட்டு சுமார் நான்கு நூற்றாண்டுகள் கழித்து தான் ஆதிசங்கரர் காலடியில் அவதரித்தார். அவர் சமஸ்கிருத பாடசாலையில் வேதம் கற்றுக் கொண்டிருந்த போது மிகவும் மிடுக்குடனும், சுறுசுறுப்புடனும் முகத்தில் களை நிறைந்து காட்சியிளித்திருப்பார். அச்சமயம் மதப்பிரச்சாரம் செய்ய கையில் குரானுடன் வந்திருந்த அராபிய நாட்டு மௌல்வியின் பார்வையில் நம் சங்கரர் பட்டிருக்கலாம். மௌல்வியவர்கள் சங்கருக்கு நபிநாயகத்தின் ஒரே தெய்வம், மனிதர் எல்லாரும் சமம், என்னும்

தத்துவத்தைப் போதித்திருக்கலாம். சங்கரரே மௌல்வியிடம் குரானைப் பயின்றிருக்கலாம். அதுவே அத்வைத சிந்தனைக்கு ஆரம்பமாயிருக்கலாம். அல்லது ஒரு கிறிஸ்துவ பாதிரியாரிடம் சங்கரர் பைபிளும் பயின்றிருக்கலாம். இவைகளுக்கு ஆதாரம் கிடையாது. மறுப்பதற்கும் ஆதாரங்கள் இல்லை. அதாவது கலப்படம் வரலாற்றில் எப்பொழுதும் இடைவிடாது நடந்து கொண்டிருக்கும் இறை சக்தியின் விளையாட்டுதான்.

**40. ஒருவருக்கு எது தாய்மொழி?**

ஒரு மொழியை ஒருவருக்குத் தாய்மொழி என்றும் மற்ற மொழிகளை அந்நிய மொழிகள், அந்நிய நாடுகள் என்றும் சொல்கிறோம். ஒரு நாட்டில் பிறந்து வளர்ந்து அதிகமான வாழ்நாட்களைக் கழிக்கும் நாட்டைத் தான் தாய்நாடு என்கிறோம். அது போலவே ஒருவருக்குத் தாய்மொழியும். பேசப் பழகும் குழந்தை முதலில் தாயிடமிருந்தும் உடன் வாழும் அண்ணன் அக்கா, அப்பா, தாத்தா, பாட்டி முதலியோரிடமிருந்தும் மொழியைக் கற்றுக் கொள்கிறது. அதிக நேரம் தாயின் பராமரிப்பில் வளர்வதால் முதலில் தாயிடமிருந்தே குழந்தைத் தன் மொழியைக் கற்றுக் கொள்கிறது.

பின்னர் நடக்கத் தொடங்கினதும் தான் வாழும் தெருவிலும், ஊரிலும் மற்ற மக்கள் பேசுவதைக் கேட்டும் தன் மொழிப் பயிற்சியைத் தொடர்கிறது.

தான் பிறந்து வளர்ந்த குடும்பத்தினர் பேசும் மொழி ஒன்றாகவும் மற்ற ஊர் மக்கள் பேசுவது வேறு மொழியாகவும் இருக்கலாம். இருந்தாலும் தாம் கூட பழகும் அதிகமான மக்கள் அதாவது ஊர் மக்களும் நாட்டு மக்களும் பேசும் மொழியில் தான் ஒருவருக்கு அதிகப் பயிற்சியும் ஆற்றலும் பெறும் வாய்ப்பு இருக்கிறது. தாய்மொழி வேறாக இருந்தாலும் தாம் வாழும் நாட்டின் பொது மொழியைத் தான் தம் தாய்மொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் முறை. ஏனென்றால் அந்த மொழியில் தான் பயிற்சியும் ஆற்றலும் மேலும் மேலும் வளர வாய்ப்பு கிடைக்கிறது.

தமிழ்நாட்டில் தெலுங்கர்களும், கன்னடியர்களும், சௌராஷ்டிரர்களும் சில நூற்றாண்டுகளாகவே வசிக்கிறார்கள். தம் தாய்மொழியில் எழுதப் படிக்க வாய்ப்பு இல்லாததால் தமிழையே தாய்மொழியாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் தமிழ் மொழியில் சிறந்த இலக்கியம் படைத்தவர்களும் இருக்கிறார்கள். ஆகையால் இவர்களும் தமிழர்கள்தான். இவர்களின் தாய்மொழியும் தமிழ் மொழி தான்.

மனதில் தோன்றும் எண்ணங்களையும் கருத்துக்களையும் மற்றவர்களுடன் பரிமாறிக் கொள்ளும் கருவியாகத்தான் மொழி பயன் படுகிறது. இதுதான் மொழியின் அடிப்படை நோக்கம். மொழியின் மூலமே உறவு வளர்கிறது. ஆகையால் ஒரு மொழிக்குத் தெய்வீகத் தன்மையை சூட்டி ஆரவாரிப்பது சில சூழ்நிலையில் தோன்றியிருக்கலாம். தேவைப்பட்டிருக்கலாம். ஆனால் உண்மையில் எந்த மொழிக்கும் தனிப்பட்ட முறையில் தெய்வீகத்தன்மை என்பது ஒன்றும் இல்லை. உலக மொழிகள் எல்லாம் தெய்வீகத் தன்மை பெற்ற மொழிகள் தான் என்று சொன்னால் தவறாகாது.

தமிழ்மொழி மட்டும் தெய்வீகத் தன்மை பெற்றதல்ல. உலகத்து எல்லா வளர்ச்சியடைந்த மொழிகளும் தெய்வத் தன்மை பெற்றவைதான். வேதம், இதிகாசங்கள், புராணங்கள், நீதிநூல்கள் யாவும் மனிதனை உயர்த்துவதற்கும் மனித உறவை வளர்ப்பதற்கும், மனிதர்கள் மகிழ்ச்சி நிறைந்த அமைதியான வாழ்க்கை நடத்துவதற்கும் உதவுவதற்காகத் தான் தோன்றி வளர்ச்சிடைந்திருக்கின்றன. எல்லா மொழிகளிலும் மனிதனை உயர்த்தி உதவக்கூடிய சிறந்த நூல்கள் இருப்பதையும் காணலாம்.

தமிழ் மொழியின் சிறப்பைப் பற்றிப் பேசும்போது அம்மொழியில் படைக்கப்பட்டுள்ள திருக்குறள், திருவாய்மொழி, திருமூலர், கம்பராமாயணம், தேவாரம், பெரியபுராணம் போன்ற அரிய பொக்கிஷங்களின் பெருமையை மட்டும் எடுத்துக் காட்டும் போது நாம் இந்த அரிய இலக்கியங்களைப் பெற்றுள்ள தமிழ் மக்கள் இன்று எவ்வாறு சிறப்பாக

வாழ்கிறோம் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டாமா? நம்மை நாமே உயர்வாகப் பாராட்டிப் பெருமைப்படுவதைவிட மற்ற நாட்டினர் நம்மைப் பற்றி உயர்வாகக் கருதும் அளவு நாம் எந்த வழிகளில் உயர்ந்திருக்கிறோம் என்பதைப் பற்றி சிந்தித்து அறிய வேண்டியது தான் மிக அவசியம்.

முற்காலத்தில் இன்று இருப்பது போல் போக்குவரத்து சாதனங்கள் இல்லாததால் அந்தந்த நாட்டு மக்கள் ஒரு சிலரைத் தவிர பெரும்பாலோர் தாம் பிறந்து வளர்ந்த அந்தந்த நாட்டு மொழியையே தான் பயின்றிருந்தனர். இரண்டு மூன்று மொழிகளில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வெகு வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

ஆகையால் தாய்மொழிப் பற்றின் மேலும் மொழித்தூய்மையின் மேலும் அதிக அக்கறை காட்டும் அரசியல் வாதிகளும் அறிஞர்களும் சற்று நிதானமாய் அறிவைப் பயன்படுத்தி விஞ்ஞான ரீதியில் சிந்தித்து வழிகாட்டுபவர்களாக இருக்க வேண்டும் அல்லாமல் மொழி வெறியைத் தூண்டிவிட்டு அரசியல் லாபம் காணமுயல்வது நாட்டு மக்களுடைய நலனுக்குப் பயன்படாது.

41. பிஞ்சில் பழுக்க வைக்கும் கல்வி

வாழைப்பழம், மாம்பழம், திராட்சைப்பழம் போன்றவற்றை நன்றாக முதிர்ச்சியடைவதற்கு முன்னரேயே பிடுங்கி பழுக்க வைக்கும் வழக்கம் நமக்குத் தெரியும். தூரத்து ஊர்களுக்கு அனுப்பி விநியோகம் செய்வதில் காலதாமதம் ஏற்படுவதால், கடைக்கு வந்து சேருவதற்கு முன்னாலேயே கெட்டுப் போகாமலிருக்க இந்த முறை கையாளப்படுகிறது. கனிகள் உற்பத்தியாகும் ஊரில் உள்ளவர்கள் மட்டும் புசிப்பதாயிருந்தால், பழங்களைக் கொம்பிலேயே பழுக்கும் வரை விட்டு வைக்கலாம். ஆனால் வியாபாரிகள் வெகு தூரத்திலுள்ள ஊர்களுக்கு அனுப்ப வேண்டியிருப்பதால் சற்று நன்றாக முற்றுவதற்கு முன்னமேயே பறித்தால்தான் கடைசிவரை சேதமாகாமல் இருக்கும். அதாவது கனிகளை முழுமையாக முற்றவிடாமல் பறித்து செயற்கை முறையில் பழுக்க வைப்பது அவசியமாகிவிட்டது.

அதுபோன்றே இன்று கல்வி என்னும் பெயரில் குழந்தைகளின் மூளையில் பாடங்களை சொல்லப்போனால், பலவந்தமாகத் திணிக்கிறார்கள். நன்றாக ஓடியாடி இன்பமாக வளர வேண்டிய வயதில் குழந்தைகள் வகுப்பறை என்னும் சிறைக்குள் அடைக்கப்பட்டு இயற்கையான வளர்ச்சியை மறுக்கப்படுகிறார்கள். பட்டப் படிப்பு பெற்ற பெற்றோர்களுக்கே தெரியாத பாடங்களைக் கூட 7 அல்லது 8 வயது சிறுவர்கள் சிறுமியரின் மூளையில் பலாத்காரமாகத் திணிக்கிறார்கள். 60 அல்லது 70 ஆண்டுகளுக்கு முன் பத்தாம் வகுப்பு பையன்கள் படித்த பாடங்கள் இன்று 3-ம் வகுப்பிலேயே சொல்லிக் கொடுக்கிறார்கள். அதுவும் தாய்மொழியே கூட சரியாகக் கற்காத வயதில் அந்நிய மொழியாகிய ஆங்கில மொழி மூலம் குழந்தைகள் கற்க வேண்டியிருக்கிறது.

இந்த நிலையை மிகவும் வருந்தத் தக்கதாகும். இந்த நிலைமையை மாற்ற வழியில்லையா? முயற்சி செய்யப்படுகிறதா? கல்வித் துறையில் பணியாற்றும் அதிகாரிகள், மந்திரிகள் என்ன நினைக்கிறார்கள்? ஆம், அவ்வப்போது நாட்டின் தலைசிறந்த கல்வித்துறை அறிஞர்களையும், நிபுணர்களையும் கொண்ட பரிசீலனைப் பரிந்துரைக் குழுக்களும் அமைக்கப்படுகின்றன. ராதாகிருஷ்ணன் கமிஷன், கொத்தாரி கமிஷன், முதலியார் கமிஷன் என்றெல்லாம் வந்து போகின்றன. பலன் குழந்தைகளின் முதுகுச் சுமையையும் மூளைச் சுமையும் கூடிக்கொண்டே போவதைத் தான் பார்க்கிறோம். இம்மியளவும் குறையக் காணோம். இத்தகைய குழுக்களின் உறுப்பினர்கள் யார்? இவர்கள் ஆங்கில மொழியில் வல்லுநர்களாக இருப்பார்களே தவிர, புரட்சிகரமாக சிந்திக்கவும் செயல்படவும் சக்தியில்லாத அறிவு ஜீவிகளான கூலிப்பட்டாளத்தைச் சேர்ந்தவர்கள் தான் இவர்களும்.

ஆம், நாம் ஒன்றை மறந்துவிடக்கூடாது. நாம் வாழும் காலம் இயந்திர மய யுகம். வேகம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட இன்றைய நாகரீகத்தில் குழந்தைகளின் மூளையை பிஞ்சிலேயே பழுக்க வைக்கும் முயற்சி நடைபெறுகிறது என்பதில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை. ஏன், குழந்தைகள் தாயின் வயிற்றில் இருக்கும்போதே கூட குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கான மருந்தை ஊசிகள் மூலம் உள் செலுத்தினாலும் செலுத்துவார்கள். நாம் புராணக் கதைகளில் படித்திருக்கிறோம். சில குழந்தைகள் தெய்வீக அருளால் பிறந்ததுமே கவிபாடிப் பிரமிக்கச் செய்ததாகவும் கேள்விப்பட்டிருக்கிறோம். அவ்வாறு எதிர்காலத்தில் குழந்தைகள் பிறக்கும் போதே முதிர்ந்த அறிவுடன் பிறந்தாலும் ஆச்சர்யமில்லை.

எவ்வாறு, நாம் இன்று நாட்டில் நிலவும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும், அரசியல் வாதிகளின் வெட்கங்கெட்ட அரசியல் பித்தலாட்டங்களையும் கண்டு வருந்திப் புலம்புவதைத் தவிர நம்மால் ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறோமோ, அவ்வாறே தான் குழந்தைகளின் கல்வி விஷயத்திலும் நம் கவலையைக் கட்டுரைகள் மூலம் தெரிவிப்பதைத் தவிர நம்மால் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம்.

மக்களும் அரசும் இன்று நாடு முழுவதிலும் கல்வி என்ற பெயரால் எல்.கே.ஜி., யூ.கே.ஜியிலிருந்து தொடங்கி பல்கலைக் கழகங்களிலிருந்து பயின்று பட்டங்களுடன் வெளியேறும் எல்லா அறிஞர்கள் வரை கல்வியறிவின் எல்லா நோக்கங்களையும் நன்கு அறிந்து செயல்படுபவர்களாகத் தெரிகிறது. அதாவது இன்று கல்வியின் நோக்கமே உள் நாட்டு வெளி நாட்டு முதலாளிகளின், வியாபாரிகளின், தொழிலதிபர்களின் ஏதாவது அமைப்புகள் ஒன்றில் சேர்ந்து கூலிப் பட்டாளங்களாகப் பணிபுரிவதற்காகத் தான், அந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் குழந்தைகளையும் பிஞ்சில் பழுக்க வைக்கும் முயற்சியும் நடக்கிறது. இப்போதைய கல்வியின் நோக்கம் மக்களை பண்பாடும் மனித நேயமும் மிக்க உயர் மனிதர்களாக்குவதற்கு உதவும் வகையில் இல்லை.

42. **தாயக ஓவியம்**

வானொலியில் இச்சிற்றுரையைக் கேட்கும் அன்பர்களே வணக்கம். இச்சிற்றுரையின் மூலம் உங்கள் கலை ஆர்வத்தை தூண்டி, மேலும் நீங்கள் கலைக் காட்சிகளுக்குச் செல்லும் போது உற்சாகத்துடன் கலைப் பொருட்களை நெருங்கிப் பார்த்து ரசிக்க வேண்டும் என்பதே என் விருப்பம். உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் போது அருகிலுள்ள அருங்காட்சியகங்களுக்குச் சென்று அங்குள்ள கலைக்கூடம் காட்டும் ஓவியங்களைப் பார்த்து இனம் கண்டுகொள்ளவும் நுட்பங்களை இரசிக்கவும் பயிற்சி செய்யுங்கள். நல்ல நூலகங்களுக்கும் சென்று நம் நாட்டு ஓவியங்களின் அச்சுப் பிரதிகள் நிறைந்த நூல்களைக் கேட்டு வாங்கிப் படங்களைப் பார்த்து மகிழுங்கள்.

ஓவியம் என்றால் சித்திரம், சிற்பம், மற்றும் அலங்கார வேலைகள் யாவையும் குறிக்கும். மனிதனுடைய இரசனை இயல்புதான் சித்திரம் வரையவும், சிற்பம் செதுக்கவும் தன் உபயோகப் பொருட்களின் மேல் அழகு வேலை செய்யவும் தூண்டிற்று. இந்த ஆற்றலை ஆரம்ப காலத்திலிருந்தே மனிதன் தன் கொள்கைகள், தத்துவங்கள், நம்பிக்கைகள் முதலியவற்றை வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்தி மகிழ்ந்தான். சடங்குகள், விழாக்கள் பூஜைகள் மூலம் தன் நம்பிக்கைகளை அழகுறக் கொண்டாடி மகிழ்ந்தான். உலகில் எல்லா நாடுகளிலும் சிறப்புற வளர்ந்து மலர்ந்த ஓவியங்கள் யாவும் இதுவரை அந்நாட்டு மக்களின் சமய நம்பிக்கைகளைப் பரப்பும் பணியிலேயே சமர்ப்பிக்கப்பட்டன.

சமய நம்பிக்கைகள், மனிதன் இயற்கைச் சக்திகளைக் கண்டு ஆச்சரியப்பட்டு வணங்கின போது உள்ளத்தில் தோன்றின. அது போன்றே ஓவியப் படைப்பிற்கும் உள்ளம் தான் மூலமாக இருந்து வந்திருக்கிறது. கண்கள் இயற்கைக் காட்சிகளைப் பார்த்து இரசிப்பதற்கு கதவு, சன்னல்கள் போன்று தான் உதவின. காட்சிகளை உள்ளமே, மனமே தன் உணர்வின், ரச அநுபூதியின் மூலம் உருவம் கொடுத்து சித்திரம் சிற்பம்

படைக்கும் பணியில் ஈடுபட்டது. கண்கள் பார்ப்பதை அப்படியே உள்ளதை உள்ளவாறு அநுகரணம் செய்வது, பரம்பரைக் கலைகளில் எந்த நாட்டிலும் ஓவியர்களின் லட்சியமாக, குறிக்கோளாக இருந்ததில்லை. ஐரோப்பிய நாடுகளில் மட்டும் சில நூற்றாண்டுகள் ஓவியர்களின் குறிக்கோள் இயற்கையைப் பார்த்து நகல் படைப்பது தான் என்று கருதி செயல்பட்டு வந்தனர். ஆனால் அவர்களே இப்பொழுது அது தவறான இலட்சியமென்று உணர்ந்து அதைக் கைவிட்டனர். அதன் விளைவுதான் அங்கு தோன்றியுள்ள நவீனக்கலை இயக்கங்கள், நம் இந்திய நாடு பழம் பெரும் நாடு. பல்லாயிர ஆண்டுகளாக வளர்ந்து முதிர்ந்த நம் கலாச்சாரம் உலக மக்களுக்கு வழிகாட்டியாக இன்றும் செயல்பட்டு வருகிறது.

இந்தியக் கலாச்சாரம் பாரம்பரியத்திற்கு அடிப்படையாக அமைந்திருப்பவை மூன்று சமயத் தத்துவங்கள் என்று கூறலாம். ஒன்று சிவபிரானை மையமாகக் கொண்ட தாண்டவ தத்துவம். இரண்டாவது புத்தர் பிரான் அருளிய அறநெறித் தத்துவம். மூன்றாவது கிருஷ்ண பக்தி தத்துவம். இந்திய ஓவியர்களும் தம் ஓவியப் படைப்புகள் மூலம் மக்களுக்கு மேற்கூறிய தத்துவங்களைப் புரிய வைக்கும் பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர். அவர்கள் தங்களை சமூகத்தின் அங்கமாகக் கருதினதால் தங்கள் படைப்புகளை சமூகத்தின் உயர்ந்த இலட்சியத் தத்துவங்களைப் பரப்பும் பணியிலேயே சமர்ப்பித்தனர்.

இந்திய ஓவியர்கள் தம் கண்கள் பார்ப்பதை அதாவது தோற்றத்தை, அப்படியே உள்ளதை உள்ளவாறு, வரைவதை முற்றிலும் புறக்கணித்துத் தம் இரசனை நிறைந்த உள்ளம் கற்பிக்கும் உருவங்களை தத்துவக் கதைகளுக்கு ஏற்றாப் போல் உருவாக்கிக் கொண்டனர்.

இந்த உண்மையை விளக்குவதற்கு உதாரணமாக வசன நடையையும் கவிதை நடையையும் எடுத்துக் கொள்ளலாம். மேற்கு நாட்டு முறையில் தோற்றத்தை உள்ளது உள்ளவாறு வரைவதை வசன நடையோடு ஒப்பிடலாம். ஆனால் இந்திய ஓவியங்களோ மனம் இரசித்து உருவாக்கின சந்தம் நிறைந்த படைப்புகளாகும். அவை கவிதைகளை ஒத்தவை.

மேலும் ஒரு உதாரணத்தின் மூலம் இந்த அடிப்படை உண்மையைப் புரிந்து கொள்ளலாம். கிரேக்க வீரர் அலெக்சாண்டர் படையெடுப்பிற்குப் பின் நம் நாட்டிற்கு வந்த கிரேக்க சிற்பிகள் புத்தர் பிரானுக்கு சிலை வடிவம் கொடுக்க முயன்றனர். அவர்கள் கற்பனையில், புத்தர் வெகுநாட்கள் அன்ன ஆகாரம் இல்லாமல் தவம் செய்தவராகையால், அவர் மெலிவுற்று, கன்னம், கண்கள் குழிவிழுந்து தோற்றமளித்திருப்பார் என்று கருதி அவ்வாறே கற்சிற்பம் உருவாக்கினர். ஆனால் இந்திய மரபுச் சிற்பிகளோ ஞானோதயம் பெற்ற புத்தருடைய உள்ளொளிக்கு முக்கியத்துவம் கொடுத்து அமைதியும் ஒளிர்வும் நிறைந்த உடல் அமைப்பின் மூலம் புத்தர் பிரானின் அறநெறிக்குச் சின்னமாக சிறந்த தெய்வீக உருவம் படைத்தனர்.

நம் பரம்பரைக் ஓவியக்கலைக்கு இலக்கணமும், இரசனை தத்துவமும் இருந்திருக்க வேண்டும். ஆனால் அலங்கார சாத்திரமாகிய வடமொழி நூலில் காவிய இலக்கிய இரசனை சம்பந்தப்பட்ட விளக்கங்களே அதிகமாக உள்ளன. மற்ற சிற்ப சாத்திரங்களில் தெய்வ அங்கங்களின் அளவுகளும் வர்ணனைகளும் தான் அதிகம். எனினும் விஷ்ணு தர்மோத்திரம் என்னும் நூலில் இருந்து ஒரு முக்கிய குறிப்பு கிடைக்கிறது. அதாவது ஓவியக் கலைஞர் தாமே நடனக்கலை, சங்கீதக் கலை தெரிந்தவராக இருக்க வேண்டும். இதன் அர்த்தம் என்னவென்றால் இந்த மூன்று கலைகளுக்கும் அச்சாணி போல் பொதுவாக உள்ளது சந்த உணர்வு. இந்த சந்த உணர்வை ஓவியர் சரியான அளவு பெற்றிருந்தால் தான் அவருடைய ஓவியம் சந்தம் நிறைந்து உயிருள்ளதாக அமையும்.

முதன் முதலாக இந்திய ஓவியங்களையும் சிற்பங்களையும் பார்த்த மேற்கு நாட்டவர்களுக்கு இந்தியக் கலைகள் யாவும் பலநூற்றாண்டுகளாக ஒரே மாதிரி பாணியில் ஆக்கப் பட்டவைகள் போல் தோன்றிற்று. மேலும் தோற்றத்தை அப்படியே சித்தரிப்பதுதான் கலைகளின் இலட்சியம், நோக்கம் என்று கருதி வந்த அவர்களுக்கு இந்திய ஓவியங்களும் சிற்பங்களும் சற்று விகாரமாகவும் சிறுபிள்ளைத் தனமாகவும் தோன்றியிருக்கின்றன. அதனால் தான் ஆங்கிலேய ஆட்சி இங்கு நிலையானதும் சென்ற நூற்றாண்டு பிற்பகுதியில் நமக்கு நுண்கலைகள் கற்றுக் கொடுப்பதற்காக பம்பாய், கல்கத்தா, சென்னை போன்ற தலைநகரங்களில் ஓவியம் பயிற்றுவிக்கும் பள்ளிகளை நிறுவினர். அங்கு ஆங்கிலேய கலை ஆசிரியர்களை நியமனம் செய்து மேற்கு நாட்டு முறையில் பயிற்சி கொடுத்தனர். இந்தப் பின்னணியைப் புரிந்து கொண்டால் தான் நம் பண்டைய ஓவியங்களைப் புரிந்து கொள்வதற்கும் இரசிப்பதற்கும் நம்மால் முடியும்.

நம் பண்டைய இலக்கியங்களிலும், காவியங்களிலும் ஓவியங்களைப் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கு நமக்குக் கிடைத்திருந்தாலும், இப்பொழுது காலம் விழுங்கினது போக எஞ்சியிருப்பவை பெரும்பான்மை இரண்டாயிரம் ஆண்டுகட்கு உட்பட்டவைகளே.

வரலாற்றிற்கு முந்தின கால ஓவியங்கள் சில மத்திய பிரதேசத்தில் மலைப்பாறைகளில் வரையப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இவை வேட்டைக் காட்சிகளாகவும்,

உயிர்ப்பு நிறைந்த மிருகங்களைக் காட்டும் சித்திரங்களாகவும் இருக்கின்றன. இவை சிவப்பு, மஞ்சள் காவி வர்ணங்களாலும் கருப்புக் கோடுகளாலும் முடிக்கப்பட்டவை. இம்மாதிரி ஓவியங்கள் தமிழ் நாட்டிலும் இருந்திருக்கின்றன. மதுரைக்கருகில் அழகர் மலைப் பாறை ஒன்றில் இம்மாதிரி ஓவியம் இருப்பது சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அடுத்து வரலாற்று கால ஓவியங்கள் என்பதற்கு அஜந்தா குகைச் சுவரோவியங்களைத் தான் முதலில் குறிப்பிட வேண்டும். மலைச் சரிவில் பாறைகளைக் குடைந்து உள்ளே மண்டபங்களை போன்ற அரங்குகள் கொண்ட குகைகள் சுமார் முப்பதுக்கு மேல் இருந்தாலும் இன்று சில குகைகளில் தான் ஓவியங்கள் முற்றிலும் அழிந்து போகாமல் காட்சியளிக்கின்றன. இந்த குகை ஓவியங்கள் புத்த பகவானுடைய வாழ்க்கையையும், ஜாதகக் கதைகளையும் சித்தரிக்கின்றன. இந்தக் குகை அரங்குகளை பிராத்தனைக் கூடங்களாகவும் வசிக்கும் விடுதிகளாகவும் பயன்படுத்தின புத்த சந்நியாசிகளேதான் இந்த ஓவியங்களை வரைந்தவர்கள்.

இந்த அரங்குகளில் சூரிய வெளிச்சம் புகாத ஒரே இருட்டாயிருந்தாலும், எவ்வாறு எந்த வெளிச்சத்தில் வரைந்தார்கள், எந்த வெளிச்சத்தில் பார்த்தார்கள் என்பது கேள்விக் குறியது தான். சூரிய ஒளியை வெளியில் பெரிய கண்ணாடிகளை வைத்து குகைகளுக்குள் புகுமாறு செய்திருக்கலாம்.

இந்த ஓவியங்களில் குறிப்பிடத்தக்கவை புத்தர் தியானத்தில் ஆழ்ந்திருக்கும்போது தியானத்தைக் கலைப்பதற்குத் தீய சக்திகள் சூழ்ந்து ஆரவாரம் செய்வது. புத்தர் சந்நியாசி கோலத்தில் ஊருக்கு வந்த போது அவர் மனைவியும் மகனும் வரவேற்பது முதலியன.

ஆறு தந்தங்களுடைய ராஜ யானையின் கதையும் சிறப்பானது. தாமரை மலர்களும் அன்னங்களும் நன்கு சிறப்பானவை.

சுவர்களில் அநேகமாய் தரை மட்டத்திலிருந்து உச்சிவரை மனித உருவங்களை கும்பல் கும்பலாக வரைந்திருக்கிறார்கள். தீவட்டி வெளிச்சத்தில் பக்கத்தில் நின்று ஒரே சமயத்தில் ஒரு கும்பலைத்தான் பார்க்க முடியும். ஆகையால் உருவங்களின் பின்புலத்தைப் பற்றி கவலைப்படாமல் ஒரே மட்டத்தில் நாடக மேடையில் தோன்றுவது போன்று வரைந்திருக்கிறார்கள்.

அதாவது இந்த சுவரோவியங்களை வரைந்தவர்கள் கற்சிற்பிகளாகவும் இருந்திருக்கிறார்கள். உருவங்களை சமமான கல்லின் மேல் ஆழமாகச் செதுக்கும் சிற்பிகள் உருவங்களை நெருக்கமாக அமைத்து இடைவெளிகளை அதிகமாக விடாமல் செதுக்குவார்கள். இவர்களே தான் அஜந்தாவிலுள்ள சுவரோவியங்களையும் தீட்டியிருக்க வேண்டும். அதனால் தான் உருவங்களை தட்டையாக மட்டும் தீட்டாமல் மேடு பள்ளங்களைக் காட்டுவதற்குப் பக்கங்களில் அழுத்தமான நிழல் மூலம் அங்கங்கள், முகங்களின் பருமனையும் காட்டியிருக்கின்றனர். இந்த ஓவியர்கள் துல்லியமான நீண்ட கோடுகளையும் பயன்படுத்தி உருவ அமைப்புகளை வரையறுத்திருக்கின்றனர். ஆகையால் இந்த ஓவியங்களை சிற்பமுறைத் தழுவின ஓவியம் என்றும் சொல்லலாம்.

இந்த ஓவியங்களில் பயன்படுத்தப்பட்ட வர்ணங்களும் மண் காவி வர்ணங்களே ஆகையால் இன்றைக்கும் மங்காமல் ஒளியுடன் விளங்குகின்றன. சிவப்புக் காவி, மஞ்சள் காவி, பச்சைக் காவி வர்ணங்களும் நீல நிறத்திற்கு விலையுயர்ந்த Lapis Lazuli என்னும் நீலக்கல்லின் பொடியையும் உபயோகித்திருக்கிறார்கள். இந்த நீலம் இன்றைக்கும் நேற்று பூசினது போல் பிரகாசத்துடன் காட்சியளிக்கிறது. இந்த ஓவியங்களின் காலம் கி.மு. 1ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 7ம் நூற்றாண்டு வரை என்று கூறலாம்.

இந்த அஜந்தா, எல்லோரா சுவரோவியங்களை ஒத்த சுவரோவியங்களை தமிழ் நாட்டிலும் பார்க்கலாம். புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள சித்தன்னவாசல் என்ற கிராமத்திற்கு அருகில் சமணக் குகையொன்றில் உள்ளது. தவிர தஞ்சாவூர் பெருவுடையார் கோயில் உட்பிரகாரத்தில் சிவ பிரானுடைய சித்திரங்கள் சுவர் ஓவியமாக தீட்டப்பட்டிருக்கின்றன. இங்கும் சுவரோவியங்கள் இருந்திருக்கின்றன. ஆனால் இப்பொழுது மிக மிகக் கொஞ்சமே எஞ்சியுள்ளது.

பொதுவாக இந்தியா முழுவதிலும் உள்ள கோவில்களில் சுவரோவியங்கள் இருந்திருக்கின்றன. இராஜஸ்தானத்தில் உள்ள அரண்மனைகளிலும் சுவரோவியங்கள் இன்றைக்கும் இருக்கின்றன. கேரளாவில் கொச்சிக்கு அருகிலுள்ள மட்டஞ்சேரி அரண்மனையிலும் மற்றும் கேரளாவில் எட்டுமனூர், திருவனந்தபுரம் முதலிய ஊர்களிலுள்ள கோவில்களிலும் இன்றைக்கும் சுவர் ஓவியங்களைப் பார்க்கலாம்.

பொதுவாக இந்தியாவில் கோவில் நிர்வாகத்தினரால் மானியம் கொடுத்து போஷிக்கப்பட்ட கோவில் ஓவியர்கள் பரம்பரையாய் வழக்கமாக பல ஆண்டுகளுக்கு ஒரு முறை பழைய சுவர் ஓவியங்களைத் திரும்பவும் புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டதால் மிகப் பழைய ஓவியங்களை இந்தக் கோவில்களில் காண முடியாது.

அடுத்தபடியாக கைகளில் வைத்துப் பார்க்கும் நுண் ஓவியங்களைப் பார்ப்போம். கி.பி. 8ஆம் நூற்றாண்டிலிருந்து 13ஆம் நூற்றாண்டு வரை புத்தமத ஏட்டுச் சுவடிகளிலும் சமண மத ஏட்டுச் சுவடிகளிலும் சமயக் கதைகளை அநுசரித்து தெய்வ, உருவங்களையும் வரைந்திருக்கின்றனர்.

நேபாள புத்த மரபு ஓவியங்களும், வங்க நாட்டில் சேன, பால மன்னர் காலத்து சுவடி ஓவியங்களும் குறிப்பிடத்தக்கவை. கி.பி. 15ஆம் நூற்றாண்டிலிருந்து ராஜபுத்திர ஓவியங்களும், 16ஆம் நூற்றாண்டிலிருந்து இராசபுத்திர, மொகலாய ஓவியங்களும், இராசபுத்திர மன்னர்களாலும், மொகலாயச் சக்கரவர்த்திகளாலும் ஆதரிக்கப்பட்டு 17ஆம் நூற்றாண்டுவரை அதாவது பிரிட்டிசார் வரும்வரை வளர்ந்து வந்தன. இராஜபுத்திர ஓவியங்களும் காகிதங்களில் வரையப்பட்டவை. கைகளில் வைத்துப் பார்க்கக் கூடியவை, சிறியவை.

இராசபுத்திர ஓவியங்கள் பெரும்பாலும் கிருஷ்ண லீலைகளைப் பற்றியும், இராமயண, மகாபாரதக் கதைகளை விளக்கியும் தீட்டப்பட்டவை. மொகலாயச் சித்திரங்கள் பெரும்பாலும் மன்னர்களுடைய உருவப் படங்களாகவும், வேட்டை, போர் இவற்றை வர்ணிக்கும் படங்களாகவும் இருந்தன. மொகலாயர் காலத்தில் பாரசீக ஓவியர்கள் இந்தியாவிற்கு வரவழைக்கப்பட்டனர். இந்தி இராஜஸ்தான ஓவியர்களும் அவர்களோடு சேர்ந்து புதிய பாணிகளைக் கையாண்டனர்.

ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னர் மன்னர்களும் செல்வந்தர்களும் ஐரோப்பிய ஓவியங்களால் கவரப்பட்டனர். இதன் காரணமாக நம் நாட்டுப் பரம்பரை ஓவியக்கலையை மேனாட்டு கல்வி பெற்ற இந்தியர்களால் புரிந்து கொள்ளவும் இரசிக்கவும் முடியாமற் போயிற்று. எனினும் இந்த நூற்றாண்டு ஆரம்பத்தில் வங்காளத்தில் இந்திய ஓவியக் கலையின் மறுமலர்ச்சி இயக்கம், நாட்டு விடுதலை இயக்கத்தின் கூடவே தோன்றிற்று. இந்த இயக்கத்திற்கு அவனீந்திரநாத் தாகூரும், E.B.Havell என்னும் ஆங்கிலேய அறிஞரும் தலைமை தாங்கினர். ஆனந்த குமாரசாமி, ஸ்ரீ அரவிந்தர், இரவீந்திரநாத் தாகூர் போன்றோர் ஊக்கமளித்து ஆதரவு கொடுத்தனர். இவர்கள் மறைந்ததும் நாட்டு விடுதலைக்குப் பின் தில்லியில் அமைக்கப்பட்ட லலித் கலா அகாடெமிதான் ஓவியக் கலை வளர்ச்சிக்குத் தொண்டு செய்து வருகிறது. இந்தக் கலை அமைப்பு இந்திய ஒருமைப்பாட்டிற்கு கலை வளர்ச்சி மூலம் அரிய வழிகாட்டியாக பணி புரியும் என்று நம்புகிறோம்.

(இச்சிற்றுரை மதுரை வானொலியில் ஆற்றியது)

**43. மாயா என்றால் என்ன?**

மனித வாழ்க்கையின் நிலையாத தன்மையைப் பற்றி குறிப்பிடும் போது பயன்படுத்தப் படும் வார்த்தை தான் மாயா அல்லது மாய்கை என்னும் சொல். நாம் காண்பதெல்லாம் நிஜமல்ல, பொய், வெறும் தோற்றங்கள் தான். நாம் சினிமாத்திரையில் பார்க்கும் காட்சிகளும், மனிதர்களும், நிகழ்ச்சிகளும் பெறும் நிழல்கள் தான் என்னும் உதாரணத்தைச் சொல்லி, அது போன்றதே நம் வாழ்க்கையும் என்பதைக் குறிப்பதற்குப் பயன்படும் வார்த்தை தான் மாயா என்பதும்.

இந்து மதச் சிந்தனையாளர்கள் அதாவது நம் முன்னோர்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதும் வழக்கம். அவ்வாறு சிந்தித்து - தாம் கண்ட, கருதும் உண்மைகளை எடுத்துரைப்பார்கள். அவ்வாறு கண்ட கருத்துகளில் ஒன்று தான் எல்லாம் தோற்றங்களே' என்னும் தத்துவமும். இறைவன் படைப்பில் எல்லாம் சதா தோன்றிக் கொண்டும் மறைந்து கொண்டும் இருப்பதை நாம் பார்க்கிறோம். என்றாலும் நமக்குயிருக்குயிரானவர்கள் மரணமடையும் போதும் அல்லது நாம் சிரமப்பட்டு சேர்த்த பொருட்கள் அழியும் போது அல்லது கொள்ளையடிக்கப்படும் போதும் நாம் தாங்க முடியாத அளவு வருந்துகிறோம். அவ்வாறு வருந்துவதில் பயனில்லை. சென்றது திரும்பாது என்பதை உணர்த்தி ஆறுதல் சொல்வதற்குத்தான் எல்லாம் மாயை' - என்னும் தத்துவத்தை பயன்படுத்துகிறோம். “ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தில்?...” என்றும் “நீரிற் குமிழி இளமை, நிறை செல்வம் நீரில் எழுத்தாகும்.." (என்றும் ஆகையால் நிலையான ஒன்றின் மேல் கவனம் செலுத்துங்கள்) நமரங்காள் என்னே வழுத்தாத தம்பிரான் மன்று?

மேலும், தம் ஆணவத்தாலும், செருக்கினாலும் நலிந்தோரைத் துன்புறுத்தும் வல்லவர்களுக்கு எச்சரிக்கையாகவும் அளவற்ற பேராசையினால் தீய வழிகளில் மேலும் மேலும் செல்வந்தர்களுக்கு எச்சரிக்கையாகவும் அமைகிற மாயா தத்துவம். மாயா தத்துவத்தின் பின்னணியில் இந்த நோக்கங்கள் தத்துவ விசாரத்தில் ஆழ்ந்து ஈடுபட்ட சிந்தனையாளர்களுக்கு படைப்பின் தோற்றமும் இயக்கமும் அற்புதமான ரகஸ்யங்களைக் கொண்ட வியக்கத்தக்க மெய்ஞானத்தை விளக்கும் தத்துவமாகவே மாயா வாதம் பரிணமித்தது.

அணு பரமாணுவுக்குள் இருந்து இயங்கும் சக்தியம் பிரம்மாண்டமான சூரிய மண்டலங்களை இயக்கும் சக்தியும், காலமும் வெளியும் சேர்ந்து நடத்தும் நாடகமாகிய ஆக்கலும் நடைபெறுவதற்கு உதவும் சக்தியும் ஒன்றே என்பதையும் மாய எங்கும் சக்தியும் வான வெளியில் பக்கும் சக்தியும், காலமும் திய ஆக்கலும் அழித்தலும் என்பதையும் மாயா தத்துவம் விளக்குகிறது.

மாயா என்பதைப் புரிந்து கொண்டவர்களும், புரிந்து கொண்டதாக நினைப்பவர்களும், மாயாவைப் பற்றி தர்க்கம் செய்யத் தேவையில் மாயாவின் காட்சியைக் கண்டு அதன் வினோதக்கை விசித்திரத்தையும் புரிந்து ரசித்தாலே போதும். பின்னர் ஏன் அதைப் பற்றி கட்டுரை எழுதுகிறாய் என்று கேட்பீர்கள். எழுதுவதும் மற்றவர்களுடன் சேர்ந்து ரசிப்பதற்காகத் தான். மாயாவைப் பற்றி புரிந்து கொண்டு மகிழ்ச்சியுடன் மௌனமாய் அமர்ந்திருக்கலாம். அல்லது ஆடிப் பாடி ஆரவாரித்தும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தலாம்.

படைப்பின், அல்லது பிரபஞ்சத்தின் ஆழத்தையும், உயரத்தையும், அகலத்தையும், நீளத்தையும் பற்றி சிந்திக்கத் தொடங்கினால், கானல் நீர் போன்றும் பிடி கொடுக்காது செல்லும் கீழ்வானத்தைப் போல தூரமாகவே சென்று கொண்டிருப்பதை உணரலாம். ஆகையால், அவ்வாறு முயற்சி செய்யாமல் கண் எதிரே எப்பொழுதும் இருப்பதாகத் தோன்றும் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வினாடியும் அதுவேதான் நிஜம், சத்தியம், உண்மை என்றறிந்து அதனுடன் உள்ளத்தால், செயலால் ஐக்கியம் தான் மாயாவைப் பற்றி சிந்திப்பதன் பலனாகக் கொள்ள வேண்டும்.

நமக்குச் சிறிதளவுதான் தெரிந்திருக்கும் அளவுகோலைக் கொண்டு, காலத்தின் - வெளியின், எல்லையை அறிய முயலவது என்றாலும், அம்முயற்சியே தான் மாயையைப் புரிந்து கொ உதவும். எல்லையற்ற விண்ணையும், அங்கு கோடானு கோடி ஆண்டுகளாய் ஒளிவிட்டு சுழன்று கொண்டிருக்கும் கோளங்களைப் பற்றியும் சிந்திக்கும்போதுதான் மனித வாழ்க்கையின் அற்பக் காலத்தையும், தூசி போன்ற தன்மையையும் உணரவும், தானும் அந்த எல்லையற்ற தன் அம்சமாகவும் இருப்பதை உணர்ந்து மகிழவும் முடிகிறது. 'நான் தான் எல்லாம்' - 'எல்லாம்' நான் தான்' 'எனக்குள்ளேதான் எல்லாம்' எனும் தத்துவத்தை உணர்வதற்கும் மாயையைப் பற்றிய அறிவு அவசியமாகிறது. சாதாரண மக்களாகிய நாம் புரிந்து கொள்வதற்காக, ஆழ்ந்து சிந்தித்து, மகிழ்ந்த நம் முன்னோர்கள் மாயையைப் பற்றி விளக்க முயன்று அது இயற்கையுனுடைய 'லீலை' - திருவிளையாடல் என்று சொல்லி புரிய வைக்க முயன்றனர். மேலும் அவர்கள் புராணக் கதைகள் மூலமும் மாயையைப் கவைமிக்க விதத்தில் விளக்க முயன்றிருக்கின்றனர்.

அவ்வாறு தோன்றின கதைதான் விஷ்ணு புராணத்தில் காணப்படும் இக்கதை :

விஷ்ணு, நாரதரின் தவ மகிமையைக் பாராட்டி நாரதரின் ஆசிரமத்திற்கே எழுந்தருளி நாரதரை ஏதாவது விரும்பின வரத்தைக் கேள், கொடுக்கிறேன் என்று உறுதி அளித்தார். நாரதர் இந்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது என்று உறுதியுடன் வெகு நாட்களாக பலரும் பேசிக் கொள்ளும் மாயையைப் பற்றி எனக்குத் தெளிவாக விளக்கிச் சொல்ல வேண்டும் என்று விஷ்ணுவை வேண்டிக் கொண்டார்.

மகா விஷ்ணுவோ, "நாரதரே, திரிலோகம் சுற்றிவரும் உமக்கு எல்லாம் தெரியும். ஆகையால், இந்த சாதாரண விஷயத்தைப் பற்றி தெரிந்து உமக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை. வேறு ஏதாவது வரம் கேள்", என்று கூறி மழுப்பப் பார்த்தார். ஆனால் நாரதரின் குதூகலம் தணியவில்லை. எப்படியும் மாயையைப் பற்றித் தனக்கு விளக்கித்தான் ஆக வேண்டும் என்று பிடிவாதமாய் கேட்டுக் கொண்டதால் விஷ்ணுவும் இணங்கினார்.

விஷ்ணு சிரித்துக் கொண்டு, நாரதரை அழைத்து நாம் சற்று வெளியே போய் நாட்டு புறத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு வரலாம், பயணத்தின் போது உம் கேள்விக்கு விடையளிக்கிறேன் என்று சொல்லவும் இருவரும் யாத்ரீகர்கள் வேஷத்தில் குளுமையான மரம், செடி, கொடிகள் நிறைந்த ஆசிரமத்தை விட்டு கடுமையான வெய்யில் அடித்துக் கொண்டிருந்த வெட்ட வெளியில் கால்நடையாகப் புறப்பட்டனர். வெகு தூரம் வெய்யிலில் நடந்த களைப்பால் ஒரு பெரிய ஆலமரத்து நிழலை அடைந்தனர். விஷ்ணநாரதரை நோக்கி, "என்னால் தாகத்தைத் தாங்க முடியவில்லை, அதோ தெரிகிறதே அந்த கிராமத்திற்குச் சென்று செம்பு நிறைய தண்ணீர் கொண்டு வரவும் " என்றார். நாரதரும் செம்பை எடுத்துக் கொண்டு கிராமத்தை அணுகி முதல் வீட்டில் முற்றத்து வாசலில் எட்டிப் பார்த்தார். அங்கு

கூரை வீட்டு வராந்தாவில் உட்கார்ந்திருந்த அழகிய இள நங்கை ஒருத்தி சட்டென்று எழுந்து வீட்டிற்கு உள்ளே சென்று மறைந்தாள். நாரதருடைய மனம் இளம் பெண்ணின் அழகின் மேல் மயங்கி தாம் வந்த காரியத்தையே முற்றிலும் மறந்து போய் பெண்ணின் தந்தையோடு குசலம் விசாரித்தார். வீட்டிற்குள்ளிருந்து அவளுடைய தந்தை, ஒரு விவசாயி, வெளியே வந்து நாரதரை, என்ன வேண்டும் என்று விசாரித்தார். நாரதரும், "நான் தண்ணீர் கேட்க வந்தேன். உங்கள் குடும்பத்தில் எத்தனை பேர் இருக்கிறீர்கள்? என்ன தொழில் நடத்துகிறீர்கள்?" என்று கேட்க, விவசாயியும் தன் குடும்ப கஷ்டங்களைச் சொல்லி "எனக்கு உதவி செய்ய மகன்கள் ஒருவரும் இல்லாததால் மிக்க சிரமத்துடன் தான் விவசாய வேலை செய்து வருகிறேன். என் மகளுக்கு மாப்பிள்ளையாக சீக்கிரம் வரப்போகும் ஆளின் உதவி கிடைத்தால் என் கஷ்டம் குறையும்" என்று சொன்னார். நாரதரும் சற்றும் தயக்கமில்லாமல், அவருடைய பெண்ணை மணந்து அவருக்கு வேலையில் உதவி செய்ய தாம் விரும்புவதாகத் தெரிவித்தார். நாரதருக்கும் அந்த வீட்டுப் பெண்ணோடு திருமணம் நடந்தேறியது. மாமனார் வீட்டிலேயே சில ஆண்டுகள் குடும்பம் நடத்தி நான்கு குழந்தைகளுக்கும் தந்தையானார் நாரதர். இதற்குள் மாமனாரும் வயதாகி காலமானார். குடும்ப பாரம் முழுவதும் நாரதரே ஏற்று நல்ல முறையில் விவசாயத்தையும் மனைவி மக்களையும் சிறப்பாக கவனித்து மகிழ்வுடன் இல்லற வாழ்க்கை நடத்தி வந்தார்.

மழைக்காலம் வந்தது. எப்பொழுதும் இல்லாத அளவில் மழை நாட்கணக்கில் விடாமல் கொட்டு கொட்டு என்று கொட்டினதால் எங்கு பார்த்தாலும் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. வீட்டிற்குள்ளே மனைவி மக்களுடன் தூங்கிக் கொண்டிருந்த நாரதர் திடீரென்று மிக அருகாமையில் பெரிய முழக்குடனும் மின்னலுடனும் விழுந்த பெரிய இடியின் சப்தத்தினால் எழுந்து கதவைத் திறந்து பார்த்தார். எங்கும் ஒரே இருட்டு. மின்னல் ஒளியினால் பார்த்தார் - முற்றம் முழுவதும் ஏரி போன்று தண்ணீர் தத்தளித்துக் கொண்டிருந்தது. சற்று நேரத்தில் வீட்டிற்குள் தண்ணீர் புகுந்து விடும் நிலைமையைப் பார்த்த நாரதர் பயந்து மனைவியை எழுப்பினார். குழந்தைகளை தோளிலும், ஒரு கையில் பெரிய பையனையும், மற்ற கையில் மனைவியையும் பிடித்துக் கொண்டு நீரில் இறங்கி சற்று மேடான இடமொன்றைத் தேடி புறப்பட்டார். வெள்ளமோ பயங்கர ஆரவாரத்துடன் சுழல் போட்டு அகப்பட்டதையெல்லாம் விழுங்கிக் கொண்டு பாய்ந்து சென்று கொண்டிருந்தது.

நாரதரால் சமாளிக்க முடியவில்லை . முழங்கால் வரை இருந்த தண்ணீர், விரைவாக இடுப்பு வரைக்கும் நெஞ்சுவரையும் பெருகிற்று. இனி நீந்தினால்தான் முடியும். ஒவ்வொன்றாக, முதலில் ஒரு கையிலிருந்த பெரிய பையனையும் அடுத்த மறுகையால் பிடித்திருந்த மனைவியையும் கைவிட்டார். மறுவினாடியே வெள்ளம் கழுத்தளவு பெருகிற்று. இனி தோளில் இருந்த குழந்தைகளையும் கைவிட்டு நீந்தலானார். வாய் வழியாக சற்று தண்ணீரையும் குடித்து விட்டார். எப்படியும் தன் உயிரையாவது காப்பாற்ற வேண்டும். திடீரென்று பெரிய சப்தத்துடன் இடியொன்று கண்களைக்கூசும் மின்னலுடன் முழங்கிற்று.

அவ்வளவுதான் நாரதர் விழித்துக் கொண்டார். எங்கும் ஒரு சொட்டுக்கூட தண்ணீர் இல்லை. வெள்ளம் மாயமாய் மறைந்து வெட்டவெளியெங்கும் சித்திரை மாத மத்தியான வெய்யில் அடித்துக் கொண்டிருந்தது. நாரதர் கண்களைக் கசக்கிப் பார்த்தார், நம்ப முடியவில்லை. அருகில் விஷ்ணு நின்று கொண்டு, "என்ன, தாகத்தைத் தீர்க்கத் தண்ணீர் கொண்ட வரப்போனவர் இவ்வளவு தாமதமாக வருகிறீரே. எங்கே செம்புத் தண்ணீர்?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார். நாரதர் புரிந்து கொண்டு விட்டார். மாயா என்பது இதுதானா!

நாரதர் வெட்கித் தலை குனிந்து விஷ்ணுவை நோக்கி இனி போதும். நாம் ஆசிரமத்திற்குத் திரும்பலாம் என்று கூறி முடித்தார்.

இந்தப் புராணக் கதையின் மூலம் நாம் என்ன புரிந்து கொண்டோம்? வாழ்க்கையே கனவு போன்றது. பிரபஞ்சத்தின் கோடானு கோடி ஆண்டுகளின் காலப் பரப்பில் மனித ஆயுள், ஆர்ப்பாட்டம், அகங்காரம், ஆணவம் எல்லாம் ஒரு நொடிப் பொழுதில் தோன்றி மறையும் தோற்றந்தானே தவிர, சினிமாத் திரையில் நாம் பார்க்கும் நிழல்படங்களைப் போன்று மறையும் காட்சிகளே தவிர, நிலையான மெய்ப்பொருளை மறைக்கும் மாயாஜால விளையாட்டு தான் மனித வாழ்க்கை என்பதைத்தான் இந்தக் கதை உணர்த்துகிறது.

**44. பிரபஞ்சத்தின் வெளியும், காலமும்**

"உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன் ....."

"உலகம் யாவையும் தாமுளவாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் ..... "

"அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி, அருளொடு நிறைந்தடுத்து
தன்னருள் வெளிக்குளே அகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும்படிக் கிச்சைவைத்து உயிர்க்குயிராய்த்தளைத்ததெது...."

இம்மூன்று கவிதைகளின் சாரத்தைத் சிந்தித்துப் பார்ப்போம். அப்பொழுதுதான் படைப்பைப் பற்றிய நம் கருத்து ஓரளவு ஆழமாகவும், விரிவாகவும், இனிமையாகவும் மலரும். நாம் யார்? நான் யார்? நாம் காண்பதெல்லாம் என்ன? எங்கிருந்து வந்தோம்? எங்கே போகிறோம்? என்ன தொடர்பு? என்னும் கேள்விகளுக்கு விடைகாண முயல்வோம்.

எல்லையற்ற பரந்த ஆகாயம் அங்கு எண்ணற்ற விண்மீன் கோளங்கள், கற்பனைக் கெட்டாத தூரங்களில் தூசிகளைப் போல் மிதந்து திரியும் பிரம்மாண்டமான கோளங்களின் ஒளி காட்சி, நம் சூரிய மண்டலத்தில் சுற்றிவரும் இந்த பூமி. அங்கு தோன்றி மறைந்து கொண்டிருக்கும் கோடானு கோடி உயிரினங்கள். அவைகளின் அழகும், ஆற்றலும், உறவும் நம்மைக் கவர்ந்து பிரமிக்கச் செய்து கொண்டிருக்கும் மாய இயக்கங்கள். இவைகளுக்கு நடுவில் நம் பட்டறிவு உணர்ச்சி, ஆசை அபிலாசைகள் முதலியனவற்றால் உந்தப்பட்டு 'நான்', 'என்' என்றும் பற்றுகள், எல்லாம் வியப்பைத் தான் வளர்க்கின்றன. விடைகள் வேண்டினாலும் வெகு தூரத்தில் மங்கலாகவே தோன்றுகின்றன. மாயக்காட்சிகளாகவே மனதை மயங்க வைக்கின்றன.

ஆம், மயங்குவது மனம் தான். மயங்கி, திகைத்து நின்ற அர்ச்சுனனுக்கு, அவனுடைய சாரதியான கிருட்ணபகவான் விசுவரூப தரிசனத்தின் மூலம் மயக்கத்தை நீக்கி, மனதில் தெளிவை ஏற்படுத்தி, ஆற்றல் புரிவதற்கு உற்சாகத்தை ஊட்டினார்.

எங்கும் எல்லையில்லாது ஆழ்ந்து பரந்த வெளி ஆகாயம், அதன் நிறம் நீலம். கிட்ண பகவானின் நிறமும் நீலமே. இன்று விசுவரூப தரிசனம் காண விருப்பமுடையவர்கள் ஆகாயத்தை நோக்கியே அங்கு சுழன்று கொண்டிருக்கும் விண்மீன்களை ஆராய்வதன் மூலமாகவே பெறமுடியும். விஞ்ஞானிகள் விசுவரூப தரிசனத்தைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுருக்கின்றனர். அறிய முடியாதது ஒன்றை அறிய விரும்புகின்றனர். அறிந்ததைக் கொண்டுதான் அறியாததை அறிய முடியும். அறிந்ததாக நமக்குத் தோன்றுவது வெளியும், அங்குள்ள பருப்பொருட்களும், அவைகள் தோன்றி மறையும் காலமும் ஆகும்.

அதாவது அண்ட வெளியும், காலமும் (Space and Time) மட்டுமே ஆதியும் அந்தமும் இல்லாதவை. வெளியையும் காலத்தையும் அறிவது, விஞ்ஞான ரீதியில் அறிவது இயலாதது என்னும் உண்மையை நம் முன்னோர்கள் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்பாகவே உள்ளொளி மூலம் அறிந்து நமக்கு விளக்க முயன்றிருக்கின்றனர்.

இறைவனின் ஆதியும் அந்தமும் அறிய முடியாதது என்பதற்கு உவமைக் கதை ஒன்று புராணக் கதையாகக் கிடைக்கிறது.

ஒரு சமயம் விட்ணு ஆதிகாலத்தில் எங்கும் தண்ணீரைத் தவிர ஒன்றுமே இல்லாத காலம். பாற்கடலில் சயனம் செய்து கொண்டு அமைதியை அனுபவித்து கொண்டிருக்கும்போது கண்ணைக் கூசும் ஒளி ரூபத்தில் பிரம்மா வந்து விட்ணுவை எழுப்பி நீ யார்? நான் தானே இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் படைத்தவன். எனக்குத் தெரியாமல் நீ யார், எங்கிருந்து வந்தாய் என்று கேட்டாராம். விட்ணு, "அதெப்படி நான் தானே அண்ட சராசங்களனைத்தையும் பன்முறை படைத்து, காத்து அழித்துக் கொண்டிருக்கிறேன். எல்லாவற்றிற்கும் ஆதியும் தலைவனும் நான் தான், நீ அன்று" என்று பதிலளித்தார். இவ்வாறு விட்ணுவும், பிரம்மாவும் வாதாடிக் கொண்டு இருந்த போது சமுத்திரத்தின் அடியிலிருந்து பிரம்மாண்டமான இலிங்கம் ஒன்று தலைப்பக்கம் சுவாலையுடன் தோன்றி வானமும் பூமியும் ஒன்றாக நின்றதாம். இதைக்கண்ட பிரம்மா விட்ணுவைப் பார்த்து, "நீ வராக ரூபத்தில் இலிங்கத்தின் அடிப்பக்கத்தைப் போய்ப் பார்த்து வா, நான் அன்னப் பறவையாய் பறந்து மேலே போய் இலிங்கத்தின் உச்சியைப் பார்த்து வருகிறேன்" என்று சொல்ல, அவ்வாறே சென்று இருவரும் இலிங்கத்தின் அடியையும் முடியையும் காண முடியாமல் திரும்பி வந்து திகைத்து நின்றனர். அச்சமயம் இலிங்கத்தின் விலாப் பக்கத்திலிருந்து சிவபிரான் தோன்றி தானேதான் ஆதியிலிருந்தே ஆக்கல், காத்தல், அழித்தலாகிய மூன்று வேலைகளையும் செய்து கொண்டிருக்கும் முழு முதற் கடவுள் என்று கூறி நடராச தரிசனத்தைக் காட்டினாராம்?

இக்கதையிலிருந்து நாம் ஒன்றை மட்டும் தெரிந்து கொள்ள முடிகிறது. அதாவது பிரபஞ்சம் ஆதியும், அந்தமும், இல்லாத எல்லையற்ற ஒன்று என்பதும், வெளியையும் காலத்தையும் கணக்கிட்டு வரையறுப்பது என்பது மனிதனால் முடியாதது என்பதுமாகும்.

ஏன் மனிதனால் முடியாது வான நூல் விஞ்ஞானிகள் அறிய முனைந்திருக்கும் முயற்சிகள் வீணானவையா? இல்லை. முயற்சிகள் வீணாகாது. ஓரளவுதான வெற்றி கிடைக்கும்.

காரணம், மனிதன் எல்லைகளுக்குட்பட்ட வெளியினாலும் காலத்தினாலும் உருவானவன் அதாவது மனிதன் நீளம், அகலம், உயரம் என்னும் மூன்று அளவுகளுக்கும், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலங்களுக்கும் உட்பட்டவன். அதாவது அவன் ஒரு பருப்பொருளுக்கான (matter) தன்மைகளைப் பெற்றுள்ள பருப்பொருள் பிராணி. அவனுக்குக் கிடைத்திருக்கும் மனத்தின் மூலம் ஐந்து இந்திரியங்களைக் கொண்டு அறிவை வளர்க்கிறான். மனிதனை ஆறவிவுப் பிராணியென்று சொல்வதுண்டு.

சில பூச்சி புழுக்கள், நத்தை, மண்புழு போன்றவை ஓரறிவுப் பிராணிகள், அவற்றிற்கு ஒரு கோடு போன்ற ஒரே திசையின் உணர்வு மட்டும் உண்டு. இன்னும் சில பிராணிகள் ஈரறிவு பெற்றவை. நீளமும், அகலமும், அதாவது பரப்பை மட்டும் உணரக் கூடியவை. பரப்பில் இயங்கக் கூடிய அறிவு மட்டும் பெற்றவை. மனிதனோ மூன்று அளவுகளையும் ஒரே சமயம் உணரக் கூடியவன். அதாவது உயரத்தையும் சேர்த்து கனம் அல்லது பருமனையும் உணரக் கூடியவன். இதனுடன் மூன்று காலங்களையும் சேர்த்து கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் - மனிதனை ஆறறிவுப் பிராணி என்று அழைக்கிறோம். ஆனால் ஒன்று, மனிதனால் ஒரே சமயம் ஒரு இடத்தில் தான் இருக்க முடியும். அதுபோன்று அவனால் நிகழ்காலத்தில் மட்டும் வாழ முடியும். இறந்த காலத்திற்குத் திரும்பிச் செல்லவோ அல்லது முன்கூட்டியே எதிர்காலத்திற்குப் போகவோ முடியாது. மனதால்

மட்டும் இறந்த காலத்தை நிறைவிற்குக் கொண்டு வரவும், வருங்காலத்தைக் கற்பனை செய்யவும் முடிகிறது.

எனினும் முக்காலம் அறிந்த ஞானிகள் - அதாவது நினைத்த மாத்திரத்தில் தம் உடலுடன் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற எல்லையற்ற காலத்தில் சஞ்சரிக்கக் கூடிய ஞானிகள் இருந்ததாகவும், அவர்களால் ஒரே சமயத்தில் வெவ்வேறு இடங்களில் - எல்லையற்ற வெளியில் உலவிக் கொண்டு திரியமுடிந்ததாகவும் நாம் புராணங்களில் படித்திருக்கிறோம்.

ஆனால் விஞ்ஞானக் கண் கொண்டு பார்த்தால், ஞானிகள் முப்பரிமாண உடல்படைத்தவர்களாயிருந்தால் எல்லையற்ற காலத்திலோ, வெளியிலோ உடலுடன் சஞ்சரித்திருக்க முடியாது என்றுதான் சொல்ல வேண்டும். உள்ளத்தால் சஞ்சரிப்பது வேறு. தவிர இன்றைய தொலைக்காட்சி கருவி போன்ற ஒரு இயந்திரத்தின் மூலம் ஒரே சமயத்தில் பல இடங்களிலும் சஞ்சரிப்பது வேறு. முப்பரிமாண உடலுடன் காலத்தையும் வெளியையும் கடந்து அப்பால் செல்ல முடியாது. அவ்வாறு செல்ல வேண்டுமானால், நான்கு பரிமாணங்கள் பெற்ற உயிரினமாக மாற வேண்டும். அந்த நான்காவது பரிமாணம் காலமாக இருக்கலாம். இன்று வரை அந்த நான்காவது பரிமாணம் கற்பனையில்தான் இருக்கிறது. விஞ்ஞான உண்மையாக வளரவில்லை. என்றாலும் ஆத்மீக உலகில் அது சாத்தியம் என்றும் கூறுகின்றனர். உடலோடு சம்பந்தமில்லாத ஆத்மாவைப் பற்றி விஞ்ஞானிகள் ஒப்புக் கொள்வதில்லை. பருப்பொருள் ஒன்றின் மூலமாகத் தான் வெளியையும், காலத்தையும் பற்றி பேச முடியும், உணர முடியும், அறிய முடியும் என்கிறது விஞ்ஞானம்.

விஞ்ஞானிகளின் கூற்று இவ்வாறிருக்க. ஆத்மஞானிகள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

காலம், வெளி (Time, Space) அவற்றுள் தோன்றி இயங்கும் பருப்பொருள் (Matter) அநித்தியமானவை, நிரந்தரமானவையன்று. தோன்றி மறைந்து கொண்டிருக்கும் மாயத்தோற்றங்களேயன்று. மெய்யானவை அல்ல. எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட மெய்ப்பொருள் (Reality) பரம் பொருள் - பரமாத்மா - ஒன்றேதான் என்றைக்கும் நிலையான - ஆதியும் அந்தமும் இல்லாத மெய்ப்பொருள் ஆகும். அதை அறிவதைத்தான் அறிவு என்று சொல்ல வேண்டும், மெய்ஞ்ஞானம் என்று சொல்ல வேண்டும். இந்த மெய்ஞ்ஞானத்தை எவ்வாறு பெறுவது என்று கேட்டால், உள்முக தியானம், தவம் மூலமாக, உள்ளொளியின் உதயத்தின் மூலமாகவே, மெய்ஞ்ஞானம் பிரகாசிக்கும் என்கின்றனர் மெய்ஞ்ஞானிகள்.

விஞ்ஞானிகள் வெளி, காலம், பொருள் இவற்றின் நிலையற்ற, நிரந்தரமற்ற, அநித்திய தன்மையை ஒப்புக் கொண்டாலும் கருவிகளைக் கொண்டு ஆய்வு நடத்துவதன் மூலமே, தெளிவான மறுக்க முடியாத அறிவைப் பெற முடியும் என்று நம்பிச் செயல்படுகின்றனர். அம்முயற்சியில் வெற்றியும் காண்கின்றனர்.

உதாரணமாக விஞ்ஞானிகள் கூறும் வெளி, வெறும் சூன்யமே என்றாலும், அதை உணர்வதற்கு, அறிவதற்கு பருப்பொருள் இருக்க வேண்டும். விண்வெளியில் கோளங்கள் இருப்பதால்தான், வெளியைப் பற்றி நம்மால் உணர முடிகிறது. அறிய முடிகிறது. அதாவது வெளியில்லாமல் பொருள் இல்லை. பொருள் இல்லாமல் வெளியில்லை. வெளியும் பொருளும் இருப்பதால் தான் தூரம் அளக்கப்படுகிறது. அது போன்றே காலமும் - கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் என்று கூறுவதற்கு வெளியும் பொருளும்

இருப்பதால்தான், இருந்துதான் ஆக வேண்டும். வெளியும் பொருளும் இல்லையேல், நிகழ்ச்சியில்லை. நிகழ்ச்சி இல்லையேல் காலத்தை முன், பின், இந்த நொடி என்று கூறு இயலாது. எல்லாவற்றிக்கும் மேலாக, நாம் மனிதர்கள். மற்றுமுள்ள எல்லா பொருட்களும் முப்பரிமாண அமைப்பிலான பொருட்களே. பொருட்கள் இல்லாவிட்டால் பஞ்ச இந்திரியங்கள் வேலை செய்யாது, சிந்தனை தோன்றாது. நித்தியமான மெய்ப்பொருளைப் பற்றி சிந்திப்பதற்கும் அநித்தியமான, அழியும் தன்மையான உடல் தேவை, அதனுள்ளிருக்கும் மனம் தேவை.

இன்றைய மேற்கத்திய வானவெளி விஞ்ஞானிகள் விண்கோள்களின் ஆய்வுக்காக பூமியிலிருந்து விண்கலங்களை வானில் செலுத்துகின்றனர். அந்த விண்கலத்தில் மிகவும் சக்திவாய்ந்த தொலை நோக்கிகளையும் பொருத்துவதால், இதுவரை கண்டிராத அளவு மிக தூரத்து தூசிபோல் தோன்றும் கோளங்களையும் பார்க்கின்றனர். இதன் பயனாக எல்லைகாண முடியாத வெளியும் எல்லைக்குள் வந்து விடுகிறது. காலமும் எல்லையற்ற, ஆதியும் அந்தமும் இல்லாத தன்மையை இழந்து விட்டதாக வானவெளி விஞ்ஞானிகள் சிலர் கருதுகின்றனர்.

பிரபஞ்சமே ஒருவித உருண்டை அல்லது முட்டை வடிவத்தில் இருப்பதாகவும், அதனால் ஒளிக்கிரணங்களும் நேர் கோட்டில் செல்லாமல் வளைந்து சென்று புறப்பட்ட இடங்களுக்கே போய்ச் சேர்வதாகவும் நவீன வான விஞ்ஞானிகளில் சிலர் கருதுகின்றனர். அது போன்றே காலத்தைப் பற்றியும் சிலர் கருதுகின்றனர். நாம் காலத்தைப் பற்றி பேசும்போது காலச்சக்கரம் என்றுதான் சொல்கிறோம். வரலாற்று நிகழ்ச்சிகள் நேர்கோட்டில் செல்வதைப் போல் சென்று திரும்பாமல் மறைகின்றன என்பது தான் பொதுவான கருத்து. எனினும் காலத்தை சக்கரத்தோடு ஒப்பிடும்போது வரலாற்று நிகழ்ச்சிகள் திரும்பவும் நிகழ்கின்றன (History repeats itself) என்பதற்கிணங்க காலமும் வட்டமான பாதையில் செல்கிறது என்றும் ஒரு சாரர் கருகின்றனர்.

முதலில், காலம் என்பதுதான் என்ன என்பதைப் பற்றி தெரிந்து கொள்வது நன்று. காலத்தை நாம் எவ்வாறு உணர முடிகிறது? காலை, நண்பகல், மாலை என்றும் இன்று, நேற்று, நாளை என்றும் பேசுகிறோம். நம் பூமி சூரியனைச் சுற்றிவருவதன் காரணமாகத்தான் காலத்தை நாம் மேற்கூறியவாறு குறிப்பிடுகிறோம். நாள் என்றும், வாரம் என்றும், மாதம் என்றும் ஆண்டு என்றும் காலத்தைக் கணித்துக் கொண்டோம்.

வெளி (space) ஒரு பொருள் அன்று. வெளியை உணர்வதற்கு பொருள் (matter) தேவைப்படுகின்றது. வெறும் சூன்யத்தை (empty space) உணர்வது கடினம். நிகழ்ந்து முடிந்த நிகழ்ச்சிகள் திரும்ப நிகழ்வதில்லை. அதே மாதிரி நிகழ்ச்சிகள் நிகழலாம். ஆனால் அதே நிகழ்ச்சி திரும்ப நிகழ்வதில்லை.

ஒரு குழந்தை வளர்ந்து வாலிபனாகி, தந்தையாகி, வயோதிகனாகி மரணமெய்தி மறைகிறது என்றாலும், அவருடைய குழந்தை திரும்பவும் வளர்ந்து வயோதிகம் அடைந்து மறைகிறது. அதாவது எப்பொழுதும் குழந்தைகள் பிறக்கின்றன, வளர்கின்றன. வயோதிகர்களும் மறைந்து கொண்டே இருக்கின்றனர். எல்லா உயிர்களும் தோன்றி வளர்ந்து முதுமை எய்தி மறைந்து கொண்டிருக்கினறன, என்றாலும் தனிப்பட்ட அதே உயிர் திரும்பத் தோன்றா விட்டாலும் அந்த இனம் தோன்றி வளர்ந்து வாழ்கிறது. இதை நாம் காலச் சக்கரத்தின் வேலை அல்லது இயக்கம் என்கிறோம். தனிப்பட்ட உயிர்தான், நான் என்னும் அகம்படைத்த உயிர்தான் வயதாகி மறைகிறது. ஆனால் அந்த இனம் மறைவதில்லை, அது என்றைக்கும் இளமையுடன் வாழ்கிறது.

சீனாவிலும், ஐரோப்பாவிலும் நிலவியதைப் போன்று மனித வரலாற்றை தேதி ஆண்டு தவறாமல் எழுதும் வழக்கம் இந்தியாவில் அவ்வளவு முக்கியத்துவம் பெறவில்லை . அதற்குப் பதிலாக மனித இலட்சியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததால் இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்கள் எழுதிச் சென்றனர். அதாவது மனித வாழ்க்கைக்கு வழிகாட்டி உதவும் அறநெறிகளை எடுத்துக் கூறுவதற்கான லட்சியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். அதன் காரணமாக மரணத்திற்குப் பின் மன்னர்களானாலும் அவர்களுடைய உடலைச் சாம்பலாக்கி பஞ்சபூதங்களோடு சேர்த்து நதிகளில் கரைத்துவிட்டனர். மன்னர்களின் நினைவாக சிவன் கோவில் கட்டி என்றும் அழியாது எங்கும் நிறைந்திருக்கும் இறை சக்தியை வழிபட்டனர். அதாவது காலச்சக்கரம் விட்டுச் செல்லும் நிகழ்ச்சி தளும்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் காலம் சுழன்று மனித இனத்தின் முன்னேற்றத்திற்கு உதவும் நிலையான இலட்சியங்களைப் போற்றி அவைகளை எடுத்துரைக்கும் காவியங்களையே வரலாற்றை விட சிறப்பாகக் கருதினர்.

ஐரோப்பாவில் வரலாறு எழுதினவர்கள் காலத்தை நேர் கோட்டில் திரும்பாமல் செல்லும் நிகழ்ச்சிகளுக்கு மட்டும் முக்கியத்தவம் கொடுத்தனர். ஆனால் கிரேக்க நாகரிக காலத்தில் பிளேட்டோ, அரிசுடாட்டில் காலத்தில் கூட காலம் சுழன்று செல்வதாகவும் அவர்கள் காலத்து கருத்துகள், தத்துவங்கள் முன்னமேயே பன்முறை மனித இதயத்தில் தோன்றி வளர்ந்தவைகள்தான் என்றும் நம்பினார்கள். ஒரு விதத்தில் இந்த நம்பிக்கை இந்துக்களின் காலச் சக்கர கருத்தோடு ஒத்திருக்கிறது. ஐரோப்பியர்களின் காலத்தின் இயக்கம் திரும்பாத நேர்கோட்டில்தான் செல்கிறது என்னும் கருத்து புனித ஆகசுடின் அவர்கள் காலத்தில் இருந்துதான் வரலாறு எழுதுபவர்களின் ஒப்புதல் பெற்றது.

ஆனால் அரிசுடாட்டிலும் பிளேட்டோவும் நம்பியது “ஒவ்வொரு கலையும், விஞ்ஞானமும், தத்துவமும் அதற்கு முன்னர் பன்முறை தோன்றி வளர்ந்து உச்சத்தை அடைந்து பின்னர் முற்றிலும் அழிந்து போனவைகளே, அவர்களின் கருத்துகளும், எண்ணங்களும் அவர்களுடைய முன்னோர்கள் கண்டறிந்த உண்மைகளின் புதிய மறுகண்டுபிடிப்புகளே" என்பதாகும். இவர்களுடைய பிரபஞ்சத்தின் காலத்தைப் பற்றிய கருத்தோடு நம் நாட்டு புராணங்களில் வரும் நான்கு யுகங்களும் அவை

நீண்டகாலம் கழித்து பிரளயம் மூலமாக அழிந்து திரும்பவும் புதிதாக மலர்ந்து வளர்ந்து முதிர்ச்சிக்குப் பின் முற்றிலும் அழிந்து மறுபடியும் புதிதாகத் தோன்றுவது காலச்சக்கரத்தின் வேலை என்னும் கருத்து ஒத்திருப்பதைப் பார்க்கலாம்.

இந்தியாவில் நம் முன்னோர்கள் - இன்றைய வான விஞ்ஞானிகளுக்கு இருப்பது போன்று எவ்வித கருவிகளும் இல்லாமல் காலத்தை நான்கு யுகங்களாகப் பிரித்து ஒவ்வொரு யுகத்திற்கும் இத்தனை ஆண்டுகள் என்று கணித்தும் இருக்கிறார்கள். இன்று நாம் வாழ்வது கலியுகத்தில், இந்தக் கலியுகம் வெள்ளிக்கிழமை, பிப்ரவரி மாதம் 18ந் தேதி கி.மு. 3102ம் ஆண்டு தொடங்கினதாகவும், அதன் முழுக் காலம் 432,000 ஆண்டுகள் என்றும் கூறியிருக்கின்றனர். நம்யுகமாகிய கலியுகத்தில் அறநெறி வாழ்க்கை கெட்டு வருவதற்குக் காரணமே அதன் குறுகிய ஆண்டு காலமே என்றும் சொல்கிறார்கள். கலியுகத்திற்கு முந்தின யுகம் திரேதாயுகம். அதன் காலம் கலியுகத்தை விட இரண்டு மடங்கு என்றும், அதனால் தர்மமும் இரு மடங்கு மேலாக இருக்கும் என்றும் கூறுகிறார்கள். அதற்கு முந்தின யுகமாகிய துவாபர யுகத்தின் காலம் கலியுகத்தைப் போல் மூன்று மடங்கு அதாவது 12,96,000 ஆண்டுகள் நீடிக்கும் என்றும், அதற்கும் முந்தின கிருத யுகம் 17,28,000 ஆண்டுகள் ஆக மொத்தம் 43,20,000 அதாவது கலியுகத்தைப் போல் பத்து மடங்கு ஆண்டுகள்

என்றும் கணித்திருக்கிறார்கள். இந்த நான்கு யுகங்களும் சேர்ந்த ஒரு வட்டத்தை மகா யுகம் என்றும் பெயரிட்டு, இம்மாதிரி ஆயிரம் மகா யுகங்கள் கொண்டது பிரம்மாவுக்கு ஒரு பகல் என்றும், இதை ஒரு கல்பம் என்றும் கூறுவர். பிரம்மாவுக்குக் கீழே உள்ள தேவர்களின் கணக்கில் இந்தக் காலம் பன்னிராண்டாயிரம் தேவ ஆண்டுகள். இந்தக் காலத்தின் ஆரம்பம், எல்லாம் கடந்த இறை சக்தியின் விழிப்பு அல்லது தோற்றத்தின் அல்லது இயக்கத்தின் முதல் நாள் என்றும் இந்த ஆயிர மகாயுகங்கள் முடிந்து பிரளயம் மூலமாக எல்லா படைப்புகளும் வானத்தின் கோடிக்கணக்கான கோளங்களும், அங்கு தோன்றின எல்லா உயிரினங்களும் படைப்புகளும் அழிந்து திரும்ப இறை சக்தியோடு ரூபமற்று இணைந்து விடுகிறது என்றும் திரும்ப அச்சக்தி தோன்றி இயங்குவதற்கான ஆயத்த காலம் பிரம்மாவின் ஒரு இரவு என்றும் பிரம்மாவின் ஒரு பகல் எத்தனை ஆண்டு காலமோ அதுவே தான் பிரம்மாவின் இரவு காலமும் என்று கணக்கிட்டு கூறியிருக்கின்றனர்.

மனித யுகங்களான நான்கு யுகங்களில் முதலில் வருவது கிருத யுகம் அல்லது சத்திய யுகம் ஆகும். இந்த யுகத்தில், பசு நான்கு கால்களால் ஸ்திரமாக நிற்பதைப் போன்று மக்கள் தர்ம நெறி வழுவாது வாழ்க்கை நடத்துவர். இவ்வாறு ஒவ்வொரு யுகத்திலும் ஒரு கால் இழந்து ஸ்திரம் குறைந்து போய் கலியுகத்தில் ஒரே காலில் நின்று தள்ளாடுவது போன்று மக்கள் தறிகெட்டு வாழ்க்கை நடத்துவர்.

கலியுகத்து மக்கள் எவ்வாறு கீழ்த்தரமான வாழ்க்கை நடத்துவார்கள் என்பதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட விஷ்ணு புராணத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. கலியுகத்தில் ஒருவருக்குள்ள சொத்தை வைத்துத்தான் அவருக்கு மரியாதையும் பாராட்டும் கிடைக்கும். சொத்தின் அடிப்படையில்தான் ஒழுக்கம், பண்பு மதிக்கப்படும். கணவன் மனைவி உறவு உடலுறவால் கிடைக்கும் சிற்றின்பம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும், வாழ்க்கையில் வெற்றிக்கு பொய்மை ஒன்றே உதவும் என்று செயல்படுவது. காமம், அதாவது சிற்றின்பம் ஒன்றே இன்பத்தில் சிறந்தது, இன்பத்திற்கு அது ஒன்றே வழி என்று நம்பி செயல்படுவது, வெளி ஆடம்பரத்தில் வாழ்வதை ஆத்மீக இன்பத்தோடு குழப்பி வாழ்வது. இந்த நிலைமை சமூகத்தில் தலை தூக்குமானால் நாம் கலியுகத்தில் இருக்கிறோம் என்று உறுதியாகச் சொல்லலாம்.

நம் முன்னோர்கள், எதை வைத்து முன் கூறியவாறு காலத்தைப் பற்றியும் மக்களின் வாழ்க்கை முறைகளைப் பற்றியும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கற்பனை செய்து புராணக் கதைகளாக நமக்கு விட்டுச் சென்றிருக்கின்றனர்? நாம் இவற்றை நம்பலாம், நம்பாமல் வெறும் குப்பைகளென உதறித் தள்ளலாம். ஆனால் மேற்கு நாடுகளில் இப்பொழுது சக்திவாய்ந்த தொலைநோக்குக் கருவிகளின் உதவியால் விண்வெளியைப் பற்றியும், காலத்தைப் பற்றியும் ஆய்வு நடத்திக் கொண்டிருக்கும் விஞ்ஞானிகள் நம் இந்தியாவில் முன்னோர்கள் புராணக் கதைகளின் மூலமாக ஓரளவு ஒரே வித முடிவுக்கு வந்திருப்பது - பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்பாகவே, என்பதை அறிந்து வியப்பெய்தி பாராட்டியிருக்கின்றனர். நம் முன்னோர்கள், பருப்பொருள் ஆய்வு விஞ்ஞானிகளாக இல்லாமல் ஆழ்ந்த யோகாப்பியாசம் மூலமாக, தியானத்தின் மூலமாக உள் ஒளி பெற்று பிரபஞ்சத்தைப் பற்றியும் இறைசக்தியின் இயக்கத்தைப் பற்றியும் கூறியிருக்கும் உண்மைகளையும் தத்துவங்களையும் புரிந்து கொள்வதற்குப் பணிவும், மனப்பக்குவமும் மிக அவசியம் என்பதை கூறத் தேவையில்லை. நம் ஞானிகளின் நோக்கம்,

இயற்கையை வென்று நாகரிகத்தில் முன்னேற வேண்டும் என்பதன்று. இயற்கையை ரசித்து, இயற்கையோடு இயைந்து இறை சக்தியின் அருள் மூலமாக உயர் மனிதனாக,

லட்சிய வாழ்க்கை நடத்தி முன்னேற வேண்டும் என்பதே. அன்பு, சத்தியம், தியாகம், கருணை போன்ற பண்புகளை வளர்த்து அகங்காரத்தைக் குறைத்து தெய்வீக நிலைக்கு மனித சமுதாயம் உயர வேண்டும் என்பதே. யோகிகள், ஞானிகள் மட்டுமல்ல, சாதாரண மக்களும் லட்சிய வாழ்க்கை நடத்தி உயர் மனிதர்களாக முன்னேற வேண்டும் என்பதற்காகவே அவர்களுக்கும் புரியுமாறு தத்துவங்களை புராணக் கதைகளின் மூலம் எளிதாக்கி உதவியிருக்கின்றனர்.

காலத்தோடு மரணத்திற்கு தொடர்பு உண்டு. ஒருவர் மரணம் அடைந்தால், அவரைக் காலமானார் என்கிறோம். மரண தேவனான யமனைக் காலன் என்றும் கூறுவதுண்டு. “கட்டி அணைத்திடும் பெண்டிரும் மக்களும் காலத்தச்சன் வெட்டி முறித்து மரம் போலே வீழ்த்தி விட்டால் கொட்டி முழக்கி அழுவார் கோடிண்டு மயானம் குறுகுமட்டும் அப்பால் எட்டி அடி வைப்பாருண்டோ இறைவா கச்சி ஏகம்பனே இது போன்றே ... "காலன் வருமுன்னே கண் பஞ்சடையுமுன்னே" செய்ய வேண்டிய நற்காரியங்களை காலம் தாழ்த்தாது செய்து முடிக்க வேண்டும் என்பது இந்தக் கவிதையின் நோக்கம். இம்மாதிரி கவிதைகள் தமிழிலும், வடமொழியிலும் ஏராளம் வழக்கத்திலிருக்கின்றன. ஒரு தனி மனிதரின் (உயிர்களின்) உலக வாழ்க்கையின் முடிவைத்தான் மரணம் என்கிறோம்.

ஒவ்வொருவரும் (எல்லா உயிர்களும் பொருட்களும் தான் ) எங்கிருந்து இந்த உலகத்திற்கு வந்தோம் என்பது யாருக்கும் தெரியாது. எங்கே போகிறோம் - மரணத்திற்குப் பின் என்பதும் தெரியாது. ஒருவர் பிறப்பதற்கு அவருடைய பெற்றோர் ப்ப காரணமாகையால் பெற்றோர்களிடமிருந்து வந்தோம் என்று சொல்லலாம். ஆனால் அந்த பெற்றோர்கள், அவர்களுடைய பெற்றோர்கள் - மூதாதையர் எங்கிருந்து வந்தார்கள் என்னும் கேள்வி எழும்போது, பதில் என்ன? ஒரே பதில் பஞ்ச பூதங்களிலிருந்து என்பது தான். அடுத்து மரணத்திற்குப் பின்னர் எங்கே போகிறோம்? இந்தக் கேள்விக்குப் பதில் பஞ்சபூதங்களோடு ஐக்கியமாகிவிடுகிறோம் என்றால் தர்க்கத்திற்கு இடமில்லை. ஆனால் ஒருவடைய ஆத்மா அழிவதில்லை. தன் தன் கருமபலனுக்கு ஏற்ப மறுபிறவி எடுக்கிறது என்றம் கூறுகிறார்கள். இது தர்க்கத்திற்கு உரியது. ஒருவர் மரணத்திற்குப் பின் மறுபிறவி எடுக்கிறாரோ இல்லையோ என்பது தெரியாவிட்டாலும் மனித இனம் அழியாமல் வெகுகாலம் உலகத்தில் வாழ்கிறது. ஆனால் மகாப் பிரளயம் வரும் பொழுது எல்லா உயிர்களும், படைப்புகளும் முற்றிலும் அழிந்து மறைந்து போவதாகப் புராணங்கள் சொல்கின்றன.

நாம் இந்த இயந்திரகாலத்து, விஞ்ஞானயுகத்து, மனிதர்கள். புராணக் கதைகளிலிருந்து கற்றுக் கொள்வது என்ன? நாம் இந்தப் பிரபஞ்சத்தின் வெளியையும், காலத்தையும் ஓரளவாவது சிந்தித்து, உணர்ந்து, நம் ஆயுளையும் ஆற்றலையும் ஒப்பிட்டு எவ்வளவு அல்பம், ஒரு நொடிக்கும் குறைந்தது நம் வாழ்நாள், ஒரு தூசிக்கும் சிறியது நம் உலகம், என்பதை சிந்திப் போமானால் நம் அகங்காரம் குறையும், குறுகிய சுயநலம் குறையும், பணிவு ஏற்படும். நம் அறிவும், அன்பும் மலர்ந்து மகிழ்ச்சிகரமான வாழ்க்கை நடத்துவதற்கு பணிவு மிக மிக அவசியம். எல்லாம் வல்லோம் என்னும் அகங்காரத்தைக் கட்டுப்படுத்தி மனித சமுதாயம் முழுவதும் பரஸ்பரம் அன்பு செலுத்தி மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை நடத்துவதற்கு பிரபஞ்சசக்தியின் எல்லையையும் வெளியையும், காலத்தையும் சற்றேனும் சிந்தித்து செயல்பட்டால் போதும். நாம் தேவர்களாகி விடலாம்.

எல்லையற்ற வெளியிலும் காலத்திலும் இயங்கும் பிரபஞ்ச சக்தியின் அபார ஆற்றலை சிந்தித்தும் உணர்ந்தும் பரவசப்படுவதுதான் பக்தியாக மாறுகிறது. தன் வாழ்க்கை நொடிப்பொழுதே என்றாலும் கோடானு கோடி உயிரினங்களைக் கண்டு மனிதன் ரசித்து இறைசக்தியின் லீலையைக் கண்டு வியந்து பாராட்டி போற்றுவதுதான் பக்தியின்

அஸ்திவாரம். இந்த அஸ்திவாரத்தின் மேலேயே தத்துவவிசாரங்கள், சமய இலக்கியங்கள், நீதிநெறி புகட்டும் புராணக் கதைகள், கலைகள் யாவும் தோன்றி வளர்ந்தன. எனினும் மனிதனுடைய இயல்பான அச்சமும், குறுகிய சுயநலமும், பொறாமையும் கூடவே வளர்ந்து உயர் மனிதனாவதற்கும் பதில் தடைகளாகவே இன்னும் இருந்து வருகின்றன. அதனால் துன்பங்களையும், அழிவையும் வளர்க்கிறான். வாழ்க்கை இனிமையாக இல்லாமல் துக்க சாகரம் என்னும் அளவிற்கு கசப்பாக மாறி விடுகிறது. அதனால் ஆத்ம விசாரங்கள் மூலம் கிடைக்கும் ஞானம் பயனற்று போய், இந்த உடம்பு தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்று கூறி இனி பிறவாமலிருக்க வழிகளைத் தேடுகிறான். ஆனால் மனிதன் தானே விரும்பி இந்த மண்ணுலகில் தோன்றவில்லை. பிரபஞ்ச இறைசக்தியின், பராசக்தியின் விருப்பத்தினால் தான் மனிதன் தோன்றியிருக்கிறான். இவனால் வாழ்க்கைச் சிக்கல்களையும் துக்கங்களையும் கண்டு பயந்து ஓடவும் முடியாது. இவன் தனக்குக் கிடைத்திருக்கும் அன்பையும் அறிவாற்றலையும் பயன்படுத்திப் பொது நலனைக் கருதி குறுகிய சுயநலங்களைக் கைவிட்டு வாழக் கற்றுக் கொண்டால் உலக வாழ்க்கையை சொர்க்க வாழ்க்கையாக மாற்றிக் கொள்ளலாம்.

பிரபஞ்சத்தின் காலத்தையும் வெளியையும் பற்றிப் பேசும் போது நாம் விஞ்ஞான மேதை ஐன்சுடைன் கண்டுபிடித்த கோளங்களின் மெய் உறவு நிலையைப் பற்றிய தத்துவத்தைப் பற்றி குறிப்பிடத்தான் வேண்டும். ரிலேட்டிவிட்டியைப் பற்றி புரிந்து கொண்டவர்கள் விஞ்ஞான உலகத்தில் மிகமிகச் சிலரே தான் இருக்கிறார்கள் என்பார்கள். ஆகையால் நம்மால் மிகப் பொதுப்படையாகக்கூட சாடையாக-இங்கிதமாக் கூட புரிந்து கொள்ள முடியாத விஷயமாகும் ரிலேட்டிவிட்டி தத்துவம். ரிலேட்டிவிட்டி பிரகாரம், காலம், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூன்று நிலையையும் கடந்து முழுமையாக ஒரே நிலையில் இருக்கும் நிலை எல்லையற்ற பிரபஞ்சத்தின் நிலையைச் சேர்ந்தது என்பதாகும். இதனால் நாம் கற்றுக் கொள்ள வேண்டியது குறுகிய சுயநலத்தை வளர்க்கும் அகங்காரத்தைக் கைவிட்டு பணிவு நிறைந்த பொதுநலப் பணிகளில் ஈடுபடுவதன் மூலமே அற்ப நேர மனித வாழ்க்கையை இனிமையாக்க முடியும் என்னும் நம்பிக்கைதான்.

குறிப்பு : 43, 44 கட்டுரைகளுக்கு ஆதாரம்: The Significance of Indian Art and Civilization - by Heinrisch Zimmer, Boston, U.S.A.

**நூலாசிரியர் பற்றி**

இந்நூலாசிரியர் அ. பெருமாள் மதுரை மாவட்டம், பெரியகுளம் பகுதி உத்தமபாளையம் அருகிலுள்ள அம்மாபட்டியில் 1915-ல் பிறந்தார். உத்தமபாளையத்தில் மேல்நிலைக்கல்வி முடித்த பின்னர் தேவாரம் திரு. பாரதிநாராயணசாமி அவர்களின் ஆலோசனைக்கேற்ப தேசீய மகாகவி ரவீந்திரநாத் தாகூரின் சாந்திநிகேதனத்திற்கு ஓவியம் பயில்வதற்காக 1933-ல் சென்றார்.

அங்கு புகழ் பெற்ற ஓவியப் பேரரசன் **நந்தலால் போஸ்** அவர்களிடம் 1938 வரை ஓவியம் பயின்ற பின்னர் சாந்தி நிகேதனத்திலேயே ஓவிய ஆசிரியரானார்.

ஓவியப் பேராசான் நந்தலால் போஸ் அவர்களுடன் பெய்ஸ்பூரிலும், ஹரிபுராவிலும் நடைபெற்ற காங்கிரஸ் மகா சபையின் மாநாட்டு பந்தல் அலங்காரப் பணிகளிலும், பின்னர் அவர் மேற்கொண்ட பரோடாவிலுள்ள கீர்த்தி மந்திரில் சுவர் வண்ண ஓவியம் தீட்டுவதிலும், இந்தியக் குடியரசின் அரசியல் நிர்ணய சட்டத்தின் கையெழுத்துப் பிரதிகளில் வடிவழகு செய்யும் பணிகளிலும் உதவியாளனாகப் பணியாற்றித் தம் குருவின் அன்பையும் ஆசீர்வாதத்தையும் பெற்றார்.

1970-72-ல் ஜப்பான் சென்று அந்நாட்டின் கலை நிலையை அறிந்தார். அங்கு **கியோட்டோ, ஒஸாகா, டோக்கியோ** போன்ற பெருநகரங்களில் தாம் வரைந்த ஓவியங்களின் கண்காட்சியை நடத்தினார். இந்தியாவிலும் **சாந்தி நிகேதனம், ஆமதாபாத்** போன்ற இடங்களில் கண்காட்சிகள் நடத்தினார். பின்னர் பாண்டிச்சேரி **ஸ்ரீ அரவிந்தர் ஆசிரம கலை அரங்கில்** 1996 டிசம்பர் 25லிருந்து 1997 ஜனவரி 5 வரை தம் ஓவியக்கண்காட்சியை நடத்தினார். மேலும், 1999 ஆகஸ்டு 4 - 8 தேதிகளில் சென்னையிலுள்ள தமிழ்நாடு **லலித்கலா அகாடெமி** கலை அரங்கில் தம் ஓவியங்களை காட்சியில் வைத்தார். அச்சமயம் அவர் வாழ்க்கை வரலாறு “Taking his Art to the Tribals" என்ற நூல் ஒன்றும் ஆங்கிலத்தில் வெளியானது.

பம்பாய் இயற்கை வரலாற்று மாமன்றத்தில் (The Bombay Natural History Society) நீண்டகாலமாக அங்கம் வகிக்கும் இவர் பறவைகளை கூர்ந்து கவனித்து அவைகளின் வாழ்க்கை வரலாற்று இரகசியங்களை அறிவதில் தன்னையே மறப்பவர்.

ஓவியக்கலையை மட்டுமே வாழ்வில் மணம்புரிந்த இவர் வானொலியிலும் பயனுள்ள பல உரைகளை நிகழ்த்தியுள்ளார். தெளிவான சிந்தனை, திட்டவட்டமான சமுதாய நோக்கு, எளிமையான வாழ்க்கை , உயர்ந்த அனுபவங்கள் இவரது சிறப்பியல்புகள்.